# தமிழரசு

ஜூலை 1-31, 2000, ரூ10





# கலைஞர் ஆட்சியில்
# 46,600 கல்நார் வீடுகள்



**சென்னை, மதுரை, திருச்சி, கோவை, சேலம், திருநெல்வேலி ஆகிய மாநகராட்சிப் பகுதிகளில் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் மூலம்...**

| | |
|---|---|
| 1998 - 1999<br>1999 - 2000 | ரூ.26.5 கோடி செலவில் 20,600 கல்நார் கூரை வீடுகள் |
| 2000 - 2001 | ரூ.39 கோடி செலவில் 26,000 கல்நார் கூரை வீடுகள் |

# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2031
ஆனி–ஆடி
ஜூலை 1–31, 2000
மலர் : 32 இதழ் : 1 & 2
விலை ரூ.10

முதல் மற்றும் கடைசிப் பக்க அட்டையில்
டைடல் பார்க் திறப்பு விழா

இந்த இதழில்...

❖ டைடல் பார்க் — 2
❖ அறிவு சார்ந்த பொருளாதாரத்தின் ஒளிவீசும் புதிய ஆலயம் — 5
❖ நமது வருங்காலத்தின் சின்னம் — 9
❖ தகவல் தொழில்நுட்பவியலில் தமிழகம் முன்னணி — 12
❖ கணினியில் தமிழகம் முன்னணி — 16
❖ திருக்குறள் விரிவுரை — 17
❖ உருது அகாடமி — 25
❖ பக்கிங்காம் கால்வாய் புனரமைப்பு — 30
❖ அறிவுமதி கவிதை — 32
❖ தமிழக கிராமங்கள் அனைத்துக்கும் மின்வசதி — 33
❖ பெருந்துறையில் சிப்காட் தொழில் வளர்ச்சி மையம் — 35
❖ காக்கை குறிப்புகள் — 36
❖ சாலை விபத்தைத் தடுப்போம் — 38
❖ ஒரு இடந்தேடி — 39
❖ சமய நல்லிணக்கப் பாவலர் — 47
❖ கல்வியில் அக்கறை காட்டுகிற அரசு — 49
❖ தமிழ்நாட்டில் 5000 இளைஞர் மன்றங்கள் — 51
❖ தேசிய நீர்வளக்குழுக் கூட்டம் — 53
❖ தீ விபத்தும் தீயணைப்புத்துறையும் — 57
❖ தீ காயங்களுக்கு நவீன சிகிச்சை — 58
❖ கீரைகள் சொல்லும் மருத்துவம் — 60
❖ வனத்துறையின் பணிகள் — 62
❖ தமிழ்நாடு எரிசக்தி நிறுவனம் — 63
❖ கதவைத் தட்டும் வாய்ப்பு-II — 65
❖ தேசிய மக்கள்தொகைக் குழு — 71
❖ ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டச் செக்கு — 75
❖ அரசு ஆணைகள் — 78

## திருக்குறள்

*பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டஞ்*
*சால மிகுத்துப் பெயின்.*

மயில் இறகாக இருந்தாலும்கூட அதிகமாக ஏற்றப்பட்டால் வண்டியின் அச்சு முறிகின்ற அளவுக்கு அதற்குப் பலம் வந்துவிடும்.

– கலைஞரின் திருக்குறள் உரையிலிருந்து...

# டைடல் பார்க்

# ஆசியாவின் மிகப்பெரிய மென்பொருள் பூங்கா

சென்னை தரமணியில் தமிழக அரசு நிறுவனங்களான டிட்கோவும், எல்காட்டும் இணைந்து 338 கோடி ரூபாயில் உலகிலேயே மூன்றாவது பெரிய மென்பொருள் தொழில்நுட்பப் பூங்காவை உருவாக்கியுள்ளன. இது ஆசியாவிலேயே முதலாவது மிகப்பெரிய மென்பொருள் பூங்காவாகும்.

டைடல் பூங்காவின் கட்டிடம் தரைத்தளத்துடன் 12 மேல் தளங்களையும், கார்களை நிறுத்திட 2 தரை கீழ்த்தளங்களையும் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. அலுவலக உபயோகத்திற்கான இடங்கள், சிறிய, நடுத்தர மற்றும் பெரிய அளவிலான அலுவலகங்களின் வசதிக்கேற்ப அமைக்கப்பட்டுள்ளது.

பல்வேறு தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களின் தேவைக்கேற்ப 4,000 சதுர அடியிலிருந்து 90,000 சதுர அடிவரை ஒரே தளத்தில் இடவசதிகள் அமைந்துள்ளன. அகன்ற இடவசதிகளும், சிறந்த தகவல் தொடர்பு வசதிகள், தடையற்ற மின்வசதி (ஜெனரேட்டர் வசதிகளுடன்) ஆகியவைகளும் அமைந்துள்ளன.

வி.எஸ்.என்.எல்., எஸ்.டி.பி.டி. ஆகிய நிறுவனங்கள் தகவல் தொடர்புக்கு தேவையான அலைவரிசைகளை இங்கு நிறுவி உள்ளன. இதற்கான தனியாக எர்த் ஸ்டேஷன் எனப்படும் தகவல் தொடர்பு நிலையம் அமைக்கப்பட்டு உள்ளது. இந்தியாவிலேயே இது போன்று எங்கும் அமைக்கப்படவில்லை.

இப்பூங்காவில் வணிக வங்கிகள், கடைகள், சுகாதார மையங்கள், மாநாட்டுக் கூடங்கள், வணிக



மையங்கள், சிற்றுண்டிச் சாலைகள், நீச்சல் குளம், டென்னிஸ் விளையாட்டு மைதானம், விருந்தினர் இல்லங்கள் ஆகியவைகளும் அமைக்கப்பட்டுள்ளன. தகவல் தொடர்புத்துறை (டாட்) இப்பூங்காவிற்கான நவீன வசதிகளுடன் தனித்தன்மை வாய்ந்த தொலைபேசி நிலையத்தை அமைத்து டைடலில் நுகர்வோர் கோரிக்கை வைத்தவுடன் தொலைபேசி இணைப்புகளை உடனுக்குடன் அளித்திடுகிறது.

செய்திகளை அனுப்புவதற்குத் தேவையான அனைத்து நவீன வசதிகளும் இங்கு அமைக்கப்படுகின்றன. தரை வழியாகவும், செயற்கைக்கோள் வழியாகவும், நுண்ணலைகள் மூலமாகவும் செய்திகளை பரிமாறிக் கொள்வதற்கு ஏற்ப வசதிகள் இக்கட்டிடத்தின் மேல் தளத்தில் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

அனைத்து வகையிலும் நவீன தேவைகளை ஈடுசெய்வதற்கு ஏற்ப டைடல் பூங்கா கட்டிட வசதிகளைக் கொண்டுள்ளது.

இந்த மென்பொருள் பூங்கா ரூ.338 கோடி முதலீட்டில் உருவாக்கப்பட்டு இருக்கிறது. மொத்தம் 15 ஏக்கர் நிலப்பரப்பில் 12.8 இலட்சம் சதுர அடியில் இதற்கான கட்டிடம் எழுப்பப்பட்டு இருக்கிறது. மொத்தம் 14 மாடிகள் கொண்டதாக இக்கட்டிடம் வானுயர உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த மென்பொருள் பூங்காவில் 29 நிறுவனங்கள் சுமார் 7.2 இலட்சம் சதுர அடி நிலத்தை தங்களுக்காக பெற்றுக்கொண்டு இருக்கின்றன.

வெளிநாட்டு நிறுவனங்கள், இந்திய நிறுவனங்கள் தமிழக நிறுவனங்கள் டைடல் பார்க்கில் இடம் பெற்று உள்ளன.

சென்னையில் மையப்பகுதியில் விமான நிலையத்தில் இருந்து அருகே அமைந்து உள்ளதால் வெளிநாட்டு நிறுவனங்கள் டைடல் பார்க்கினை தேடி வந்துள்ளன.

உலக அளவில் சென்னை நகரின் முக்கியத்துவத்தை மேலும் உயர்த்தும் வகையில் டைடல் பார்க் விளங்கும் என்றால் மிகையாகாது. இது முதல்வர் கலைஞரின் சாதனை பட்டியலில் ஒரு மைல்கல் என்பதும் மறுக்க முடியாததாகும்.

இந்த டைடல் பூங்காவின் திறப்பு விழா 4-7-2000 அன்று மாலை 7 மணியளவில் நடைபெற்றது.

விழாவிற்கு வந்த பிரதமர், முதல்வர் மற்றும் அமைச்சர்கள் பூங்காவின் எதிரே அமைக்கப்பட்டுள்ள மேடைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு நின்று பூங்காவின் எழிற்தோற்றத்தை கண்டு வியந்தனர்.



கண்ணாடியினால் இழைக்கப் பெற்ற, கலை நயத்துடன் அமைக்கப்பெற்ற மேடையில் விழா நடை பெற்றது.

விழாவில் தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு.ஏ.பி. முத்துசாமி அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்.

டிட்கோ தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு. ஆர். கோபாலன் பூங்காவின் தனிச் சிறப்புக்களை விளக்கி புள்ளி விவரங்களை எடுத்துக் காட்டி திட்ட விளக்க உரை நிகழ்த்தினார்.

இதனைத் தொடர்ந்து பிரதமர் திரு.வாஜ்பாய் அவர்களுக்கு முதல்வர் அவர்கள் பொன்னாடை அணிவித்து நினைவுப் பரிசு வழங்கி கௌரவித்தார்.

பின்னர் – விழாவிற்கு வருகை தந்த சிறப்பு விருந்தினர்கள்

அனைவருக்கும் நினைவுப் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டது.

மென்பொருள் தொழில்நுட்பத் துறையில் தமிழகத்தை உலக அரங்கிற்கே முன்மாதிரி மாநிலமாக விளங்கிடச் செய்திட அல்லும் பகலும் அயராது பாடுபட்டு வரும் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் விழாவிற்கு தலைமையேற்று ஆங்கிலத்தில் உரை நிகழ்த்தினார்.

முதல்வரது உரையைத் தொடர்ந்து மத்திய சுற்றுச் சூழல் மற்றும் வனவள அமைச்சர் திரு.டி.ஆர். பாலு வாழ்த்துரை வழங்கினார்.




முக்கிய ஒப்பந்ததாரர்கள் மற்றும் அலுவலர்களுக்கு செயலாக்கச் சான்றிதழ்களை வழங்கி மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு.பிரமோத் மகாஜன் உரை நிகழ்த்தினார்.

அதனைத் தொடர்ந்து மத்திய அமைச்சர் திரு. ரங்கராஜன் குமாரமங்கலம் வாழ்த்துரை வழங்கினார்.

***“இந்த மென்பொருள் பூங்கா ரூ.338 கோடி முதலீட்டில் உருவாக்கப்பட்டு இருக்கிறது. மொத்தம் 15 ஏக்கர் நிலப்பரப்பில் 12.8 இலட்சம் சதுர அடியில் இதற்கான கட்டிடம் எழுப்பப்பட்டு இருக்கிறது. மொத்தம் 14 மாடிகள் கொண்டதாக இக்கட்டிடம் வானுயர உருவாக்கப்பட்டுள்ளது. இந்த மென்பொருள் பூங்காவில் 29 நிறுவனங்கள் சுமார் 7.2 இலட்சம் சதுர அடி நிலத்தை தங்களுக்காக பெற்றுக்கொண்டு இருக்கின்றன.”***

STPI, VSNL மற்றும் DoT ஆகிய நிறுவனங்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கி மத்திய தகவல் தொடர்புத் துறை அமைச்சர் திரு. ராம்விலாஸ் பஸ்வான் உரையாற்றினார்.

முக்கிய ஒதுக்கீடுதாரர்களான சத்யம் இன்போவே நிறுவனத்தின் மேலாண் இயக்குநர் திரு. ஆர்.ராமராஜ், பென்டா சாப்ட் நிறுவன தலைவர் திரு. வி. சந்திரசேகர் மற்றும் அல்காடெல் நிறுவனம் ஆகியோருக்கு ஒதுக்கீட்டு ஆவணங்களை ஒப்படைத்து உரை நிகழ்த்தினார், மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. முரசொலி மாறன் அவர்கள்.

இதனைத் தொடர்ந்து இத்திட்டம் உருவான விதம். இதனை செயற்படுத்திட தமிழக அரசும், முதல்வர் கலைஞர் அவர்களும் மேற்கொண்ட முனைப்பான முயற்சிகள், தகவல் தொழில்நுட்பத்தில் முன்னணி மாநிலமாக தமிழகம் விளங்கிடும் பாங்கு ஆகியனவற்றை தெளிவாக எடுத்தியம்பிடும் ‘லேசர் ஷோ’ எனப்படும் வீடியோ கிரைப்படம் டைடல் பூங்கா ஒளி வெள்ளம் பாய்ச்சி பார்ப்போரை பிரமிப்பிலும், களிப்பிலும் ஆழ்த்தியது.

நிறைவாக ‘டைடல்’ தகவல் தொழில்நுட்பப் பூங்காவை பிரதமர் திரு. வாஜ்பாய் அவர்கள் தொடங்கிவைத்தார்.

பிரதமர் மேடையில் நின்று பொத்தானை அழுத்தியதும் 12 தளங்களைக் கொண்ட ‘டைடல்’ பூங்கா ஒளி வெள்ளம் பாய்ச்சி பார்ப்போரை பிரமிப்பிலும், களிப்பிலும் ஆழ்த்தியது.

இதனைத் தொடர்ந்து பிரதமர் திரு. வாஜ்பாய் அவர்கள் சிறப்புரையாற்றினார்.

பிரதமரின் சிறப்புரையைத் தொடர்ந்து எல்காட் தலைவர் திரு. ஞானதேசிகன் நன்றியுரையாற்றினார்.

• • •

# அறிவுசார்ந்த பொருளாதாரத்தின் ஒளிவீசும் புதிய ஆலயம்

# டைடல் பார்க்

☐ **பிரதமர் வாஜ்பாய்**

தமிழ்நாடு வளர்ச்சிப் பாதையில் மாபெரும் கட்டத்தை அடையும் இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க நாளில் நான் இங்கே வந்திருந்து பங்கு கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்தியாவின் தகவல் தொழில்நுட்பப் பேரலை உலகத்தின் தகவல் தொழில்நுட்பமெனும் அனைத்துக் கடற்கரைகளிலும் வீசத் தொடங்கி விட்டதற்கு அடையாளமாக இந்த டைடல் பார்க் திகழ்கிறது. இந்த மாபெரும் சாதனையைப் படைத்திருக்கும் தமிழ்நாடு அரசை என் மனமாரப் பாராட்டி வாழ்த்துகிறேன்.

பெங்களூரிலும், ஐதராபாத்திலும் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்களை நான் பார்த்திருக்கிறேன். மும்பை, பூனா, கல்கத்தா, திருவனந்தபுரம், டெல்லி மற்றும் மொகாலி போன்ற இடங்களிலும் இதுபோன்ற பூங்காக்கள் உருவாகியிருக்கின்றன; அல்லது உருவாகி வருகின்றன என்று அறிகின்றேன். நாம் அனைவரும் இணைந்து உருவாக்கி வரும் நவீன இந்தியாவின் ஒளிவீசும் சின்னங்களாக புதிய பொருளாதாரத்தின் இந்தப் படைப்புகள் திகழ்கின்றன.

"பாரத தேசம்" என்னும் கவிதையில் மகாகவி சுப்ரமணியபாரதி "பாரத தேசம் என்று பெயர் சொல்லுவார்" என பாடியிருக்கிறார். விடுதலைக்குப் பிறகு இந்தியா என்ன செய்யும் என்று சிந்தித்த பாரதி,

**"ஆயுதம் செய்வோம் – நல்ல காகிதம் செய்வோம்**
**ஆலைகள் வைப்போம் கல்விச் சாலைகள் வைப்போம்**
**ஓயுதல் செய்யோம் தலை சாயுதல் செய்யோம்**
**உண்மைகள் சொல்வோம் பல வன்மைகள் செய்வோம்"**

– என்று சொல்லியிருக்கிறார்.



இந்தியா எதற்கும் இளைத்ததல்ல என எடுத்துகாட்டும் 'டைடல் பார்க்'

தகவல் தொழில்நுட்பம் உருவாகும் என்று பாரதி கனவு கூட கண்டிருக்க மாட்டார். ஆனால் 21ஆம் நூற்றாண்டைய உலகில் இந்தியா எந்த நாட்டிற்கும் இளைத்ததல்ல என்பதை எடுத்துக்காட்டும் டைடல் பார்க் போன்ற திட்டங்கள் பாரதியின் தொலைநோக்குப் பார்வையை எடுத்துக்காட்டுகின்றன.

தகவல் தொழில்நுட்பம், தகவல் தொடர்பு மற்றும் உயிரியல் தொழில்நுட்பம் போன்ற அறிவினால் உந்தப்படும் பொருளாதாரமும், சமுதாயமும் புதிய நூற்றாண்டின் தொடக்கமாக அமைந்துள்ளன. இவற்றில் சமீபத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம், மானுட சாதனையின் வலிமை மிக்க சாதனையாக அமைந்திருக்கிறது.

கடந்த திங்களில் இரு பெரிய அறிவியல் அறிவிப்புகளை நாம் கண்டோம். ஒன்று, செவ்வாய்க் கோளில் தண்ணீர் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது; மற்றொன்று, மனித உயிரணுக்களைப் பற்றிய புதிய கண்டுபிடிப்பு. இவற்றையெல்லாம் இணைத்துப் பார்த்தால் மனித இனம், இந்த அண்டத்திற்கு உள்ளேயும், வெளியேயும் மிகப் பெரிய சாதனைகளைப் படைக்க இருப்பது புரிகிறது.

விஞ்ஞான ரீதியாகவும், தொழில்நுட்ப ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் பல முனைகளிலும் ஏற்பட்டுவரும் மனிதஇன வளர்ச்சி எனும் பந்தயத்தில் இந்தியாவின் இடம் முன்னணி இடமாக அமைந்திட

வேண்டும். அது பின்னிலை இடமாகவோ, நடு இடமாகவோ இருந்திடக் கூடாது. இதுவே நமது நோக்கம். இந்த நோக்கத்தை, நமது நம்பிக்கை, திறமை மற்றும் வளங்களின் உதவிகொண்டு நாம் வெற்றி கண்டாக வேண்டும்.

தகவல் தொழில்நுட்பத்தில் குறிப்பாக, மென்பொருள் வளர்ச்சியில் இந்தியா பெற்றுள்ள ஆற்றல் உலகம் முழுதும் ஏற்கெனவே அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சிலிக்கான் பள்ளத்தாக்கில் இந்திய தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களும், தொழில் முனைவோரும் தொடக்க காலத்தில் படைத்த சாதனைகள் மூலம் இது சாத்தியமாயிற்று. கடந்த சில ஆண்டுகளில் இந்தியாவிலேயே ஏராளமான வெற்றிச் சாதனைகள் உருவாக்கப்பட்டன; தமிழ்நாட்டிலும் பல வெற்றிச் சாதனைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

வேகமான பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையாக இருப்பது தகவல் தொழில்நுட்பம் என்பதால், அரசு தனது கொள்கை அறிவிப்புகளிலும், முன்னுரிமைகளிலும் தகவல் தொழில்நுட்பத்திற்கு முதலிடம் அளித்து வருகிறது. மத்திய அரசு கொண்டுள்ள இதே மாதிரியான அணுகுமுறையை மாநில அரசுகளும் கடைபிடித்து, சிலிக்கான் பள்ளத்தாக்கில் உள்ளதைப் போன்ற கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி வருகின்றன. நாம் அனைவரும் ஒன்றிணைந்து, இந்தியாவை உலகத் தரத்திலான மென்பொருள் வளர்ச்சிக்கு ஏற்ற இடமாக உருவாக்கிட முடியும்.

புதுடெல்லியிலும், சென்னையிலும் அணுகுமுறையும், முன்னேற்ற நடவடிக்கையும் ஒரேமாதிரியாக அமைந்து வருகின்றன என்பதற்கு எடுத்துக்காட்டாக இன்று திறந்து வைக்கப்படும் இந்த டைடல் பார்க் திகழ்கிறது.

குறுகிய காலத்தில் இந்தியா தகவல் தொழில்நுட்பத்தில் நிறைய சாதித்துள்ளது. எனினும், நம்மிடம் உள்ள முழு வளத்தையும் பயன்படுத்திக் கொள்ள இன்னும் நீண்டதூரம் நாம் செல்ல வேண்டியிருக்கிறது என்பதை நினைவில் கொள்ளவேண்டும். நமது பலம் அனைத்தையும் ஒன்று திரட்ட வேண்டும். வேகமாக நமது பலவீனங்களை வெற்றி கொள்ளவேண்டும். பல முனைகளிலும் ஒரே நேரத்தில் முறையான நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டாக வேண்டும்.

தொலைத்தொடர்பு கட்டமைப்பு வசதிகள் நமது நாட்டில் பலம் குன்றியவையாக உள்ளன. தொலைத் தொடர்புத் துறையில் அரசு பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. கடந்த ஆண்டு புதிய தொலைத்தொடர்பு கொள்கை அதன் தொடக்கமாக அமைந்தது. உலகத்தில் எந்த நாட்டிலும் காணமுடியாத அளவுக்கு தாராள மயமாக்கப்பட்ட இணையக் கொள்கை ஒன்றையும் நாம் அறிவித்துள்ளோம். இதனால் விளைந்து வரும் பலன்களை எல்லோராலும் அறிந்து கொள்ள முடியும். நாடு முழுதும் மிக வேகமாக இணையச் சேவைகள் பரவி வருகின்றன. இணையக் கட்டணங்களும் வெகுவாக குறைந்து வருகின்றன. எனினும், உலகத் தரத்திலான தொலைத் தொடர்பு மற்றும் இணையச் சாதனையை நாம் அடையவேண்டும் என்றால், நாம் பல பிரச்சினைகளைத் தீர்த்தாக வேண்டும் என்பதையும் நான் உணர்கிறேன்.

நிதியமைச்சர் யஷ்வந்த் சின்கா தலைமையில் அமைக்கப்பட்டுள்ள தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப இணைப்புக்குழு இந்தப் பிரச்சினைகளைப் பற்றி ஆலோசனை செய்து வருகிறது.

கடலுக்கடியில் அமைக்கப்படும் கண்ணாடி இழை வடத்தொடர்பு தனியார் மயமாக்கப்படக்கூடாது என்று தகவல் தொழில்நுட்பம் மற்றும் இணையத்தொழில் முனைவோர் வலியுறுத்தி வருகின்றனர். அரசு இந்தப் பிரச்சினையைப் பரிவோடு பரிசீலனை செய்யும்.



அதிவேக, அகன்ற இணைப்பு வசதிகள் போதுமான அளவுக்கு இல்லாமை தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக அமைந்துள்ளன. இந்தத் தேவையை அரசு உணர்ந்துள்ள தால், அதற்கென ஒரு நிலைக்குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. தொழில் முனைவோரும், நுகர்வோரும் அதில் பிரதிநிதித்துவம் பெறுவர். நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் மென்பொருள் தொழில்நுட்பப் பூங்காக்கள் நிறுவிட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதால், மாநில அரசுகளின் நிறுவனங் களுடன் இணைந்து அவற்றை ஏற்படுத்துவதற்கான திட்டத்தை தொலைத் தொடர்புத்துறை உருவாக்கி வருகிறது.

இந்த ஆண்டு அக்டோபர் மாதத்திற்குள் தொலைத் தொடர்புத்துறையை ஒரு நிறுவனமாக அமைத்திடுவது என்று அரசு ஏற்கெனவே முடிவு செய்துள்ளது. அரசு மேற்கொண்டு வரும் பல்வேறு நடவடிக்கைகளின் காரணமாக இந்தியாவில் விரைவில் உலகத் தரத்திலான தொலைத் தொடர்பு கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்பட்டு கட்டணங்களும் வெகுவாக குறைக்கப்படும் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

**மேம்படுத்தப்பட்ட தொலைத்தொடர்பு வசதி**

முதல்வர் திரு.மு.கருணாநிதி அவர்கள் சென்னைக்கும், தமிழ்நாட்டின் மற்ற பகுதிகளுக்கும் மேம்படுத்தப்பட்ட தொலைத் தொடர்பு வசதிகள் உருவாக்கப்படவேண்டுமென்று தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார். இந்தியாவின் மற்ற பகுதிகளின் தேவைகளைப் போலவே, இந்த மாநிலத்தின் தேவைகளும் தொலைத் தொடர்புத்துறை விரைவில் நிறுவனமாக மாற்றி அமைப்பதன் மூலம் நிறைவு செய்யப்படும் என்று நான் உறுதி அளிக்கிறேன்.

நமது கவனத்தை ஈர்க்கும் இரண்டாவது பிரச்சினை தகவல் தொழில்நுட்பமும், அது சார்ந்த கல்வியும் ஆகும். 2008ஆம் ஆண்டுக்குள் 50 பில்லியன் அமெரிக்க டாலருக்கு ஈடான மென்பொருள் ஏற்றுமதியை உயர்த்திட வேண்டுமென்று நாம் இலக்கினை நிர்ணயம் செய்துள்ளோம். மிக உயரிய ஊதியத்தில் இரண்டு மில்லியன் நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை இந்த ஏற்றுமதி இலக்கு உருவாக்கும். அத்துடன் இந்தியாவின் தகவல் தொழில்நுட்பத்துறைக்குப் பயிற்சி பெற்ற ஏராளமான மனித வளம் தேவைப்படும். இதை ஈடு செய்வதற்கு தகவல் தொழில்நுட்பம் மற்றும் அது சார்ந்த கல்விக்கான வசதிகளை மிக விரிவான அளவில் நாம் உருவாக்கிட வேண்டியுள்ளது.

கட்டமைப்பு வசதிகள், ஆசிரியப் பயிற்சி, மாணவர்களுக்கான கல்விக்கடன் ஆகியவற்றில் விரைவான சீர்திருத்தங்களை நாம் செய்தாக வேண்டும். கல்விச் சீர்திருத்தங்கள் பற்றிய பிரச்சினைகளைத் தீர்ப்பதில் மத்திய அரசும், மாநில அரசுகளும் கல்வி நிறுவனங்களும் ஈடுபடவேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

மரபு சார்ந்த தொழில்களைப் புதுப்பித்து நவீன மயப்படுத்துவதில் தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்த வேண்டும் என்பது மூன்றாவதாக நமது கவனத்தை ஈர்த்திடும் பிரச்சினையாகும். இந்தியாவின் மென்பொருள் வளர்ச்சி பெருமளவுக்கு ஏற்றுமதியையே இலக்காகக் கொண்டிருக்கிறது. உள்நாட்டுப் பொருளாதாரம் மென்பொருள் வளர்ச்சியை குறைந்த அளவிற்கே பயன்படுத்தி வருகிறது என்பது வருத்தம் தரக்கூடியதாகும். இந்த ஏற்றத்தாழ்வான நிலை தகவல் தொழில்நுட்பம் நமது நாட்டில் நின்று, நிலைத்து வளர்வதற்கு ஊறு விளைவிக்கக்கூடும்.

"செங்கல் பொருளாதாரத்தையும்", "கணிப்பொறி பொருளாதாரத்தையும்'' சம அளவில் கலந்து பயன்படுத்துவதன் மூலமாகத்தான் இந்தியாவின் தேசிய இலக்குகளை எய்திட முடியும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

பாரம்பரிய பொருளாதாரத்தில் உயரிய திறனையும், உற்பத்தியையும் பெருக்குவதற்கே புதிய பொருளாதாரம் நமக்குத் தேவைப்படுகிறது. பாரம்பரிய பொருளாதாரத்தை புதுப்பிப்பதன் மூலம் புதிய பொருளாதாரத்திற்கான உள்நாட்டுத் தேவைகளை நாம் நிறைவு செய்ய முடியும்.

அரசுத் துறைகள், சேவை நிறுவனங்கள், வங்கிகள் மற்றும் அரசுத்துறை நிறுவனங்கள் ஆகியவற்றில் விரைவாகவும், விரிவாகவும் தகவல் தொழில்நுட்பத்தை நாம் பயன்படுத்துவது உள்நாட்டு பொருளாதாரத்தை உயர்த்திட உதவும். தகவல் தொழில்நுட்பத்திற்கான சட்டம் நிறைவேற்றப்பட்டு விட்டதால் அதன்மூலம் மின்னியல் வாணிப முறைகளுக்குப் பாதுகாப்புகள் உருவாக்கப்பட்டு இருக்கின்றன. எனவே, கொள்முதல் அனைத்தும் விரைவில் இணையத்தின் மூலமாகவே நடைபெறவேண்டும் என்று நான் விரும்புகிறேன். இதன் மூலம் ஒளிவு மறைவற்ற தன்மை, திறமை, பொறுப்பு ஆகியவை மேம்படும். மேலும், அரசிற்குக் கணிசமான அளவிற்கு சேமிப்பையும் உருவாக்கிடும்.

**உலகிலேயே மிகப்பழமையான மிகச் சிறந்த மொழி தமிழ்**

இந்திய மொழிகளில் தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவது என்பது நமது உடனடி கவனத்தை ஈர்த்திடும் நான்காவது பகுதியாகும். நமது மொழிகள் ஒவ்வொன்றும் பாரம்பரியமான அறிவு மற்றும் மதிப்பீடுகள் நிறைந்த களஞ்சியங்களாக விளங்குகின்றன. எடுத்துக்காட்டாக, தமிழ்மொழி உலகிலேயே மிகப் பழமையான, மிகச்சிறந்த மொழிகளில் ஒன்றாகும். தலைமுறை தலைமுறையாக சமுதாய மற்றும் கலாச்சார மரபுகளை இந்திய மொழிகள் தாங்கி வருகின்றன. எனவே, அறிவைத் தாங்கி வரும் சாதனமாக ஆங்கில மொழி மட்டுமே இருக்குமானால், தகவல் தொழில்நுட்பத்தால் உருவாக்கப்பட்டு வரும் அறிவுப் புரட்சியின் முழுப்பயனையும் இந்தியா அடைந்துவிட முடியாது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

தகவல் தொழில்நுட்பத்தை தாய்மொழியின் மூலம் வளர்த்திட வேண்டும் என்பதில் தமிழ்நாடு அரசு மற்ற மாநில அரசுகளைக் காட்டிலும் நிறைய நடவடிக்கைகளை மேற்கொண்டு இருக்கிறது என்பதை அறிய நான் மகிழ்ச்சி அடைகிறேன். அனைத்து மாநிலங்களும் தமது இலக்கிய, கலாச்சார மற்றும் கலை மரபுகளைச் சொந்த மொழிகளின் மூலம் தகவல் தொழில்நுட்பத்தில் உருவாக்கி படைப்பதில் தமிழ்நாட்டைப் பின்பற்றவேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

தகவல் தொழில்நுட்பம் அறிந்தவர்கள், தகவல் தொழில்நுட்பம் அறியாதவர்கள் என்று இந்திய சமுதாயத்தில் ஏற்பட்டுவரும் இடைவெளி எனக்குக் கவலையைத் தருகிறது. அதற்கு "டிஜிட்டல் இடைவெளி" என்று பெயர். அதைக் கண்டுபிடித்து சரி செய்வதற்கான



நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ளாவிட்டால், ஏற்கெனவே நம்மிடையே உள்ள சமுதாய மற்றும் பொருளாதார வேறுபாடுகள் ஆழம் அடைவதற்கான அச்சுறுத்தல்கள் உள்ளன.

தகவல் தொழில்நுட்பம் என்பது நகர்ப்புறத்தில் உள்ள ஆங்கிலம் பேசுவோருக்கு மட்டுமல்ல; கிராமப்புறங்களில் வாழும் ஏழை எளியோர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மலைசாதியினர் மற்றும் தாழ்த்தப்பட்டோருக்கு அதிகாரம் வழங்குதல், சமூகநீதி, பொருளாதார முன்னேற்றம் போன்றவற்றிற்கான சக்தி வாய்ந்த சாதனமாக தகவல் தொழில்நுட்பம் உருவாகிடவேண்டும்.

ஒவ்வொரு இந்தியனும் எங்கிருந்தாலும், என்ன செய்து கொண்டிருந்தாலும், அவனுடைய வாழ்க்கையை இணையமும், அது தொடர்பான தொழில்நுட்பங்களும் மற்றும் சேவைகளும், அடுத்து வரும் ஐந்தில் இருந்து பத்து ஆண்டுகளுக்குள் சென்றடைவதை காண நான் பெரிதும் விரும்புகிறேன்.

நமது விவசாயிகள், கைவினைஞர்கள், சிறு வணிகர்கள் மற்றும் சாதாரண சாமானிய மக்கள் பெரிதும் பயனடையும் வகையில் தகவல் தொழில்நுட்ப சேவைகள் அமைவதற்கான உத்திகளை நமது விஞ்ஞானிகளும், வல்லுநர்களும், தொழில்முனைவோரும் உருவாக்கிட வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

இந்திய மொழிகளில் இணையத்தில் கல்வி, வாணிபம் போன்ற உள்ளடக்கங்களை உருவாக்க வேண்டிய அவசரத் தேவை ஏற்பட்டுள்ளது. எஸ்.டி.டி. பூத்களை போலவே இணைய மையங்கள் நாடெங்கிலும் உருவாக்கப்பட்டு, அவற்றின் மூலம் சாமானியர்கள் இந்திய மொழிகளிலேயே இ-மெயில் அனுப்புவதற்கும், பெறுவதற்குமான வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று நான் விரும்புகிறேன். இணைய மையங்கள் மூலம் அரசு, வங்கிகள் மற்றும் நிறுவனங்கள் வழங்கிடும் வசதிகள் எல்லோரையும் சென்றடைய வேண்டும்.

வேளாண்மை, தொழில், கல்வி, சுகாதார பாதுகாப்பு மற்றும் சமுதாயத்தின் பல முனைகளில் தமிழ்நாடு கண்டுள்ள வளர்ச்சி எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை தருகிறது. வேகமாக முன்னேற வேண்டும் என்ற புதிய உத்வேகம், புதிய கண்ணோட்டம், புதிய சிந்தனை இங்கே உருவாகி இருப்பதை என்னால் காண முடிகிறது. இந்த முயற்சியில், இந்த மாநிலத்திற்குத் தன்னால் இயன்ற வகையில் அனைத்து உதவிகளையும் செய்ய மத்திய அரசு விரும்புகிறது.

தமிழக மக்களின் நீண்டநாள் கோரிக்கையான சேதுசமுத்திரம் திட்டத்தை நான் அறிவேன். அந்தத் திட்டத்தை மேற்கொள்வதென்று தேசிய ஜனநாயக கூட்டணியின் தேர்தல் அறிக்கையில் நாங்கள் உறுதி அளித்திருக்கிறோம். இந்த உறுதியை நிறைவேற்றுவதற்கான பணி விரைவில் தொடங்கப்படும் என்று இந்த மாநிலத்து மக்களுக்கு நான் உறுதியளிக்கிறேன்.

அறிவு சார்ந்த பொருளாதாரத்தின் ஒளிவீசும் புதிய ஆலயமாக இந்த டைடல் பார்க்கை உருவாக்கியுள்ள டிட்கோ, எல்காட் ஆகிய தமிழ்நாடு அரசு நிறுவனங்களை நான் பாராட்டுகிறேன். மிகப்பெரிய ஆலயங்களுக்குப் புகழ்பெற்றது தமிழ்நாடு என்பதை நாம் அறிவோம். மற்றொரு ஆலயமாக டைடல் பார்க் இன்று உருவாகியிருக்கிறது. மேலும், அறிவு சார்ந்த பொருளாதாரத்தின் படைப்பு என்பதால் இந்த டைடல் பார்க் கலைமகளும், அலைமகளும் சேர்ந்திருக்கும் இடம் எனக் கொள்ளலாம். இந்த டைடல் பார்க்கை உருவாக்குவதற்கு அரும்பாடுபட்டவர்கள், இந்த டைடல் பார்க்கில் பணியாற்றி தமிழ்நாட்டிற்கும், இந்தியாவிற்கும் செல்வத்தையும், செல்வாக்கையும் சேர்த்திட இருப்பவர்கள் ஆகிய அனைவருக்கும் கலைமகள், அலைமகள் ஆகிய இருவரின் ஆசி நிரம்ப உண்டு.

***– சென்னை – தரமணியில் டைடல் மென்பொருள் பூங்காவினை 4–7–2000 அன்று திறந்துவைத்து பிரதமர் திரு. வாஜ்பாய் அவர்கள் ஆற்றிய உரை.***

• • •

# டைடல் பார்க்

## நமது வருங்காலத்தின் சின்னமாக திகழும் தகவல் தொழில்நுட்பத்தின் உலகத் தரம் வாய்ந்த வசதிகளை கொண்டது

## - முதலமைச்சர் கலைஞர்

நாம் தகவல் தொடர்பு காலத்தில் வாழ்கிறோம். இக்காலத்தில் இதனையே ‘‘அறிவு’’ எனலாம். இது வேறு எதனையும்விட மேம்பட்டது. நமது வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திட வல்லது. அறிவு வளர்ச்சி சார்ந்த தொழிலுக்கு, தகவல் தொழில்நுட்பம் ஒரு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகும்; நமது வருங்காலத்தின் சின்னமாகவும் இது திகழ்கிறது. நமது பிரதமர் அவர்களின் சொற்களில் கூற வேண்டுமெனில், தகவல் தொழில்நுட்பம் என்பது “இந்தியாவின் எதிர்காலம்” எனப்படும்.

டைடல் பார்க் இந்தியாவிலேயே புத்தம்புது வசதிகளைக் (Most sophisticated facility) கொண்டுள்ள மிகப்பெரிய நிறுவனமாகும். தகவல் தொழில்நுட்பவியல் தொழில்களின் தேவைகளை நிறைவு செய்யக்கூடிய உலகத் தரம் வாய்ந்த வசதிகளை இது பெற்றுள்ளது. கால நிர்ணயம், செலவு மதிப்பீடு ஆகியவற்றைக் கடக்காத அளவில் உரிய காலத்தில் கட்டி முடிக்கப்பட்டுச் சாதனை படைக்கப்பட்டுள்ளது.

டைடல் பார்க் முக்கிய நவீன அம்சங்கள் பலவற்றைக் கொண்டுள்ளது. நிறுவு திறனில் 50 விழுக்காடு அளவு அனல் மின்சாரத்தைச் சேமித்து வைக்கும் மிகச்சிறந்த தொழில்நுட்பம் இங்கு அமைக்கப்பட்டுள்ளது. அனல் மின்சாரத்தைச் சேமிக்கும் இம்முறை பிரான்ஸ், ஜப்பான் ஆகிய நாடுகளை அடுத்து உலகின் மூன்றாவது பெரிய திட்டமாக இங்கு நிறுவப்பட்டுள்ளது. இம்முறை இந்தியாவிலேயே முதன்முறையாக இங்கு அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

பிரமிப்பூட்டுகின்ற இவ்வரும் பணியை நிறைவேற்றி முடிப்பதில் பங்குகொண்ட பல்வேறு அமைப்புகளையும், வல்லுநர்கள், பணியாளர்கள் ஒவ்வொருவரையும் என் உளமாரப் பாராட்டுகிறேன். நமது தகவல் தொழில்நுட்பவியல் வரலாற்றில் இன்று நடைபெறும் இத்திறப்பு விழா நிகழ்ச்சி ஒரு முக்கிய மைல் கல்லாகும்.

இந்த மாபெரும் நிறுவனத்தினை நாட்டிற்கு அர்ப்பணிப்பதற்கும், இந்நிகழ்ச்சியைச் சிறப்பிப்பதற்கும் நமது பிரதமர் அவர்களும், அவரது அமைச்சர் பெருமக்களும் இங்கு வருகை தந்திருப்பது நமக்குப் பெருமிதம் அளிக்கிறது.

அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு, திரு. வாஜ்பாய் அவர்கள் என்னுடைய நீண்டகால நண்பர்; ஒரு நல்ல நண்பர். இவர் பல்வேறு ஆற்றல்களுடன் மிளிர்பவர். ஓர் அரசியல் மேதை; சிறந்த கவிஞர்; சொல்லாற்றல் மிகுந்தவர். இவை அனைத்தையும்விட, சிறுபான்மையினர் ஆயினும், பெரும்பான்மையினர் ஆயினும் அவர்கள் அனைவரிடமும் அன்பும் பற்றும் கொண்டுள்ள ஒரு மிகச்சிறந்த மனிதநேயப் பண்பாளர். மதச்சார்பற்ற தன்மை மிகுந்த தலைவர் இவர்.

தேசிய ஜனநாயகக் கூட்டணியில் நான் இடம் பெற்றிருப்பதனால் மட்டும் இதனைக் கூறவில்லை; நமது பிரதமரிடம் தொடர்ந்து நன்மதிப்பும், பேரன்பும் செலுத்தி வருகிறவன் நான்.

இவர் உண்மையிலேயே வியந்து போற்றுதற்குரிய பிரதமர். ஆகையால், டைடல் பார்க் வளாகத்தினை திறப்பதற்காக இவர் இங்கு வருகை தந்திருப்பது இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சிக்கு மதிப்பையும், பெருமையையும், சிறப்பையும், புகழையும் மேலும் உயர்த்துகிறது.

தமிழகத்தில் தகவல் தொழில்நுட்பவியல் தொழில்களை வளம்பெறச் செய்வதிலும், வளர்ப்பதிலும், மாநில அரசு கொண்டுள்ள பொறுப்புணர்வை வெளிப்படுத்திடும் ஒரு சான்றாக ஒளிவீசுகிறது டைடல். ஒரு பேருருவச் சிலைபோல உயர்ந்துள்ள டைடல், வான்பரப்பையும் விஞ்சி நிற்கிறது. இதுபோலவே, தமிழகம் தகவல் தொழில்நுட்பவியலில் இதர மாநிலங்கள் அனைத்தையும் மிக விரைவில் வென்றுநிற்கும் என்பதில் உறுதி கொண்டுள்ளோம்.

தொடக்க நிலையிலேயே இந்த டைடல் பார்க் மிகச் சிறந்த வெற்றி பெற்றுள்ளதால், வெகுவிரைவில்

சென்னையில் இரண்டாவது டைடல் பார்க் திட்டத்தைச் செயல்படுத்திட நாங்கள் கருதியுள்ளோம்.




தமிழகத்தில் தகவல் தொழில் நுட்பவியல் தொழில் சிறப்பான வளர்ச்சி கண்டுள்ளது. ஹார்வார்டு பல்கலைக் கழகத்தின் அறிக்கை கூறுவதுபோல, தமிழகம் மிகவும் காலம் தாழ்ந்து இந்தியத் தகவல் தொழில்நுட்பப் புரட்சியில் ஈடுபட்ட போதிலும், தி.மு.கழக அரசின் நான்கு ஆண்டுகாலச் சீரிய முயற்சிகளால் இங்குத் தகவல் தொழில்நுட்பவியல் மிகச்சிறப்பான முறையில் வளர்ச்சி கண்டுள்ளது.

1995–96இல் 34 மென்பொருள் தொழில் பிரிவுகள் மட்டுமே தமிழகத்தில் இருந்தன. அவற்றின் மூலம் செய்யப்பட்ட ஏற்றுமதி மதிப்பு வெறும் ரூ.37 கோடிதான்.

1996–97க்குப் பின் இதில் மிக வேகமான வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

31–3–2000 தேதியளவில் மென்தொழில் பிரிவுகளின் எண்ணிக்கை 600க்கு மேல் உயர்ந்துள்ளது. 1999–2000 ஆண்டில் ஏற்றுமதி செய்யப்பட்ட மென்பொருள்களின் மதிப்பும் 1,914 கோடி ரூபாய் அளவுக்கு உயர்ந்தது.

அமெரிக்காவில் உள்ள ஹார்வார்டு பல்கலைக்கழகம் அண்மையில், 1999 அக்டோபரில் மேற்கொண்ட ஆய்வின் மூலமாக, தமிழ்நாடு இந்தியாவில் ஒரு மாபெரும் தகவல் தொழில்நுட்ப மாநிலமாக உருவெடுத்து வருகிறது எனக் கணித்துள்ளது. ஹார்வார்டு பல்கலைக்கழக ஆய்வு "இந்தியாவிலேயே முதலாவதாக மட்டுமல்ல; மனித சமுதாயத்தில் பாதிபேர் வாழ்கின்ற ஆசிய கண்டத்தின் நுழைவு வாயிலாகத் தமிழ்நாடு ஏன் ஆகக்கூடாது?" என்றும் கேட்டுள்ளது.

இந்தியாவிலேயே திறமைசாலிகளின் மிகப்பெரிய உறைவிடம் என்றும், அறிவு செறிந்தோரின் இருப்பிடம் என்றும் புகழ் பெற்றுள்ள தமிழகம், உலக அளவில் மேலும் உயர்ந்து பெருமைகள் பெற்றிட எங்களது அரசு பல்வேறு முயற்சிகளையும் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

சிறந்த ஆட்சியை வழங்குவதில் எங்களது அரசு உறுதி கொண்டுள்ளது. இதன் விளைவாக, எங்களது கட்டமைப்பு வசதிகள், மனித ஆற்றல்கள், செயலாற்றும் பண்புகள் அனைத்தும் மிகச் சிறந்த முறையில் அமைந்துள்ளன.

- தமிழகத்தில் தகவல் தொழில்நுட்பம் விரைவாகவும், நாட்டிற்குப் பயன்தரத்தக்க வகையிலும் வளர்ச்சி அடைவதை உறுதி செய்திட பல்வேறு முயற்சிகளை நாங்கள் மேற்கொண்டு வருகிறோம்.

- தகவல் தொழில்நுட்பத்திற்குத் தனி கொள்கை வகுத்த முதல் மாநிலம் தமிழகம். அத்துடன் முதலமைச்சரின் நேரடிப் பொறுப்பில் தகவல் தொழில்நுட்பத்திற்குத் தனி துறையை உருவாக்கிய முதல் மாநிலமும் தமிழகமே.

- மென்பொருள் தொழில் வல்லுநர்களை இந்தியாவின் பிற மாநிலங்களைவிட அதிக அளவில் கொண்டுள்ள மாநிலம் தமிழகம்தான்.

- 1998ஆம் ஆண்டில் நாஸ்காம் (NASSCOM) என்னும் அமைப்பு மேற்கொண்ட ஆய்வு, மென்பொருள் தொழில்களில் முதலீடு செய்வதற்கு இந்தியாவிலேயே சிறந்த இடம் சென்னையே என்று தெரிவிக்கிறது.

- இணையத்தின் மூலம் உலக அளவிலான தொடர்புகளைப் பெறுவதற்கு வசதியாக தமிழகத்தில் உயர் அலைவரிசையை உருவாக்குவதற்கும், கண்ணாடி இழை வடத்தினை (Optic Fibre Cables) அடிப்படையாகக் கொண்டு இணைய வசதிகளை ஏற்படுத்துவதற்கும் நாங்கள் ஊக்கமளித்து வருகிறோம். இத்தகைய முதல் திட்டத்திற்கான பணிகள் ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளன.

- நமது மக்களுக்கும், அரசுக்கும் இடையில் மகிழ்ச்சியான முறையிலும், பயன்தரத் தக்க வகையிலும், கருத்துப் பரிமாற்றங்கள் உருவாவதற்கு வழிவகுக்கும் வண்ணம், அரசின் சார்பில் பல கணினிமயத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. சான்றாக, நிலப்பதிவேடுகள், நில வரைபடங்கள், வட்டாட்சியர் அலுவலகங்கள், சார் பதிவாளர் அலுவலகங்கள், வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள், விற்பனை வரி அலுவலகங்கள், நகராட்சிப் பணிகள் ஆகியவைகளைக் குறிப்பிடலாம்.

- 2008ஆவது ஆண்டில், பள்ளியிலிருந்து வெளியேறும் அனைத்து மாணவர்களும் கணினிக் கல்வி பெற்றவர்களாக விளங்கிட வேண்டும் என நாங்கள் விரும்புகிறோம். இதன் முதல் நடவடிக்கையாக,

மாநிலம் முழுவதிலும் உள்ள 1,200 அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும் கணினி அறிவியல் கல்வியை வழங்கிடத் தொடங்கியுள்ளோம்.

- அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் அனைவருக்கும் கணினிக் கல்வி வழங்கும் மிகப் பெரிய திட்டம் ஒன்று இந்த ஆண்டில் தொடங்கப்படுகிறது.

- தமிழ்நாட்டில் தான் உயர் ஆற்றல் வாய்ந்த கணினித் திறன் (Largest Main Frame Computing Capacity) வல்லுநர்கள் அதிகம் உள்ளனர்.

- மல்டி மீடியா சாஃப்ட்வேர் அப்ளிகேஷன்ஸ் (Multimedia Software Applications) அதிகமாகத் தயாரிக்கப்படும் பெரிய மையமாக சென்னை வேகமாக உருவாகி வருகிறது.

- பழைய மாமல்லபுரம் சாலையில் உள்ள சிறுசேரி கிராமத்தில் ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா ஒன்று உருவாகி வருகிறது.

- தகவல் தொழில்நுட்பவியல் தொழில்கள் தமிழகம் முழுவதிலும் பரவலாக அமைக்கப்படுவதற்கு வசதியாக, மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலும் சர்வதேசப் புள்ளிவிவர இணைப்பு மையங்களை (International Data Links) நிறுவிட, இந்திய மென்பொருள் தொழில்நுட்பப் பூங்காவிற்கு (STPI) நாங்கள் நிதியுதவி வழங்குகிறோம். இதன் பயனாக இந்த ஆண்டின் முடிவிற்குள் மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம், திருநெல்வேலி ஆகிய நகரங்களில் இந்த வசதிகள் கிடைக்குமென எதிர்பார்க்கிறோம்.

- தகவல் தொழில்நுட்பத்தில் நமது நாட்டில் சிறந்து விளங்கும் முதல் மாநிலமாகவும், உலகின் தகவல் தொழில்நுட்ப அறிவு செறிந்தோரின் இருப்பிடமாகவும் தமிழகத்தை உருவாக்குவதற்கு எங்களது மாநில அரசு உறுதி கொண்டுள்ளது.

- இந்த எண்ணம் நிறைவேறிட, மத்திய அரசும், அதன் அமைச்சர் பெருமக்களும் தங்களது முழுமையான ஆதரவினை எங்களுக்கு வழங்குவார்கள் என நம்புகிறேன்.

- குறிப்பாக, பின்வரும் இனங்களின் மீது சாதகமான முடிவுகளை நாங்கள் எதிர்பார்க்கிறோம் :

1. தமிழகம் முழுவதும் சர்வதேச தகவல் தொடர்பு மையங்களை நிறுவுவதற்கு இந்திய மென்பொருள் தொழில்நுட்பப் பூங்காவிற்கு (STPI) ஊக்கமளித்திட வேண்டும்.

2. மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தினால், சென்னையில் "இந்திய தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மேலாண்மை நிறுவனம்" (Indian Institute of Information Technology and Management) என்னும் உயர்கல்வி அமைப்பினை விரைவில் நிறுவிட வேண்டும்.

3. வட்டார அளவிலான சமுதாயத் தகவல் மையங்களை (Block Level Community Information Centres) அமைத்திடும் மத்தியத் திட்டத்தின்கீழ் தமிழகத்தில் உள்ள வட்டங்கள் அனைத்திலும் இவற்றை நிறுவிட வேண்டும்.

4. கண்ணாடி இழை வடங்களை (Optic Fibre Cables) கண்டங்களுக்கிடையில் கடல் வழியாக அமைத்திடும்போது சென்னையை நுழைவு வாயிலாக அங்கீகாரம் செய்யவேண்டும்.

இறுதியாக, டைடல் பூங்காவில் இடம்பெறும் தகவல் தொழில்நுட்பவியல் நிறுவனங்களுக்கு என்னுடைய நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



தமிழகத்தில் தகவல் தொழில்நுட்பவியல் தொழில் எல்லா வகையிலும் வெற்றி களைக் குவித்திடவும், இத் தொழிலின் எதிர்காலம் மிகவும் ஒளிமயமாய் அமைந்திடவும் உளமார வாழ்த்துகிறேன்.

*– தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 4–7–2000 அன்று சென்னை தரமணியில் நடைபெற்ற டைடல் பார்க் தொடக்க விழாவில் ஆங்கிலத்தில் நிகழ்த்திய தலைமையுரையின் தமிழ் வடிவம்*

★ ★ ★

தமிழகத்தைப் பொருத்தமட்டில் தகவல் தொழில்நுட்பவியலில் முன்னோடியாகவும், பொருளாதாரத்தில் வெற்றி கண்டுள்ள மாநிலமாகவும் திகழ்கிறது.

- பெருகிவரும் வளமான தகவல் தொழில்நுட்பத் தொழிலால் ஏறத்தாழ **25** ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழில்நுட்ப வல்லுநர்கள் வேலைவாய்ப்பு பெறுகிறார்கள்.

- அமெரிக்காவைச் சேர்ந்த ஹார்வார்டு பல்கலைக்கழகம் அண்மையில் மேற்கொண்ட ஆய்வில், தமிழ்நாடு குறுகிய காலத்தில் இந்தியாவிலேயே மிகப் பெரிய தகவல் தொழில்நுட்ப மாநிலமாக உருவாவதோடு, தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கு நுழைவாயிலாகவும் திகழும் என்று தெரிவித்துள்ளது.

- தேசிய மென்பொருள் தயாரிப்பு நிறுவனங்களின் கூட்டமைப்பு (NASSCOM) கடந்த **1998**ஆம் ஆண்டு மேற்கொண்ட ஓர் ஆய்வின் மூலம், மென்பொருள் தொழிலில் முதலீடு செய்ய சிறந்த சாத்தியக்கூறுகள் உள்ள நகரமாகச் சென்னை நகரைத் தேர்வு செய்துள்ளது.

# தகவல் தொழில்நுட்பவியலில் தமிழகம் முன்னணி

- கடந்த ஆண்டு மட்டும் **1,900** கோடி ரூபாய் பெறுமானமுள்ள மென்பொருள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.



## பல துறைகளில் கணினி மயமாக்கல்

பொதுமக்கள் அரசோடு தொடர்பு கொள்ளும்போது, அந்தத் தொடர்பு பயன்தரும் வகையில் அமைந்து, மக்களுக்கு மனநிறைவு அளித்திடும் வண்ணம் தமிழக அரசின் பல துறைகளில் கணினி மயமாக்கல் திட்டம் செவ்வனே செயல்படுத்தப்பட்டு வருகிறது. அவற்றில் சிலவற்றை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

1. தகவல் தொழில்நுட்பம் என்பது மக்களுக்கு அவசியமான ஒன்று என்பதை உறுதி செய்து, தகவல் தொழில்நுட்பத்தில் தாய்மொழியாம் தமிழில் பயில்வதை ஊக்கப்படுத்தும் வகையில் பல முன்னோடியான பணிகளை இந்த அரசு மேற்கொண்டு வருகிறது.

2. மேல்நிலைப் பள்ளிகளில் கணினி அறிவியலைக் கற்பிக்கும் திட்டத்தின் மூலம் இந்தியாவிற்கே முன்மாதிரி மாநிலமாகத் தமிழகம் திகழ்கிறது.

3. இனி வருங்காலங்களில் இணையத் தொடர்பு என்பது இன்றியமையாதது என்பதை முழுமையாக உணர்ந்துள்ளதன் பயனாகவும், இவ்விணைய வசதி தமிழகம் முழுவதும் கிடைக்க வேண்டும் என்ற தொலைநோக்குத் திட்டத்தில், ஏறத்தாழ 13,000 சமுதாய இணைய மையங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. மேலும், இங்கிலாந்தைச் சேர்ந்த வேர்ல்டுடெல் நிறுவனத்துடன் இணைந்து உயர்கடத்துத் திறன் கொண்ட ஆப்டிக் ஃபைபர் கேபிள் அமைக்கும் பணி நடைபெற்று வருவது இத்திட்டத்திற்கு முதுகெலும்பாகத் திகழ்கிறது.

அச்சிடப்பட்டு, உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள எனது விரிவான உரையில் தமிழகத்தில் தகவல் தொழில்நுட்பம் பெற்றுள்ள வளர்ச்சியும், அதைப் பெருக்குவதில் இந்த அரசு எடுத்துவரும் முயற்சிகளும் குறிப்பிடப்பட்டுள்ளன.

### உடனடியாக கவனம் செலுத்தவேண்டிய பிரச்சினைகள்

சில முக்கியமான பிரச்சினைகளில் உங்களுடைய கவனத்தை ஈர்க்க விரும்புகின்றேன். இப்பிரச்சினைகளில்



நாம் உடனடியாக கவனம் செலுத்துவதன் மூலம் இதனை வெகு சிறப்பாக செயல்படுத்துவது குறித்து இன்று நாம் ஓர் ஒன்றுபட்ட முடிவுக்கு வர இயலும் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

**1. மனதளவிலான மாற்றம்**

தகவல் தொழில்நுட்பத்தின் மூலம் பெரும் அளவிலான பலனைப் பெறுவதற்கு நமக்கு மனதளவிலான மாற்றங்கள் அவசியமாகிறது.

- ஒளிவுமறைவற்ற தன்மை, பொறுப்புணர்வோடு கூடிய விரைவுத் தன்மை, இவற்றின் மூலம் அரசின் நடவடிக் கைகளை மாற்றி யமைப்பதன் மூலமே பொதுமக்கள் பயன்பெற இயலும்.

**2. மின்னணு வசதியுடன் கூடிய இணைய ஆட்சிமுறை அமைப்பு**

மின்னணு வசதியுடன் கூடிய இணைய ஆட்சிமுறை அமைப்பை நாம் ஏற்றுக் கொள்வதன் மூலம், உலகம் முழுவதும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தரமானதொரு பொதுவான தொடர்பு வசதியை ஏற்படுத்தி அரசினுடைய உற்பத்திகளையும், சேவைகளையும் பொதுமக்களுக்கு எங்கிருந்தாலும், எப்பொழுது வேண்டினாலும், எந்த நேரத்திலும் வழங்கிட இயலும்.

**3. உலகளவிலான இணைய வசதி**

உலகளவிலான இணைய வசதியினை பெறுவதை உறுதி செய்யவேண்டும்.

- அவ்வசதிகள் எல்லாவற்றையும் உள்ளடக்கியதாகவும் எல்லோரும் எளிதில் வாங்கக்கூடியதாகவும் பாதுகாப்பானதாகவும் இருத்தல் வேண்டும்.
- பன்னாட்டு நுழைவு
- தேசிய அளவிலான விளம்பரம்.
- சொந்த உபயோகத்திற்கான கணினிகளை தந்திக்கம்பியின்றி காற்றாலைகள் மூலம் இயங்கக்கூடிய தகவல் தொடர்பு சாதனங்கள், டிஜிடல் தொலைக்காட்சிப் பெட்டிகள், செயற்கைக் கோள்கள் மூலம் நேரிடையாக நிகழ்ச்சிகளை ஒளிபரப்பும் வசதிகள் போன்ற அனைத்தும் முழுமையாக இயந்திர மயமாக்கப்படவேண்டும்.

**4. உள்நாட்டுச் சந்தையில் குறைந்த விலையிலான, பன்னாட்டு உயர்கடத்தும் திறன்கொண்ட இணைய வசதிகள்**

உள்நாட்டுச் சந்தையில் குறைந்த விலையிலான, பன்னாட்டு உயர்கடத்தும் திறன் கொண்ட இணைய வசதிகள் தடையற்ற அளவில் கிடைக்கச் செய்திடல் வேண்டும்.

**5. தொலைத்தொடர்பு கட்டுப்பாடுகளை விரைவாக நீக்குதல்**

குறிப்பாக,

- உள்ளூர்ப் பகுதிகளுக்கிடையில் தொடர்புகளை உருவாக்குதல்.
- ஒவ்வொரு இணைப்பகத்திலும் பன்னாட்டுத் தொலைத்தொடர்பு வசதி (ISDN), Digital Subscribers Line (DSL) ஆகிய வசதிகளை அளித்தல்.
- கடல்வழியே ஆப்டிக்ஃபைபர் கேபிள்கள் அமைப்பதை ஊக்குவித்தும், பொதுத்துறை மூலமாகவும், தனியார் துறை மூலமாகவும், செயற்கைக்கோள் இணைப்பகங்களை நிறுவியும், பன்னாட்டு தகவல் தொடர்பு வாய்ப்புகளை அதிகரித்தல்.
- தேவைப்படும் தகவல் தொடர்பு திறன்கள் உடன் கிடைக்க வகை செய்தல்.
- தொலைத் தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் வாய்ப்புகளை ஐ.சி.டி.யுடன் ஒருங்கிணைப்பதை அங்கீகரித்தல்.

**6. பொதுமக்கள் பயன்பெறும் வகையில் தகவல் தொடர்புக்கான பல்வேறு வழிகளையும் ஒருங்கிணைத்தல்**

- ஆப்டிக்ஃபைபர் இணைப்புகள் மூலமாக உள்நாட்டு தகவல் தொடர்பு வசதிகள் விரைவாக மேம்படுவதை ஊக்குவித்து, பொதுமக்கள் பயன்பெறும் வகையில் ஒருங்கிணைத்தல் வேண்டும்.

**7. குறைந்த செலவில் வன்பொருள், மென்பொருள்கள் கிடைக்க வகை செய்தல்**

- பழைமையான மற்றும் சீரமைக்கப்பட்ட வன்பொருள்களுக்கு சந்தை வாய்ப்புகளை உருவாக்கிட நிதியுதவிச் செய்தல்.
- செயலாக்கம் மற்றும் துறை சார்ந்த பணிகள் ஆகியவற்றில் பயன்படத்தக்க குறைந்த விலையிலான வரியற்ற பொதுவான மென்பொருள்களை உபயோகப்படுத்தச் செய்தல்.

**8. புதுமையான நிதியுதவி திட்டங்களையும், பொது–தனியார் கூட்டு முயற்சிகளையும் ஊக்குவித்தல்**

- அரசு நடவடிக்கைகளில் பழைய தொழில்நுட்பங்களை கைவிட்டு புதிய நடைமுறைகளை பயன்படுத்துவதற்கு ஊக்கமளித்தல்.
- பள்ளிகளில் கணிப்பொறி அறிவியல் கல்வித் திட்டத்தை குத்தகை அடிப்படையில் நடத்திட நிதியுதவி வழங்குதல்.
- இத்தகைய குத்தகைச் செலவினங்களை மத்திய அரசு திட்டங்களின் கீழ் கொண்டு வருதல்.

**9. தகவல் தொழில்நுட்ப சட்டத்தை அமல்படுத்துதல்**

அரசுத்துறை மற்றும் வியாபாரங்களில் தகவல் தொழில்நுட்ப சட்டத்தை நடைமுறைப்படுத்துவன் மூலம், இச்சட்டம் பற்றிய நிறைகுறைகள் குறித்த மிகப் பெரிய அளவிலான விழிப்புணர்வை பொதுமக்களிடையே ஏற்படுத்த இயலும்.

**10. "தேசியக் குடிமகன் அடையாள முறை"**

ஒவ்வொரு குடிமகனையும் அடையாளம் காணத்தக்க பல்வேறு தகவல் தொகுப்புகள் இன்று நடைமுறையில் உள்ளன. எனினும், "தேசியக் குடிமகன் அடையாள முறை" என்ற ஒன்று இல்லாத காரணத்தால் இந்தத் தகவல் தொகுப்புகள் ஒன்றொடொன்று தமக்குள் பரிமாறிக்கொள்ள இயலாத நிலையுள்ளது வருந்தத்தக்கது.

**11. கணினி மூலமான வர்த்தக முறையினை ஊக்குவித்தல்**

கணினி மூலமான வர்த்தக முறையினைப் பெருக்கிட

- இடைத்தரகர்களைத் தவிர்ப்பதன் மூலம் பொருளாதாரத்தில் பெருமளவிலான சேதம் தவிர்க்கப்படுகிறது.
- அரசு மற்றும் தனியார் துறைகளில் பெருமளவிலான உற்பத்தியைப் பெருக்கிட வழி செய்கிறது. குறிப்பாக, SME SECTOR களில் தகவல் தொழில்நுட்பம் பெருமளவில் பயன்படுத்தப்படுகிறது.

**12. உள்நாட்டுச் சந்தைகளை ஒருங்கிணைத்தல்**

வரி, காப்புவரி அமைப்பு மற்றும் முன்னுரிமைக்குரிய கொள்முதல் ஏற்பாடுகள் போன்ற சட்டரீதியான ஒழுங்குமுறை விதிகளைத் தளர்த்தி, உள்நாட்டுச் சந்தைகளை கணினி வர்த்தக விதிகளைத் தளர்த்தி, உள்நாட்டுச் சந்தைகளை கணினி வர்த்தக முறையில் மூலம் (e-commerce) ஒருங்கிணைப்பதன் பயனாக வர்த்தக நடைமுறை செழிக்க வாய்ப்புகளை உருவாக்க முடியும்.

இறுதியாக,

தமிழகத்தை தகவல் தொழில்நுட்பத்தில் – இந்தியாவில் மட்டுமின்றி உலகளவில் ஒரு சிறந்த மாநிலமாக உருவாக்கிட இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. அதனைத் தொடரும் வகையில், தகவல் தொழில்நுட்பத்தை நாம் செம்மையாக பயன்படுத்துவதன் மூலம் சிறப்பானதொரு ஆட்சி முறையைத் தர இயலும் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இதனை நடைமுறைப்படுத்திட மத்திய அரசும், தொடர்புடைய அமைச்சகமும் எங்களுக்குப் போதிய ஒத்துழைப்பையும், நிதி உதவிகளையும் வழங்க முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

**– புதுடெல்லியில் 15–7–2000 அன்று நடைபெற்ற தகவல் தொழில்நுட்ப அமைச்சர்கள் மாநாட்டில் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை. ●**

---

**கொட்டைகளையும் சேர்த்துத் தின்றவர்**

*அரண்மனையில் ஒரு பெரிய விருந்து நடந்து கொண்டிருந்தது. நூற்றுக்கணக்கானவர்கள் அவ்விருந்தில் பங்கு கொண்டனர். மாமன்னர் அக்பரும் பீர்பலும் ஒன்றாக அமர்ந்துகொண்டு சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.*

*விருந்தில் பலவகையான பலகாரங்கள் பரிமாறப்பட்டன. பலவகையான பழங்களும் பரிமாறப்பட்டன.*

*சக்கரவர்த்தியும் பீர்பலும் சுவாரசியமாகப் பேசிக்கொண்டு தமக்கு முன்னால் வைக்கப்பட்டிருந்த பேரீச்சம் பழங்களைச் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர்.*

*இருவரும் பேரீச்சம்பழக் கொட்டைகளைக் தங்கள் காலடிகளில் துப்பிக் கொண்டிருந்தனர்.*

*பீர்பலிடம் வேடிக்கை செய்யவேண்டும் என்று நினைத்த அக்பர் சக்கரவர்த்தி மெல்லத் தம் காலடியில் உள்ள பேரீச்சம்பழக் கொட்டைகளைப் பீர்பலின் பக்கம் தள்ளிவிட்டார்.*

*இது பீர்பலுக்குத் தெரியாது.*

*திடீரென்று அக்பர், "என்னதான் பேரீச்சம் பழத்தின் மீது உனக்கு ஆசை இருந்தாலும் இப்படியா அளவுக்கு மீறிச் சாப்பிடுவது? இப்படிச் சாப்பிட்டால் உடம்புக்கு ஆகுமா?" என்று கேட்டார்.*

*கீழே குனிந்து பார்த்த பீர்பல் அக்பர் பேரீச்சம்பழக் கொட்டைகள் பூராவையும் தன் பக்கம் தள்ளி இருப்பதை அறிந்துகொண்டார்.*

*"நானாவது வெறும் பேரீச்சம் பழங்களைத்தான் சாப்பிட்டேன், நீங்களோ கொட்டையையும் சேர்த்து அல்லவா தின்றிருக்கிறீர்கள்" என்றார் பீர்பல்.*

*பீர்பலின் நகைச்சுவை அக்பரைப் பெரிதும் கவர்ந்தது.*

★ ★ ★

# கணினி யுகம் கண்டோம், முன்னணியில் நின்றோம்

- இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் ஆண்டுதோறும் ஏறத்தாழ 38 ஆயிரம் பொறியியல் பட்டதாரிகள் உருவாகின்றனர். இதில் 19 ஆயிரம் பேர் தகவல் தொழில்நுட்பம் மற்றும் அதன் தொடர்பான கல்வியைப் பெற்றவர்கள்.

- தேசிய மென்பொருள் மற்றும் பணி நிறுவனங்களின் சங்கம் (NASSCOM) 1998இல் நடத்திய ஆய்வின்படி சென்னையை முதல் நிலை நகரம் என்று அறிவித்துள்ளது.



- முதலமைச்சரின் தலைமையில் மாநில தகவல் தொழில்நுட்பப் பணி முனைப்புக்குழு (IT Task Force).

- தகவல் தொழில்நுட்பத்திற்கென தனிக் கொள்கையை (IT Policy) உருவாக்கிய முன்னணி மாநிலங்களுள் தமிழகமும் ஒன்றாகும்.

- மென்பொருள் முனைவோர்க்கு, தமிழ்நாடு மென்பொருள் ஊக்க மூலதன நிதி (Venture Capital Fund) வசதி.

- டைடல் பூங்கா – அதிநவீன, உலகத்தர வசதிகளைக் கொண்ட, இந்தியாவிலேயே மிகவும் பெரிய மென்பொருள் பூங்கா. ரூ.340 கோடி செலவில், 2000 ஜூலை 4ஆம் தேதி மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களால் தொடக்கம்.

- பழைய மாமல்லபுரம் சாலை, சிறுசேரியில், ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் வன்பொருள் மற்றும் மென்பொருள் வளர்ச்சிக்குத் தகவல் தொழில்நுட்பப் பூங்கா உருவாக்கம்.

- ஆசியாவின் மிகப்பெரிய மென்பொருள் வளர்ச்சி மையம், டாடா கன்சல்டன்சி சர்வீஸஸ் (TCS) நிறுவனத்தால் சோழிங்கநல்லூரில் தொடங்கப் பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து பெண்டபோர் (Pentafour), இன்போசிஸ் (Infosys) மற்றும் போலாரிஸ் (Polaris) நிறுவனங்களும் தங்களது மையங்களை இப்பகுதிகளில் நிறுவியுள்ளன.

- உலகப் புகழ்பெற்ற வேர்ல்டு டெல் (World Tel) நிறுவனத்துடன் சேர்ந்து, தமிழ்நாடு முழுவதும் 13 ஆயிரம் சமுதாய இணைய மையங்கள். இதன் மூலம் சுமார் 1 இலட்சத்து 50 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்புக் கிட்டிட ஏதுவாகும்.

- கணினிப் பயன்பாடுகளில் தமிழ்க் குறியீடுகளுக்குத் தனி இடம் சேர்க்க, தமிழ்நெட் 1999 உலகத் தமிழ் இணையக் கருத்தரங்க மாநாட்டை பிப்ரவரி 7,8 தேதிகளில் நடத்தியது. மாநாட்டில் தரப்படுத்தப்பட்டுள்ள தமிழ் விசைப் பலகை அறிமுகம்.

- உலகெங்கிலும் உள்ள தமிழ் மக்கள் பயன்பெறும் வகையில் உலகத் தமிழ் இணையப் பல்கலைக்கழகம்.

- இந்தியாவிலேயே முதலாவதாக தமிழ்நாட்டில் 1,200 அரசு மேனிலைப் பள்ளிகளிலும் கணினி அறிமுகம். இதனால் ஆண்டுதோறும் சுமார் 48 ஆயிரம் மாணவர்கள் கணினிப் பயிற்சி பெறுவர்.

- தகவல் தொழில்நுட்ப கல்வியை மேம்படுத்த டானிடெக் என்னும் தகவல் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் 1998இல் உருவாக்கம்.

- 1993–94இல் சுமார் ரூ.2 கோடி என்றிருந்த மென்பொருள் ஏற்றுமதி,

  1999–2000இல் ஏறத்தாழ ரூ.2,000 கோடியாக உயர்வு.

- தமிழ்நாட்டில், 1995–96இல் 34 மென்பொருள் நிறுவனங்கள் இருந்த இடத்தில், இப்போது 600க்கும் மேல் மென்பொருள் நிறுவனங்கள் இருக் கின்றன.

- உலகிற் சிறந்த ஹாலிவுட் படங்களுக்குத் தமிழ்நாட்டில் மென்பொருள் (Animation & Graphics) தயாரிப்பு.

- அரசுத்துறை நிர்வாகம் கணினி மயமாக்கம். முதல் கட்டமாக பத்திரப் பதிவு, மோட்டார் வாகனத்துறை, நிலப்பதிவேடுகள், விற்பனை வரித்துறை மற்றும் வருவாய்த்துறை ஆகியவை கணினி மயமாக்கப்பட்டு வருகின்றன.

- இணையப் பயன்பாடு அதிகம் உள்ள தென் மாநிலங்களுள் தமிழகமும், தென் மாநிலப் பெருநகரங்களின் வரிசையில் சென்னையும் முதலிடம் வகிக்கின்றன.

★ ★ ★

# திருக்குறள் விரிவுரை

☐ தமிழ்த்தென்றல் திரு. வி.க.

திருவள்ளுவர் என்னும் நினைவு தோன்றும்போதே உலகமும் உடன் தோன்றுகிறது. இவ்வாறு தோன்றுதற்குக் காரணமென்ன? காரணத்தைத் திருவள்ளுவர் அருளிய நூல் உணர்த்தும். அந்நூலே திருவள்ளுவரை உணர்த்துதற்குரிய கருவியுமாகும்.

திருக்குறளை ஆராய்ந்தால், அதன்கண் உலகமிருத்தல் நன்கு புலனாகும். திருவள்ளுவர், உலகையே திருக்குறளாக எழுதினார். உலகின் எழுத்தோவியம் திருக்குறள் என்று கூறலாம்.

திருவள்ளுவர் உலகுக்கென்றே பயின்றார். உலகுக்கென்றே வாழ்ந்தார். அதனால் அவர்தம் உள்ளத்தில் உலகம் நின்றது. அவர் உலகமாயினர். உலகம் அவராயிற்று. இத்தகைய ஒருவரிடமிருந்து பரிணமித்த ஒரு நூல் எந்நினைவையூட்டும்? அஃது உலக நினைவூட்டுதல் இயல்பே. ஆகவே, திருவள்ளுவர் நினைவு தோன்றும்போது, உலகமும் உடன் தோன்றுவதில் வியப்பொன்றுமில்லையென்க.



**உலகம்**

உலகம் எது? இவ்வினாவிற்குச் செவ்வனிறை இறுத்தல் அரிது. உலகம் இதுவே என்று அறுதியிட்டுக் கூறல் இயலாது. உலகம் பலவிதம். ஒவ்வொருவர்க்கு ஒவ்வோர் உலகம் உண்டு. ஒவ்வொருவர்க்கும் ஒவ்வொருபோது ஒவ்வோர் உலகம் உண்டு என்று கூறல் மிகப்பொருத்தம்.

ஒருவர் தம் வாழ்வில் எத்துணையோ முறை பிறக்கிறார், எத்துணையோ முறை இறக்கிறார். நொடிக்கு நொடி பிறப்பும் இறப்பும் உறுகின்றன. இந்நிகழ்ச்சியை உணர்ந்து நடப்போர் சிலரே.

ஒருவர் ஒன்றைப்பற்றி ஒருபோது எண்ணங் கொள்கிறார். அவரே அதைப்பற்றி வேறுபோது வேறுவித எண்ணங் கொள்வோராகிறார். இவ்வாறு எண்ணங்கள் தோன்றி நின்று மறைந்து வருகின்றன. தோற்றம் மறைவு என்றால் என்ன? பிறப்பு இறப்பு என்றால் என்ன? இரண்டும் ஒன்றே. 'நாளுநாள் சாகின்றாமால் நமக்குநாம் அழாத தென்னே' என்றார் வளையாபதியாரும்.

பருவுடல் தோன்றுவதும் மறைவதும் மட்டும் பிறப் பிறப்பாகா. எண்ணங்களின் எழுச்சியும் வீழ்ச்சியும் பிறப் பிறப்பின்பாற்பட்டனவே. இப்பிறப்பிறப்பு, மெய்யுணர்வு தோன்றும்வரை நிகழ்ந்து கொண்டே போகும். முகிழ்க்கும் ஒவ்வோர் எண்ணமும் ஒவ்வோர் உலகமென்க.

ஆதலால், உலகம் எது என்று எங்ஙனம் அறுதியிட்டுக் கூறுவது?

எண்ணமே உடலும் உலகுமாம். அடிப்படை எண்ணம். எண்ணத்தின்படியே எல்லாம்

உருக்கொள்ளும். எண்ணம் நுண்மை. உரு பருமை.

## நாடு

உலகைப் பற்றிப் பலர் பலவாறு கூறுப. அவர்தங் கூற்றுக்களை எடுத்த பொருளுக்கேற்ப இங்கே முக்கூறுபடுத்திக் கொள்கிறேன்; ஒன்று, உலகம் பூதங்களால் ஆக்கப்பட்டதென்பது. இன்னொன்று, உலகம் நாடுகளால் (Nations) ஆக்கப்பட்டதென்பது; வேறொன்று, உலகம் கலைகளால் ஆக்கப்பட்டதென்பது. இம்மூன்றனுள் சிங்க நோக்காக நிற்பது நாடு. நாடு ஒருவகையில் முன்னையதிலும், மற்றொரு வகையில் பின்னையதிலும் ஒன்றும். நாட்டை வெறும் பௌதிகமாகப் பார்ப்பது ஒருவகை; அதைக் கலையாக நோக்குவது இன்னொரு வகை.



நாடு என்பது வெறும் நிலப்பரப்பு மட்டுமன்று. அது கல்வி, தொழில், அரசு, நாகரிகம், வாழ்வு முதலியவற்றையுங் கொண்டது. நிலப்பரப்பு, பூதகாரியம், கல்வி, நாகரிகம், வாழ்வு முதலியன கலையின் பாகுபாடுகள். இவ்விரண்டையுங் கொண்ட ஒன்றே நாடு என்பது.

## தமிழ் நாடு

உலகில் பல நாடுகளிருக்கின்றன. ஒவ்வொரு நாட்டுக்கு ஒவ்வொரு பெயருண்டு. நாட்டுப்பெயர்கள் பெரிதும் அவ்வந்நாட்டு மொழியினின்றும் அரும்பியன.

திருவள்ளுவர் தமிழ்நாட்டிற் பிறந்தவர்; தமிழ்மொழியில் நூல் செய்தவர். அவர் நினைவு தோன்றும் போது தமிழ் நாட்டின் நினைவன்றோ தோன்றுதல் வேண்டும்? உலக நினைவு தோன்றுவதென்னை?

ஈண்டுத் தமிழ்நாடென்றது இப்போதுள்ள 'தமிழ் நாட்'டைக் குறிப்பதன்று. அது பழந்தமிழ்நாட்டைக் குறிப்பது. தமிழ்நாட்டுக்கு அடிகோலி, அதை ஆக்கிய பேரறிஞர் பரந்த நோக்குடையவர். அவர் உலகியலை நன்குணர்ந்தவர். உலகியலில் இருவிதச் சிறப்புக்களுண்டு. ஒன்று சிறியது. மற்றொன்று பெரியது. உலகியல், சாதி மதம் நிறம் மொழி நாடு முதலியவற்றிற் கலந்தும், இவற்றைக் கடந்தும் விளங்குவது. சாதி மதம் மொழி நிறம் நாடு முதலியன கலந்தநிலை சிறியது. இவற்றைக் கடந்தநிலை பெரியது. சிறிய நிலை பன்மை; பெரியநிலை ஒருமை. பன்மையில் ஒருமை காண முயல்வது அறிவுடைமை. பன்மையைப் பிரிவுக்கும் பிணக்குக்கும் இரையாக்குவது அறியாமை.

பழந்தமிழறிஞர் கருத்து, சிறிய பன்மையில் படியவில்லை. அவர்தம் நோக்கு, பெரிய ஒருமையில் சென்று ஒன்றியது. வேற்றுமை அவர்க்குப் புலனாகவில்லை. ஒற்றுமையே அவர்க்குப் புலனாகிறது. அவர் நடாத்திய வாழ்வு அத்தகையது.

பழந்தமிழர் மொழியில் ஈண்டு ஒன்று நினைவிற்கு வருகிறது. அது வருமாறு :

**யாதும் ஊரே யாவருங் கேளிர்**
**தீதும் நன்றும் பிறர்தர வாரா**
**நோதலுந் தணிதலு மவற்றோ ரன்ன**
**சாதலும் புதுவ தன்றே வாழ்தல்**
**இனிதென மகிழ்ந்தன்று மிலமே முனிவின்**
**இன்னா தென்றலு மிலமே மின்னொடு**
**வானந் தண்டுளி தலைஇ யானாது**
**கல்பொரு திரங்கு மல்லற் பேர்யாற்று**
**நீர்வழிப் படூஉம் புணைபோ லாருயிர்**
**முறைவழிப் படூஉ மென்பது திறவோர்**
**காட்சியிற் றெளிந்தன மாகலின் மாட்சியிற்**
**பெரியோரை வியத்தலு மிலமே**
**சிறியோரை இகழ்த லதனினு மிலமே.**

இப்புறப்பாட்டை உற்று உற்று நோக்குக. நோக்கி, நோக்கி உன்னுக. உன்னி உன்னி அதில் ஒன்றுக. பாட்டுப் பொருளில் வேற்றுமைக்கு இடமுண்டோ? பிணக்குக்கு இடமுண்டோ? எல்லாம் ஒருமை! யாதும் ஊர், யாவருங்கேளிர் (சுற்றத்தார்)

பழந்தமிழரது பரந்த நோக்கு என்னே! என்னே! அப்பழந்தமிழர் நாடு எங்கே? தமிழ் நாடே! உலகாக விளங்கிய தமிழ் நாடே! நீ யாண்டுச் சென்றனை? மீண்டும் எழுவையோ? பழந்தமிழே! உன் நாடு சிறுமண்ணாய்க் கிடக்கிறது. பிரிவுக்கும் பிணக்குக்கும் இரையாகிறது. அஃது உலகாக மீண்டும் விளங்குதல் வேண்டும். திருவள்ளுவர் நாடாதல் வேண்டும். 'யாதும் ஊரே – யாவரும் கேளிர்' என்ற உனது விழுமிய கொள்கைக்கோர் இலக்கியமாக நிற்றல் வேண்டும். 'யாதும் ஊரே – யாவரும் கேளிர்' என்ற உனது உள்ளுறையன்றோ இந்நாளில் 'சமதர்மம்' 'சமதர்மம்' (Socialism) என்று விரித்துப் பேசப் படுகிறது? பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னரே நீ சமதர்மம் பேசினை; சமதர்மத்தில் நின்றனை; வாழ்ந்தனை. இந்நாளில் உன்னிலை இரங்கத்தக்க தாயிருக்கிறது. உனது பழைமையைக் குறிக் கோளாகக் கொண்டு இக்காலத்தவர் வாழ்வு நடாத்துவாராக.



### திருவள்ளுவர்

திருவள்ளுவர் யார்? 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற சீரிய கொள்கை பிறந்த பெருந் தமிழ்க் குடியில் தோன்றியவர். அவர் நெஞ்சம், சாதி மதம் நிறம் மொழி நாடு முதலிய சிறுமைக் கட்டுகளில் படிந்து கிடக்கவில்லை. அவர் நெஞ்சில் பரந்த உலகே படிந்து கிடந்தது. அது திருக்குறள் என்னும் நூலாக உருக்கொண்டது. இத்தகைய நூல் ஓர் இனத்துக் குரியதாகுமா? உலகுக்குரிய

தாகுமா? இப்பெரு நூலை அருளிய ஒருவர் ஓர் இனத்துக்குரியராவரா? உலகுக்குரியராவரா? எனவே, திருவள்ளுவர் நினைவு தோன்றும் போது உலகமும் உடன் தோன்றுதல் இயல்பே. இதில் வியப்பொன்றுமில்லை.



**மொழியும் பொருளும்**

திருவள்ளுவர் தமிழ்நாட்டிற் பிறந்தவர். அவர்தந் தாய்மொழி தமிழ்; அவர் தமிழில் நூல் செய்தனர். நூலின் மொழி தமிழ். பொருளோ உலகுக்குரிய ஒன்று. இது வெள்ளிடைமலை. இவ்வாறு நூல் செய்தோர் அரியர். செய்வோரும் அரியர். இது பற்றியே தமிழ்நாட்டுச் சமதர்மப் புலவராய், இற்றைஞான்று நமது நடுவண் வாழ்ந்த பாரதியார், 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ் நாடு' என்று வீறுகொண்டு மகிழ்ச்சியுடன் ஓதியருளினார்.

**வரலாறு**

உலகுக்கு ஒரு நூலை அருளிய திருவள்ளுவரது உண்மை வரலாறு நமக்குத் தெரியவில்லை. 'இப்போது வழங்கி வரூஉம் அவர்தம் வரலாறு, பின்னே புனையப்பட்டது. பல தமிழாசிரியரது வரலாறுகள் சரித்திர முறையில் நமக்குக் கிடைக்கவில்லை. இது நாடு செய்த பாவம். 'சரிதம்' என்னும் பெயரால் புனைந்துரைகளே பெரிதும் நாட்டில் உலவுகின்றன. அவரவர் அருளிய நூலைக் கொண்டே அவரவர் நிலையை ஊகித்து உணரவேண்டுவது அறிஞர் கடமை.

திருவள்ளுவர் யாத்த திருக்குறள் என்னும் தமிழ்ப் பொது நிலையம் எல்லார்க்குங் காட்சி வழங்குகிறது. அந்நிலையத்தைப் பார்ப்போம். அதனுள் புக முயல்வோம். முயன்று புகுந்தால் திருவள்ளுவரைக் காணலாம். திருவள்ளுவர் இறந்துபட்டாரில்லை. அவர் உயிருடன் திருக்குறள் நிலையத்தில் வீற்றிருக்கிறார் உலகீர்! அவரைக் காண எழுக; எழுக.

**வைப்புகள்**

ஒரு நிலையத்தில் புகுந்து, அதன்கண் வாழ்வோரைக் காணுதற்குப் பல வாயில்களைக் கடத்தல் வேண்டும். திருக்குறள் நிலையத்துக்கும் பல வாயில்களுண்டு. அவையே திருக்குறளிலுள்ள வைப்புகள். அவற்றைப் பார்ப்பதால், போற்றுவதால், அல்லது ஓதுவதால் மட்டும் அவை திறந்து வழி காட்டா. அவற்றைப் பயின்று பயின்று, அவற்றின் பொருளை உணர்ந்து உணர்ந்து, அவற்றின்படி வாழ்வு நடாத்தல் வேண்டும். இவ்வாழ்வினரை வரவேற்க வாயில்கள் காத்துக் கொண்டிருக்கின்றன. வாயில்கள் வழிகாட்டும். திருவள்ளுவரிடஞ் சேர்க்கும்.

**உரையாசிரியர்**

திருவள்ளுவரைத் தாங்காணவும், பிறர்க்குக் காட்டவும் உழைத்தவர் பலர். பலருள் குறிக்கத்தக்கவர் பதின்மர். அப்பதின்மர் பெயர்களை,

**தருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர்**
**பரிமே லழகர் பரிதி – திருமலையர்**
**மல்லர் கவிப்பெருமாள் காளிங்கர் வள்ளுவர்நூற்**
**கெல்லை யுரையெழுதி னோர்**

என வரூஉம் வெண்பா தெரிவிக்கிறது.

பதின்மருள் முதல் முதல் உரை கண்டவர் தருமர். அவர்க்கே எல்லா வாழ்த்தும் வணக்கமும் உரியன.

இப்பொழுது அச்சாகி வெளிவந்துள்ள உரைகள் இரண்டு.ஒன்று மணக்குடவருடையது. மற்றொன்று பரிமேலழகருடையது.

பழைய உரைகளுள் இறுதியது பரிமேலழகருடையது. இதுவே பெரிதும் போற்றப்படுகிறது. பரிமேலழகர் பெருங்கல்வியாளர். வடமொழி தென்மொழிப் புலவர். அவர்தம் உரையில் அவரது காலத்துக்கேற்ற பொருள்களும், எக்காலத்துக்கு முரிய பொருள்களுமாக இரண்டுஞ் செறிந்து கிடக்கின்றன.

வேறு மொழிப் புலவர் சிலரும் திருவள்ளுவரைக் காண முற்பட்டனர். இன்னும் பலர் முற்படுதல் வேண்டும். திருவள்ளுவர் ஒளி, உலகம் முழுவதும் காணும் நாளே நன்னாளாகும். அந்நாள், யாதும் ஊராகவும் யாவருங் கேளிராகவும் பொலியுந்திருநாளாகும்.

திருக்குறளை யான் இளமையில் ஒருவாறு பயின்றேன். பின்னே மணக்குடவரும் பரிமேலழகரும் உதவியுள்ள உரைகளைத் துணையாகக் கொண்டு ஆய்ந்து ஆய்ந்து பார்த்தேன். இவ்விருவரும் தமிழ்த்தாய்க்கு ஆற்றியுள்ள தொண்டை எம் மொழியால் வழுத்தவல்லேன்! மனமொழி மெய்களால் இருவரையும் போற்றுகிறேன்.

**காலத் திறவு**

திருக்குறள் நிலையத்துக்கு இக்காலத்துக்குரிய திறவு ஒன்று வேண்டும் என்னும் உணர்வு பலரிடை எழுந்ததை யான் அறிவேன். இவ்வுணர்வு அடிக்கடி என்பாலுந் தோன்றி நின்றழிந்ததுண்டு.

திருக்குறளுக்கு ஒரு புத்துரை காண்டல் வேண்டும் என்ற எண்ணம் முதல் முதல் எழுந்தபோது எனக்கு வயது முப்பத்தொன்றிருக்கும். இவ்வுரை எழுதப்புகுந்த பொழுது எனது வயது ஐம்பத்து மூன்று. இந்நாளில் யான் அந்நாளைய கலியாணசுந்தரனா யில்லை. அந்நாளைய கலியாணசுந்தரன் பெரிதும் ஏடுகளையே கட்டி அழுதவன். ஏட்டுப் புழுவாயிருந்தவன். இப்பொழுது ஏட்டுக் கல்வி அவனை விடுத்து ஒருவுகிறது. இயற்கைக் கல்வி அவனைப் புல்குகிறது. இயற்கையின் உள்ளுறையாயுள்ள இறைக் கல்வியை அவன் வேட்டு நிற்கிறான்.




**இயற்கை வாழ்வு**

யான் இப்பொழுது ஏட்டுக்கும் இறைக்கும் இடையில் நிற்கிறேன். இறையருள் கூடின் திருவள்ளுவரை நேராகாணும் பேறு பெறுவேன். மற்றவர்க்கும் அவரைக் காட்டுவேன். இறையருள் எனக்குக் கிட்டுமோ? கிட்டாதோ? அறிகிலேன்.

இயற்கை அன்னையின் திருவருளையாதல் யான் முற்றும் பெற்றேனா? இல்லை. நகர வாழ்வு அதைத் தகைந்து நிற்கிறது. நகர வாழ்வை விடுத்தால் சில சேவைகளுக்குத் தடை நேரும். என் செய்வேன்! பலதிற வேலைச் சூழலிடை மூழ்கி நிற்குஞ் சிறியேன், இயற்கை அன்னையின் திருவருட்டுணை கொண்டு, திருவள்ளுவரைக் காண ஒல்லும் வகை

முயல்வேன். வழுக்கியும் வீழ்வேன். யான் மனிதன், குறையுடையேன். சிறுமையுடையேன். அறியாமை யுடையேன்.

ஏட்டினின்றும் இயற்கையினிடமும், இயற்கை யினின்றும் அதன் உள்ளுறையான இறையினிடமுஞ் செல்லுதல் வேண்டும். இஃதொருவித ஒழுங்கு முறை. இம்முறையைத் தொல்காப்பியனார் செவ்வனே கோலியுள்ளார்.

தொல்காப்பியம் மூன்று அதிகாரங்களால் ஆக்கப்பெற்றது. மூன்றனுள் எழுத்துஞ் சொல்லும் ஏட்டுக் கல்விக்குத் துணை செய்வன. பொருள் இயற்கை வாழ்வுக்குத் துணை செய்வது. இயற்கை வாழ்வு இறைவாழ்வைக் கூட்டுதல் இயல்பு. இம்முறை ஈண்டுக் கருதற்பாலது. இம்முறையால் திருவள்ளுவரை வழிபட முயல்கிறேன். இயற்கை அன்னையின் துணை வேண்டும்.

**நூல்**

திருவள்ளுவர் அருளிய நூல் திருக்குறள்.

திரு+குறள்= திருக்குறள். திரு, பல பொருள் ஒரு சொல். இங்கே இரண்டு பொருள் குறிக்கத்தக்கன: ஒன்று செல்வம், மற்றொன்று அழகு. செல்வம்; அறம், பொருள், இன்பம், அழகு; கண்டாரால் விரும்பப்படுந் தன்மை நோக்கம். இது பேராசிரியர் கூறியது. குறளில் முச்செல்வமென்னும் அறம்–பொருள்–இன்பம் உண்மையானும், கண்டோரால் விரும்பப்படுந் தன்மை நோக்கமாகிய அழகு உண்மையானும் அது, திரு என்னும் பொருந்திய அடைபெற்றுத் திருக்குறள் என்று அழைக்கப்படலாயிற்று. திருவையுடைய குறள் என்று விரிக்க.

குறள் – குறுமை, குறுகியது. குறுகிய பா–குறட்பா. இது குறுவெண்பாட்டு என்றும், குறள் வெண்பா என்றுஞ் சொல்லப்படும். முதல் அடி நான்கு சீரும், இரண்டாம் அடி மூன்று சீருமாக ஏழு சீர் கொண்டது குறள் வெண்பா.

'குறுவெண் பாட்டிற் களவெழு சீரே'

குறள் வெண்பாக்களால் ஆக்கப்பட்ட ஒருநூல், குறள் என்னும் பெயர் பெறலாயிற்று.

குறள்–குறுமை, பண்புப் பெயர்.

குறள், ஈரடி வெண்பாவுக்காம் போது பண்பாகு பெயராய், இவ்வெண்பாக்களால் ஆக்கப்பட்ட நூலைக் குறிக்கும் போது கருவியாகு பெயராய், இருமடியாகு பெயராதல் காண்க.

**முப்பால்**

திருக்குறள் முப்பாலுடையது. முப்பால், அறம்–பொருள்–இன்பம் என்பன. 'வீடு எங்கே? வீட்டைத் திருவள்ளுவர் தனியே வகுத்துக் கூறாது விடுத்த தென்னை?"

இதற்குக் கூறப்படுங் காரணம் பலப்பல. திருவள்ளுவர் வீட்டையுங் கூறினார் என்பதை நிறுவிக் காட்டுதற்கு, 'வீட்டுப்புலவோர்' படும்பாடு என்னே! அவர், 'கடவுள் வாழ்த்து', 'துறவு', 'நிலையாமை', 'மெய்யுணர்வு', 'அவா வறுத்தல்' முதலிய அதிகாரங்களை எடுத்துக் காட்டுவர். மூலை முடுக்குகளிலுள்ள சில குறட்பாக்களையும் சொற்றொடர்களையும் சொற்களையும் எடுத்துக் காட்டுவர். திருவள்ளுவர் மீது அவர் கொண்டுள்ள அன்பு பாராட்டற்குரியது. அவர் எடுத்துக்காட்டும் அகச்சான்றுகளெல்லாம் திருவள்ளுவர் வீட்டுண்மையில் உறுதியுடையார் என்பதை மறுப்பார் யார்? 'திருவள்ளுவர் வீட்டுக்கெனத் தனிப்பால் வகுத்துக் கூறாமைக்குக் காரணமென்னை' என்னும் வினாவிற்கு எடுத்துக்காட்டுக்களில் யாண்டாயினும் விடையிருக்கிறதா என்பது சிந்திக்கத் தக்கது.

வீடு, வாக்கு மனங்கட்கு எட்டாதது அத்தகைய ஒன்றை எவ்வாக்கால் விளம்புதல் கூடும்? இதுபற்றியே பரிமேலழகரும், 'வீடென்பது சிந்தையும் மொழியுஞ் செல்லாநிலைமைத்தாகலின், துறவறமாகிய காரண வகையாற் கூறப்படுவதல்லது. இலக்கண வகையாற் கூறப்படாமையான், நூல்களாற் கூறப்படுவன ஏனைய மூன்றுமே யாம்' என்று ஒருவாறு விளக்கிப் போந்தனர்.

அறவழி நின்று, பொருளாக்கி, இன்பம் நுகர்வோர் வீடு அடைதல் ஒருதலை. அறம் பொருள் இன்ப வாழ்வின் பயன் வீடு, அடைவாகவும் பயனாகவுமுள்ள ஒன்றை எப்படிச் சொல்லால் அறுதியிட்டுச் சொல்வது? வீடு, அறம் பொருள் இன்பங்களினின்றும் வேறுபட்டு நிற்பதன்று. அது மூன்றினும் விரவி நிற்பது. திருக்குறளிலுள்ள ஒவ்வொரு பாலிலும் வீடு விரவியே நிற்கிறது.

வீடு, விடு என்னும் அடியினின்றும் பிறந்தது. விடுதலை வீடு, கட்டினின்றும் விடுதலையடைவது வீடு. வீடு எங்கிருப்பது? அதற்கென ஒரு தனியிடம் உண்டோ? கட்டுடையார்க்கு அது புலனாகாமையால், அவர் அதற்கென ஒரு தனியிடம் வகுத்தனர் போலும்! வீட்டை மறைத்திருப்பது கட்டு. கட்டு அறுந்ததும் வீடு பொருளாகும்.

## கட்டு

கட்டும், கட்டின் பாகுபாடுகளும் திருக்குறளில் சிலவிடங்களில் புகுந்திருக்கின்றன. 'இருள்சேர் இருவினை', 'அழுக்காறவா வெகுளி இன்னாச்சொல்', 'பிறப்பென்னும் பேதைமை', 'சார்புகெட', 'காமம் வெகுளி மயக்கம்', 'பற்றுவிடற்கு' என வரூஉம் திருக்குறள் மொழிகளை நோக்குக.

கட்டறுந்தால் மனம் மாசிலதாகும். மாசற்ற இடம் வீடாய்ப் பொலியும். இந்நிலையுற்றார்க்கு எல்லாம் வீடே 'எந்நாளும் இன்பமே துன்பமில்லை' என்று அப்பரும், 'அருநரகவையும் நீ' என்று நம்மாழ்வாரும் 'பரலோக ராச்சியம் உம்முடைய உள்ளத்திலிருக்கிறது' என்று கிறிஸ்து பெருமானும் அருளிய செம்மொழிகளை உன்னுக. இம்மொழிகளை இப்பெரியார் யாண்டிருந்து அருளினர்? இவ்வுலகத்தில் இருந்தே அருளினர். இவருக்கு இவ்வுலகம் எவ்வாறு தோன்றிற்று? வீடாகவே தோன்றிற்று. ஆதலால், வீடு என்பது ஓரிடத்தில் தனியே இருப்பதன்றென்க.

## பழைமை

கட்டையறுத்தற்கு அறவழியில் நின்று, கல்வி பயின்று, தொழில் புரிந்து, பொருளீட்டி, இன்பம் நுகர்தல் வேண்டும். இச்செந்நெறியே வாழ்வுக்குரியது. இதுவே இயற்கை வாழ்வு. இந்நுட்பமுணர்ந்த அறிஞர், அறம், பொருள், இன்ப வாழ்வையே உலகுக்கு அறிவுறுத்தினர். இம்மூன்றிற் கலவாத வீடு ஒன்று தனித்திருப்பதாக அவ்வறிஞர்க்குத் தோன்றவில்லை. அறம் பொருள் இன்ப வாழ்வில் வீடு பொலிதல் அவர்க்கு நனிவிளங்கிற்று. உண்மை கண்டவர் உண்மை உரைத்தல் இயல்பு.

அறம் பொருள் இன்பம் என்னும் மூன்றில் வீடும் விரவி வருமாறு கூறுவது பழைய முறை. பழைய நூல்கள் யாவும், இம்முறைவழியே பிறந்தன. இடைக்காலத்தில் தோன்றிய நூல்களும் உரைகளும் பழங்கொள்கையைக் கலக்கிவிட்டன. இதற்குக் காரணம் காலப்போக்கென்று கூறுவது பொருத்தம். திருவள்ளுவர் முப்பாலே வகுத்தருளினர்.



## போலி வீடு

நாளடைவில் வீட்டைப்பற்றிய தனி நூல்கள் பெருகின. இவற்றுள் மிகச் சிலவே பழங்கொள்கைக்குத் துணை போவன. பல, அறம் பொருள் இன்ப வாழ்வில் பொருளற்ற நிலை யாமையையும், இயற்கையை வெறுத்தல் – பெண்ணை வெறுத்தல் என்னும் போலித் துறவையும், நுழைத்து நல் வாழ்வுக்கு இடர் செய்தன. இந்நூற் பெருக்கால், அறம் – பொருள் – இன்ப வாழ்வு அருகுவதாயிற்று.

மக்கள் எண்ணம், அறம் பொருள் இன்பக் கலப்பற்ற போலி வீட்டில் – வெறும் பாழில் – படிந்தது. அதனால் மன்பதையில் தீயொழுக்கம் புகுந்தது. இந்நாளில் உலகம் எக்காட்சி வழங்குகிறது? கொலையுங் களவுங் கள்ளுங் காமமும் பொய்யுந் தாண்டவம் புரியாத இடமும் உளதோ?

தனித்த வீடென்று அறம் பொருள் இன்ப வாழ்வை வெறுக்க ஏவும் நூல்களை இயற்றுவது பாவம். அறம் பொருள் இன்ப வாழ்வின் பயன் வீடாயிருத்தலான், வீட்டைத் தனியே பிரித்துக் கூறுவது எற்றுக்கு? இது வெறும் பாழைக் கூறுவதாக வாக்கு மனமுடைய மக்களால் கொள்ளப்படும். அறம் பொருள் இன்ப வாழ்வுக்குரிய நூல் செய்வோரே நலஞ் செய்வோராவர்.

அறம் – பொருள் – இன்பம் – அற்ற தனித்த வீட்டு நூல்களால் உலகம் உற்ற அல்லல் போதும், போதும், அறம் பொருள் இன்ப வாழ்வு, வீட்டை உணர்த்த வல்லது. ஆதலால், இந்நாளில் அறம் பொருள் இன்ப வாழ்வு அதாவது இயற்கை வாழ்வு பெருகுதல் வேண்டும். இதற்கு உறுகருவியாகத் துணைபுரியவல்லது திருவள்ளுவரது முப்பால் நூல்.

## மரபு

திருவள்ளுவர் அருளியது முப்பால் நூல். (முக்கால், அறம் – பொருள் – இன்பம் என்பன) அறமும், பொருளும் புறத்தில் அடங்குவன. இன்பம் அகத்தில் அடங்குவது. அகம் புறம் என்னும் இரண்டும், அறம் பொருள் இன்பம் என்று மூன்றாக விரிந்தன.

'அகம் புறம்' தமிழ் மரபென்றும், 'அறம் பொருள் இன்பம்' வடமொழி மரபென்றும் சொல்வோரும் உளர். 'எதனின்றும் எது பிறந்தது? எது முன்னையது? எது பின்னையது? என்று போரிடுவோரும் உளர். போராட்டத்துக்கும் திருவள்ளுவர் நூலுக்கும் எவ்விதத் தொடர்புமில்லை என்பது எனது கருத்து. திருவள்ளுவர் நூல், மரபு கடந்தது. அது மன்பதைக்குரியது. அதை 'மரபு' என்னுஞ் சிறையில் புகுத்த முயல்வது அறமாகாது.

உண்மை எவருடைமை? அது தமிழருடையதா? மற்றவருடையதா? ஓர்க. தமிழறிஞரிடை 'அகம் புறம்' என்று தோன்றிய உண்மை. மற்றவரிடை 'அறம் பொருள் இன்ப'மாகத் தோன்றியிருக்கலாம். இவரிடை 'அறம் பொருளின்ப'மாகத் தோன்றிய உண்மை, அவரிடை 'அகம் புற'மாகத் தோன்றியிருக்கலாம். ஒவ்வொரு நாட்டறிஞரிடை ஒவ்வொருவித உண்மை தோன்றும். அஃது அவ்வந்நாட்டாருடைமை என்று நினைப்பது தவறு. அறிஞர் எந்நாட்டவராயினும் அவர் காணும் உண்மை உலகுக்கு உரியதாகும். அதை, மரபின் பாற்படுத்திப் போரிடுவது அறியாமை. அறிஞர் உலகுக்கு உரியவர். அவர் பிறந்த நாட்டுக்கு மட்டும் உரியவராகார்.

திருவள்ளுவர் தமிழ்நாட்டிற் பிறந்தவர். தாய் மொழியை நன்கு பயின்றவர். அவர் அந்நாளில் தமிழ்நாட்டிற் புகுந்த பிராகிருதம், பாலி, சமஸ்கிருதம் முதலிய மொழிகளிலுள்ள நூல்களையும் பயின்றிருப்பர். திருவள்ளுவர் தாம் பெற்ற கலைப்புலமையளவில் நின்று திருக்குறளை யாத்தனர் என்று சொல்வதற்கில்லை. இதனை அவர்தம் நூலை ஆராய்வதால் தெளிதல்கூடும்.

திருக்குறளை ஆய்ந்து பார்த்தால், அது கலைப்புலமை கடந்த இயற்கைப் புலமையால் முகிழ்த்த தெள்ளறிவினின்றும் பிறந்ததென்பது விளங்கும். ஆராய்ச்சியாளர், சாதிவெறி மதவெறி மொழி வெறி முதலிய வெறிகளற்றவராயிருத்தல் வேண்டும்.

திருவள்ளுவர், கற்பன கற்றார், கேட்பன கேட்டார். அவர், தாம் கற்றனவும் கேட்டனவும் வாழ்வில் ஒன்றப்பெறுதற்கு இல்வாழ்க்கையேற்று, இயற்கையோடியைந்த வாழ்வு நடாத்தி, அறவழியில் நின்று, தொழில் புரிந்து, பொருளீட்டி, இன்பந்துய்த்து, நன்மக்களைப் பெற்று, அன்பராய், விருந்தோம்பி, எவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகும் அந்தண்மை எய்தி, மனமாசகன்ற அறவோராய், தாம் பெற்ற இன்பத்தை உலகமும் பெறுதல் வேண்டித் திருக்குறள் என்னுந் தனி நூலை அருளினர்.

நாடு, தனது பழங்கொள்கையினின்றும் வீழ்ந்து, சாதி வெறி மதவெறி மொழிவெறி முதலிய சிறுமைகட்கு இரையானபோது, அவ்வவ் வெறியர் திருவள்ளுவரைப் பற்றிப் பலப்பலவாறு கூறலாயினர். வெறி ஏறிய மதியில் உண்மை விளக்குங்கொல்? வெறியற்ற மதிகொண்டு திருக்குறளை ஆராய்க. ஆராய்ந்தால் திருக்குறள், மரபு கடந்த ஒரு நூலாகவே விளங்கும்.

**—'குறளமுதம்' நூலிலிருந்து**
*வெளியீடு : **தமிழ் வளர்ச்சித்துறை***




இன்று காலையிலும் மாலையிலும் உருது மொழி ஒலியை கேட்கின்ற வாய்ப்பினை நான் பெற்றிருக்கிறேன். காலையில் எப்படி என்று கேட்பீர்கள். காஷ்மீரத்துச் சிங்கம் ஷேக் அப்துல்லாவின் திருமகன் பரூக் அப்துல்லா என்னைச் சந்திக்க வந்தபோது, அவருக்கு டெல்லியிலே இருந்து வந்த தொலைபேசியிலே என் இல்லத்தில் என் அருகில் இருந்து தொடர்பு கொண்டு உருது மொழியிலே பேசினார்.

காஷ்மீரத்தில் உருதுமொழி ஆட்சிமொழி. அந்த ஆட்சிமொழியை தன்னகத்தே கொண்டிருக்கின்ற காஷ்மீரத்து முதல்வர் அவர்களின் உருதுமொழி ஒலி காலையிலே. உருது அகாடமியுடைய தொடக்க நிகழ்ச்சி இங்கே நடைபெறுகிறது இன்று மாலையிலே. இந்த இரண்டுக்கும் உள்ள பொருத்தத்தை நான் எண்ணிப் பார்க்கின்றேன். எப்பொழுதுமே என்னுடைய வாழ்க்கையில் இப்படி பொருத்தமான சில காரியங்கள் நடைபெறுவதுண்டு. அது இன்றைக்கும் நடை பெற்றிருக்கின்றது.

**15 தேசிய மொழிகளில் உருது மொழியும் ஒன்று**

இந்திய அரசியல் சட்டப்படி ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள பதினைந்து தேசிய மொழிகளில் உருதுவும் ஒன்று என்பதை யாரும் மறுக்க முடியாது. இது இந்தியாவிலே ஜம்மு காஷ்மீரில் ஆட்சிமொழி; பீகார் மாநிலத்தில் இரண்டாவது ஆட்சிமொழியாக வீற்றிருக்கின்றது. அந்த மொழியினுடைய பெருமைகள் குறித்தும், அதிலே புகழ்பெற்ற புலவர்கள், வல்லுநர்கள் குறித்தும் பேராசிரியர் அவர்களும் மற்றும் உரையாற்றிய பெரியவர்களும் இங்கே எடுத்துக் காட்டியிருக்கின்றார்கள்.

அந்த அகாடமி உருவாக ஒரு வரலாறு உண்டு. பெரிய வரலாறு ஒன்றுமில்லை. சிறிய வரலாறுதான். ஆர்க்காடு இளவரசர் திரு. நவாப் ஜி.எம். அப்துல் காதர் 13-12-1991 நாளிட்ட கடிதத்தில் தமிழ்நாட்டில் உருதுமொழியைப் பரப்பவும், அதன் வளர்ச்சிக்கு உதவிடவும் "உருது அகாடமி" ஏற்படுத்த வேண்டும் என்று அன்றைய தமிழக அரசினை கேட்டுக் கொண்டார். பின்னர், மேலும் பல இஸ்லாமிய அமைப்புகளிடம் இருந்து உருது அகாடமி அமைப்பதற்கான கோரிக்கைகள் வந்த வண்ணம் இருந்தன. எனினும், இது குறித்து முந்தைய அரசினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

# உருது அகாடமி

### உருது அகாடமி அமைக்க இந்த அரசு நடவடிக்கை

1996இல் இந்த அரசு அமைந்த பிறகுதான் உருது அகாடமி அமைப்பதற்கான நடவடிக்கைகள் தொடங்கப்பட்டன. எத்தகைய நடவடிக்கைகள் என்பதையும் விவரிக்க விரும்புகிறேன். பிற மாநிலங்களில் உருது அகாடமி எவ்வாறு செயல்படுகிறது என்பதனைப் பற்றி அறிவதற்கு அதன் அமைப்பு விதிகள் பெறப்பட்டு ஆய்வு செய்யப்பட்டன.

10-8-1999 அன்று உயர்கல்வித் துறையின் சார்பில் நடைபெற்ற கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முடிவின்படி, கர்நாடகம், ஆந்திரம் ஆகிய மாநிலங்களில் உள்ள உருது அகாடமிகள் செயல்படும் முறைகளை அறிந்து, அரசுக்கு அறிக்கை அளித்திட, கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் முத்துவீர கணபதி, சென்னைப் பல்கலைக்கழக உருதுத் துறை பேராசிரியர் சையத் சஜ்ஜட் உசைன் ஆகியோர் அம்மாநிலங்களுக்கு அனுப்பப் பட்டனர்.

அவர்கள் இருவரும் கர்நாடகம் மற்றும் ஆந்திர மாநிலங்களுக்குச் சென்று, அம்மாநிலங்களில் செயல்படும் உருது அகாடமிகள் குறித்து ஆய்வுசெய்து, தமிழக அரசுக்கு அறிக்கைகளை வழங்கினர். அந்த அறிக்கையின் அடிப்படையில், 25-10-1999 அன்று தமிழகத்தில் உருது அகாடமி அமைக்கப்படும் என்று கழக அரசினால் அறிவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 27-2-2000 அன்று தமிழகக் கல்வியமைச்சர் பேராசிரியர் தலைமையில் உருது அகாடமி செயல்படும் என்று தமிழக அரசினால் ஆணையிடப்பட்டது.

அந்த ஆணையைத் தொடர்ந்து, தமிழக அரசின் “உருது அகாடமி” இன்று முறைப்படி தொடங்கி வைக்கப்படுகிறது.

### நட்புக்கு கருவியாக பயன்பட்டது உருது மொழி

வரலாற்று ரீதியாக பார்த்தால் இந்தியாவின் வடபகுதிக்கு இஸ்லாமியர்கள் முதன்முதலாக வந்த காலத்தில் இருந்து இந்த மொழி தன் உருவத்தைப் பெற ஆரம்பித்தது என்று கூறப்படுகிறது. புதிதாக வந்த முஸ்லிம்கள் இந்திய மக்களின் தொடர்புக்கும், நட்புக்கும் ஒரு கருவியாகப் பயன்படுத்திய மொழி உருதுமொழி என்று கருதப்படுகின்றது.

இங்கே பேசிய நிசார் அகமது குறிப்பிட்டார்கள். அவர் பேசியது உங்களுக்கு எப்படி புரிந்தது என்று

**உருதுமொழி வேறு எங்கேயோ உள்ள ஒரு நிலத்தின் மொழி என்று கூறக்கூடாது. உருதுமொழியும் இந்திய மொழிதான் என்பதை நான் வலியுறுத்திக் கூறவிரும்புகிறேன்.**

கேட்காதீர்கள். அவருடைய பேச்சை சுருக்கமாக தமிழிலே எழுதி முதலிலே என்னிடத்திலே கொடுத்திருந்தார்கள். எனவே, அவர் குறிப்பிட்டிருப்பார் என்ற நம்பிக்கையோடு சொல்கிறேன். இந்தியாவில் தமிழ்நாட்டில் இன்றைக்கு எங்களிடத்திலே இஸ்லாமியர்களுக்கும், இங்குள்ள மற்றவர்களுக்கும் இருக்கின்ற உறவு பலமான உறவு; வேறு எங்கும் இல்லா அளவிற்கு இங்கே நட்பும், உறவும் செழித்திருக்கிறது என்று நிசார் அகமது குறிப்பிட்டிருந்தார்.

அப்படி முஸ்லிம்கள் தங்களுடைய கருத்துக்களைப் பரிமாறுவதற்கு ஏற்பட்ட அவசியத்தை நிறைவேற்றுகிற நிலையிலே, ஒரு புதுக்கருவியாக வாய்த்ததுதான் உருதுமொழி என்று சொன்னால் அது மிகையாகாது. அவர்கள் தம் மொழியின் சில சொற்களையும், அந்தப் பகுதியிலே மக்கள் பேசிவந்த இந்திய மொழிச் சொற்களையும் பயன்படுத்தி, தங்களை அறியாமலேயே ஒரு புதுமொழி தோன்றுவதற்கு வழிவகுத்தார்கள். அந்த மொழிதான் படிப்படியாக வளர்ச்சி பெற்று, உருது என்று பெயர் பெற்றது.

### உருது மொழியும் இந்திய மொழிதான்

இந்தியப் பண்பாடும், முஸ்லீம் பண்பாடும் இணைந்தமைக்கு ஒரு பாலமாக உதவிய மொழி என்று உருது மொழியைச் சொல்லலாம். இம்மொழியில் அரபு, பார்சி, துருக்கி, சமஸ்கிருதம், ஆங்கிலம் போன்ற பல மொழிகளில் இருந்தும் சொற்கள் வந்து சேர்ந்துள்ளன. உருதுமொழி வேறு எங்கேயோ உள்ள ஒரு நிலத்தின் மொழி என்று கூறக்கூடாது. உருது மொழியும் இந்திய மொழிதான் என்பதை நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

உருதுமொழியிலே வரலாற்றுக் காரணங்களால் பார்சி - அரபு மொழிகளின் செல்வாக்குப் பலவகைகளில் இடம்பெற்று இருந்தாலும், இலக்கண ரீதியாக இது முற்றிலும் ஓர் இந்திய மொழியாகவே திகழ்கின்றது. உருதுச் சொற்களின் புள்ளிவிவரப்படி, இம்மொழியில் இந்திய மொழிச் சொற்களின் எண்ணிக்கை 73.5 விழுக்காடு ஆகும்.

பார்சி-அரபுச் சொற்களின் எண்ணிக்கை 25.5 விழுக்காடும் மற்ற ஐரோப்பிய மொழிகளின் சொற்கள் 1 விழுக்காடும் அமைந்துள்ளமை தெரிய வருகிறது. ஆகையால் இது அடிப்படையில் ஓர் இந்திய மொழியே என்பதில் ஐயமில்லை.

உருதுவில் மொத்த எழுத்துக்கள் 37. இது பார்சி-அரபு மொழிகளின் வரிவடிவத்தில் எழுதப்படுகின்றது. உருதுமொழி வளர்ச்சிக்கு உதவியவர்கள் பலர் இந்துக்கள் என்று சொல்லும்பொழுது மிகப் பெருமையாக இருக்கிறது. உருது

மொழி வளர்ச்சிக்கு முஸ்லிம்களைத் தவிர, இந்துக்கள் மட்டுமல்ல, சீக்கியர்களும், கிறித்தவர்களும் போற்றத்தக்க வகையிலே தங்களுடைய பங்கினை வழங்கியுள்ளார்கள்.

### முதல் உருது செய்தித்தாளை வெளியிட்ட இந்து அறிஞர்

முதலாவது உருதுக் கசல், ஒரு பிரபலமான உருதுச் செய்யுள் வடிவம், இதனை இயற்றியவர் சுந்தர பான்பிராமன் என்பவர். இவர் ஔரங்சீப் காலத்தில் வாழ்ந்த ஓர் இந்துக் கவிஞர் ஆவார். முதல் உருதுச் செய்தித்தாளை வெளியிட்டவர் ஓர் இந்து அறிஞரான இராசாராம் மோகன்ராய். இராம் பாபு சக்சீனா என்ற ஓர் இந்து ஆசிரியரே உருது இலக்கிய வரலாற்றை முறையாக முதன்முதலில் எழுதினார்.

புகழ்பெற்ற இந்திய நாவல் சிறுகதை ஆசிரியர் பிரேம் சந்த் இந்து குடும்பத்தைச் சார்ந்தவர். இவர் அடிப்படையில் ஓர் உருது எழுத்தாளர் என்பது குறிப்பிடத் தக்கது. இந்தியாவில் மேன்மைக் குரிய இலக்கியப் பரிசாக விளங்குவது ஞானபீடப் பரிசு. இப்பரிசைப் பெற்ற இரகுபதி சஹாய்பிராக் கோரக்பூரி ஓர் உருது கவிஞர். இவர் ஓர் இந்துக் குடும்பத்தைச் சார்ந்த ஆங்கிலப் பேராசிரியர்.

### சிறப்பு வாய்ந்தவை இக்பாலின் கவிதைகள்

இக்பால் பற்றி கேள்விப் பட்டிருக்கிறோம். இக்பாலின் உருதுமொழிக் கவிதைகள் சிறப்பு வாய்ந்தவை; எழுச்சி வாய்ந்தவை; ஆங்கில முறையைத் தழுவி கற்பனை, கருத்து, மொழிநடை முதலியவற்றில் உருதுமொழியை செழித்தோங்கச் செய்தவர்களில் இக்பால் குறிப்பிடத்தக்கவர். இவர் மேனாட்டுக் கருத்துக்கள், பண்பாடு முதலியவற்றை மதிப்பிட்ட சிறந்த கவிஞர்; கீழ்நாட்டு மக்களுடைய குறைகளையும் உணர்ந்து கண்டித்துள்ளார். விடுதலை, அமைதி, சகோதரத்துவம், சமத்துவம் முதலியவற்றை இக்பால் மக்களுக்கு எடுத்தோதினார்.

இவருடைய கவிதைகளை ஆய்வு செய்து பெரிதும் பாராட்டி எழுதியவர்கள் பலர். அவர்களில் அரியானா மாநில ஆளுநராக விளங்கிய சையத் முசாபர் ஹூசைன் பர்னே அவர்கள் குறிப்பிடத்தக்கவர். அவர் "IQBAL - Poet - Patriot of India" என ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்ட நூலில் இக்பாலின் கவிதைகளை மிகவும் போற்றிப் பாராட்டியுள்ளார்.

"After 1970, there was a renaissance of Iqbal's poetry in India. In his poetry, India is referred to as the 'best country in the World'. He admired its unique way of life, its undying civilization and wrote some of the finest verses to its mountains, rivers and valleys"

### இந்தியாவில் மறுமலர்ச்சியை ஏற்படுத்திய இக்பால் கவிதைகள்

அதாவது,

“1970ஆம் ஆண்டிற்குப் பின், இக்பாலின் கவிதைகள் இந்தியாவில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தின. அவர் தமது கவிதைகளில் இந்தியாவை “உலகின் மிகச்சிறந்த நாடு” என்று குறிப்பிடுகிறார். இந்தியாவின் சிறந்த வாழ்க்கை முறையையும், இறவாப் புகழ் படைத்துள்ள இதன் பண்பாட்டுச் சிறப்பையும் எண்ணிப் பெருமிதம் அடைகிறார். இந்தியாவின் மலைகள், ஆறுகள், பள்ளத்தாக்குகள் ஆகியவற்றின் மீது சிறந்த பாடல்களை எழுதியுள்ளார்.

### நாட்டுப்பற்றை குறிக்கும் இக்பாலின் கவிதைகள்

இக்பாலின் உருதுக் கவிதைகளை மிக அருமையாக பர்னே புகழ்ந்திருப்பதற்கு இது ஒரு சான்றாகும்.

இக்பாலின் கவிதைகளில் நாட்டுப்பற்றைக் குறித்த கவிதைகள் ஒன்றிரண்டை உங்கள் முன்னால் வைக்க விரும்புகிறேன்.

**“இவ்வுலகில் நீ வாழ விரும்பினால்**
**உன் அன்பிற்குரிய ஒருவரை**
**உன்னிடமிருந்து**
**பிரிக்கச் செய்திடும்**
**வேற்றுமைகளுக்கு நீ**
**இடம் கொடுத்திடாதே!**
**மாந்தர்களிடம் செலுத்தும் அன்பு**
**இன்பச் சுவைதரும் பழரசம்**
**போன்றது”**

– என்கிறார்.

மனித நேயத்தை வலியுறுத்திய இக்பால் மற்றொரு கவிதையில்,

**“அறிந்தோர், அறியாதார்;**
**செல்வர், வறியோர்**
**அனைவரிடமும் அன்புகாட்டு”**

இக்பாலின் உருதுக்கவிதை வலியுறுத்தும் சீரிய கொள்கை ஒன்று, நான் மிகவும் ரசித்த கவிதை இது.

**முதலாவது உருதுக் கசல், ஒரு பிரபலமான உருதுச் செய்யுள் வடிவம் இதனை இயற்றியவர் சுந்தர பான்பிராமன் என்பவர். இவர் ஔரங்சீப் காலத்தில் வாழ்ந்த ஓர் இந்துக் கவிஞர் ஆவார். முதல் உருதுச் செய்தித்தாளை வெளியிட்டவர் ஓர் இந்து அறிஞரான இராசாராம் மோகன்ராய். இராம் பாபு சக்சீனா என்ற ஓர் இந்து ஆசிரியரே உருது இலக்கிய வரலாற்றை முறையாக முதன்முதலில் எழுதினார்.**

**“மரணமே இறுதியானது**
**என்பதை**
**நான் அறிவேனாதலால்**
**நீண்ட ஆயுளை நான்**

**விரும்பவில்லை!**
**ஆடுகளைப் போல்**
**அடிமைகளாக**
**நூறாண்டுகள் வாழ்வதைக்**
**காட்டிலும்,**
**சிறிது காலமே ஆயினும்**
**சிங்கம்போல் வாழ்வதே சிறப்பு"**

இது என் உள்ளத்தை கவர்ந்ததில் ஆச்சரியம் இருக்காது என்பது உங்களுக்குத் தெரியும் என்று நான் நம்புகிறேன்.

தமிழில் மொழி பெயர்த்த இக்பாலின் கவிதைகள்.

கவிஞர் ஈரோடு தமிழன்பன் நல்ல கவிஞர் என்பது உங்களுக்குத் தெரியும். அவர் இக்பாலின் கவிதைகளை தமிழிலே மொழி பெயர்த்திருக்கிறார். அதில் ஒன்றிரண்டை உங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**உறங்கும்**
**குழந்தையின் கையில் இருந்து**
**வண்ணப் பொம்மைகள்**
**நழுவி**
**விழுவதுபோல்,**
**இலையுதிர் காலத்தில்**
**பூக்களின் இதழ்கள்**
**பூமியில் உதிர்கின்றன.**

**வாழ வேண்டுமா –**
**அப்படியானால்**
**ஆபத்துகளிடையே**
**வாழுங்கள்**

**'சுறா மீனின் ஆபத்து இல்லாத**
**கடலில்**
**எனது படகைச் செலுத்த**
**மாட்டேன்'**

ஆபத்து இருக்கிற இடத்திலே தான் துணிந்து செல்லவேண்டும். ஆபத்தை நோக்கி எதிர்நீச்சல் போடவேண்டும். எதிர்நீச்சல் போடுவதற்காக ஒரு இயக்கம் தமிழ்நாட்டில் தொடங்கியதும், அது பெரியாரின் கண்டுபிடிப்பாக இருந்ததும், அண்ணாவின் வழிகாட்டுதலோடு நாங்கள் எல்லாம் அந்த இயக்கத்திலே இருப்பதும் நீங்கள் அறியாதது அல்ல. அதைத்தான் இக்பால் சுட்டிக்காட்டுகிறார்.

**'இளம்பிறையே!**
**உனது**
**ஏழ்மை கண்டு வருந்தாதே**
**பூரண நிலா – உன்னுள்தான்**
**புதைந்திருக்கிறது'**

இளம்பிறையாக ஒரு கீற்று மாதிரி இருக்கும்பொழுது, அதிகம் சொத்து சுகமில்லாத ஏழ்மை நிலை நிலாவுக்கு என்று எண்ணத் தோன்றுகிறதாம். அப்படி எண்ணாதே, வருத்தப்படாதே. உனக்குள்ளேதான் பூரண நிலா இருக்கிறது. இன்னும் பதினைந்து நாட்களில் வெளியே வரும் என்று மிக அழகாக அந்தக் கவிதை வெளியிடப்பட்டிருக்கிறது. அப்படியே மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது.

**இன்றின்**
**கர்ப்பத்திலிருந்து**
**புதிய சூரியன் பிறந்து**
**விட்டான்.**
**முழுகிப் போன**
**நட்சத்திரங்களை எண்ணி**
**இன்னும் எத்தனை காலம்**
**ஆகாயம் துக்கம்**
**அனுசரிக்கும்?**
**பறக்க வேட்கை**
**படைத்தவர்கள்**
**நதிகளையே ஒப்புவதில்லை**
**உனது ஆற்றலை உணராது**
**எத்தனை காலம்**
**பனித்துளிகளைச்**
**சட்டைப்பையில் நிரப்பிக்**
**கொண்டிருப்பாய்?**
**பூக்களும் கனிகளும்**
**கொண்டுவரும்**
**வசந்தஅலை,**
**காத்திருக்கும்**
**தோட்டக்காரனிடம் கேட்கும்**
**'காயம்பட்ட ரோஜாவுக்குக்**
**களிம்பு தேடி**
**எத்தனை காலம் இன்னும்**
**அலைவாய்?'**

### உருது அகாடமி ஆற்ற வேண்டிய பணிகளில் இவையும் இனையும்

இத்தகைய கவிதைகளை எல்லாம் நான் படித்துக் காட்டுவதற்கு காரணமே இந்த உருது அகாடமி ஆற்ற வேண்டிய பணிகளில் இவைகளும் இணையும் என்பதற்காகத்தான் கூறுகிறேன்.

இங்கே துணைத்தலைவர் பேசும்போது ஆரோக்கியமான இலக்கியங்களை எல்லாம் பரப்புவோம்; கவிதா மண்டலங்கள் நடத்துவோம்; அதுமாத்திரம் அல்ல, மாணவர்களிடத்திலே, இளைஞர்களிடத்திலே இந்த இலக்கியப் புதுமைகளை எல்லாம் கொண்டு சேர்ப்போம் என்றெல்லாம் குறிப்பிட்டார்.

அதற்கு இந்த உருது அகாடமி நிச்சயமாக வழிவகுக்கும். வழிவகுப்பதற்காகத்தான் இது தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றது.

இத்தகைய உருமொழியின் இலக்கியங்கள் பற்றி எனக்கும், பேராசிரியருக்கும்கூட இதிலே சுயநலம் உண்டு. உருது மொழியிலே இப்படிப்பட்ட இலக்கியங்களை படித்துக் காட்டினேனே – இக்பாலின் கவிதைகளைப் போன்ற எவ்வளவு அருமையான கவிதைகள், செய்யுள்கள் உருதுமொழியில் இருக்கக்கூடும். அவைகளை எல்லாம் நாங்கள் படிப்பதற்காகவாவது தமிழிலே வரவேண்டும் அல்லவா? அதற்கு இந்த அகாடமி பயன்படவேண்டும் என்று நான் விரும்புகின்றேன்.

### பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் உருதுபேசும் முஸ்லிம்கள்

இங்குள்ள இஸ்லாமியர்கள் எல்லா நன்மைகளையும் பெறுகிறார்கள் என்று சொன்னார்கள். முதலிலே ஒன்றை சொல்கிறேன். உருதுபேசுகின்ற முஸ்லிம்களுக்கு ஒரு கோரிக்கை நீண்டகாலமாக இருந்தது. நான் கடந்த காலத்திலே இரண்டாவது முறையாக முதலமைச்சராக இருந்தபோது சட்டப்பேரவையிலே உருது பேசுகின்ற முஸ்லிம்களைப் பின்தங்கிய சமுதாயத்தில் சேர்க்கவேண்டும் என்று ஒரு வாதம் நீண்டநேரம் நடைபெற்றது. அப்பொழுது என்னுடைய அமைச்சரவையிலே இருந்த பிற்படுத்தப்பட்ட நலத்துறை அமைச்சர் எழுந்து, "உருது பேசுகின்ற முஸ்லிம்களைப் பின்தங்கியோர் பட்டியலில் சேர்க்க

இடமில்லை” என்று சொன்னார்.

ஏன் இடமில்லை என்று எதிர் வரிசையில் இருந்த முஸ்லிம் சட்டமன்ற உறுப்பினர்கள் கிளர்ந்தெழுந்தார்கள்.

**நம்பிக்கையோடு வாழுங்கள் – உங்களோடு எப்போதும் நாங்கள் இருப்போம்**

நான் எழுந்து என்னுடைய அமைச்சரை உட்காரச் சொல்லி விட்டு அமைதியாகச் சொன்னேன். “சட்டத்திலே இடமில்லை என்கிறார் அமைச்சர், பரவாயில்லை. சட்டத்திலே இடம் இல்லாவிட்டாலும் என் இதயத்திலே இடம் இருக்கிறது” என்று சொல்லி, உருது பேசுகின்ற முஸ்லிம்களும் இனிமேல் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இடம் பெறுவார்கள் என்று அறிவித்தேன். அது உங்களுக்குத் தெரியும்.

நபிகள் நாயகத்தினுடைய விழா விடுமுறையோடு சம்பளத்தோடு கூடிய விழாவாக தமிழகத்திலே முதன்முறையாக அறிவித்து செயல் படுத்திய அரசு இந்த அரசு என்பதை நீங்கள் அறிவீர்கள். இந்த அரசை பின்பற்றித்தான் இந்திய அரசு வி.பி.சிங் காலத்திலே அதனை அறிவித்தது என்பதனையும் நீங்கள் அறிவீர்கள். எனவே என்றென்றும் உங்களோடு இருப்பவர்கள் நாங்கள்; எப்பொழுதும் இருப்போம். நீங்களும் அவ்வாறே அந்த நம்பிக்கையோடு வாழலாம் என்பதைத் தெரிவித்து இந்த உருது அகாடமியை தொடங்கி வைப்பதிலே அளவற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

**– தமிழ்நாடு அரசு உருது அகாடமியை 21-7-2000 அன்று சென்னையில் தொடங்கிவைத்து முதலமைச்சர் கலைஞர் ஆற்றிய உரை.**

★ ★ ★

**இந்தியாவின் சிறந்த வாழ்க்கை முறையையும், இறவாப் புகழ் படைத்துள்ள இதன் பண்பாட்டுச் சிறப்பையும் எண்ணிப் பெருமிதம் அடைகிறார். இந்தியாவின் மலைகள், ஆறுகள், பள்ளத்தாக்குகள் ஆகியவற்றின் மீது சிறந்த பாடல்களை எழுதியுள்ளார்.**

# தமிழகத்திலேயே முதன்முறையாக காவல்துறையினருக்கென தனி நூலகம்

கோவை மாநகர் காவல் ஆளிநர்கள், அவர்தம் குழந்தைகள், குடும்பத்தினர் மற்றும் கோவை மாநகர்க் காவல் அலுவலகப் பணியாளர்கள் அனைவரும் படித்துப் பயனுறும் வண்ணம் முதன் முறையாக நவீன நூலகம் ஒன்று ஆயுதப் படை வளாகத்தினுள் அமைக்கப்பட்டு உள்ளது. இந்த நூலகத்தில் விலை உயர்ந்த சுமார் 3,000 புத்தகங்கள் உள்ளன. (கணினி புத்தகங்களும், Encyclopedia-க்களும் இதிலடங்கும்) இவற்றைத் தவிர, நாளிதழ்களும், பருவ இதழ்களும் இடம் பெறுகின்றன. இவை அனைத்தையும் காவல் ஆளிநர்களின் குழந்தைகள் ஆர்வத்தோடு படித்தும், குறிப் பெடுத்தும், தங்களது அறிவுத் திறனை வளப்படுத்திக் கொள் கின்றனர்.



தமிழகத்திலேயே முதன் முறையாக காவல் துறையினருக் கென செயல்பட்டு வரும் இந்த நூலகம் அனைவரின் பாராட் டினையும், வரவேற்பையும் பெற்றுள்ளது. காவல் ஆளிநர் களின் குழந்தைகளின் அறிவு ஊற்றுக் கண்ணை திறந்து வைக்கும் அரிய பெட்டகமாக விளங்கும் இந்த நூலகத்திற்கென மேலும் வாழ்க்கைக்குப் பயனுள்ள புத்தகங்களை வாங்கவும் முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த நூலகத்தை நிர்வகிக்க மாவட்ட நூலகத்தில் இருந்து உதவியாளர் ஒருவர் நியமிக்கப் பட்டுள்ளார். தமிழக காவல் துறைக்கே பெருமை சேர்ப்பதாக இந்நூலகம் அமைந்துள்ளது

**போலீஸ் செய்தி மடலிலிருந்து...**

● ● ●

# பக்கிங்காம் கால்வாய் புனரமைப்பு

பக்கிங்காம் கால்வாய் தமிழ்நாட்டைச் சார்ந்த கடலூர் மாவட்டத்தில் உள்ள மரக்காணம் கழிமுக பகுதியில் தொடங்கி ஆந்திர மாநிலத்தைச் சார்ந்த கிருஷ்ணா மாவட்டத்தில் உள்ள (கோதாவரி கழிமுகம்) பெத்த கஞ்சம் பகுதி வரை மொத்தம் 418 கிலோ மீட்டர் தூரம் அமைந்துள்ளது.

கூவம் ஆற்றின் வடக்கு பகுதியில் அமைந்த கால்வாய் வடக்கு பக்கிங்காம் கால்வாய் என அழைக்கப்படுகின்றது. அதன் மொத்த நீளம் தமிழ்நாட்டு எல்லை பகுதியில் 58 கிலோமீட்டர் நீளம் உள்ளது. தென்பகுதியில் அமைந்துள்ள



கால்வாயை தென்பக்கிங்காம் கால்வாய் எனவும் அழைக்கப்படுகின்றது. இதன் மொத்த நீளம் 105 கிலோமீட்டர் ஆகும். இந்த தென்பகுதி கால்வாயில் நிளவாட்டத்தில் "0" கி.மீ. முதல் 8.84 கிலோமீட்டர் வரை உள்ள கால்வாயை மத்திய பக்கிங்காம் கால்வாய் என அழைக்கப்படுகின்றது. இது அடையாரையும் கூவத்தையும் இணைக்கின்றது.

சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் எல்லைக்குள் இக்கால்வாய், மொத்த நீளம் 49.70 கி.மீ. ஆகும். இதில் 22.04 கி.மீ. நீளமுள்ள கால்வாயின் தூர்வாரும் பணி 96–98 ஆண்டில் முடிக்கப்பட்டுவிட்டன. மீதமுள்ள 27.66 கி.மீ. நீளத்திற்குக் கால்வாய் தூர் வாரி புனரமைக்கும் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### தூர் வாரும் பணி

இப்பணியில் தூர் எடுக்கப்பட வேண்டிய மொத்த மண் அளவு 9,92,000 கன மீட்டராகும். அதில் 30–6–2000 முடிய தூர் வாரப்பட்ட அளவு 6,44,000 கன மீட்டராகும். அதாவது தெற்கு பக்கிங்காம் கால்வாயில் மொத்தமுள்ள நீளம் 23,860 மீட்டரில் 15,000 மீட்டர் தூர் வாரும் பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டுவிட்டன. எஞ்சிய கால்வாயில் தூர் வாரும் பணி நடைபெற்று வருகின்றன. வடக்கு பக்கிங்காம் கால்வாயில் கால்வாய் அகலப்படுத்த உத்தேசிக்கப்பட்ட நீளம் 1,800 மீட்டரில் 1,400 மீட்டருக்கு பணி முடிவடைந்துள்ளது. எஞ்சிய பணி இன்னும் ஒருமாத காலத்திற்குள் முடிவடையும். மத்திய பக்கிங்காம் கால்வாயில்

உத்தேசிக்கப்பட்ட இடங்களில் தூர்வாரும் பணிகள் முடிவடைந்துள்ளன.

### ஈப்பு பாதை அமைக்கும் பணி (Jeep Tracks)

ஈப்பு பாதை, வடக்கு பக்கிங்காம் கால்வாயில் சுமார் 10 கி.மீ. தூரத்திற்கு சாலை அமைக்க கரைக்கு மண் நிரப்பப்பட்டு, கிராவல் மற்றும் மணல் — கிராவல் கலந்த கலவையும் நிரப்பப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. தெற்கு பக்கிங்காம் கால்வாயில் ஈப்பு பாதை பணிகள் துவங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

### வெள்ளத்தடுப்பு சுவர் கட்டும் பணி

பக்கிங்காம் கால்வாயில் வெள்ளத் தடுப்பு சுவர் கட்டவேண்டிய மொத்த நீளம் 2,910 மீட்டராகும். அதில் எண்ணூர் வார்பு அருகில் [illegible]20 மீட்டரும், மத்திய பக்கிங்காம் கால்வாயில் 110 மீட்டர் அளவுக்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய பகுதிகளில் பணிகள் நடைபெற்று வருகின்றன.



இப்பணியை திருவாளர்கள் லார்சன் மற்றும் டியூப்ரோ அவர்கள் செய்து வருகின்றனர். பணிகள் 27—9—99 அன்று துவக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. இந்த பணிகள் அனைத்தும் 30—6—2001க்குள் முடிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

### சுற்றுலா முக்கியத்துவம்

தற்போது நடைபெற்று வரும் புனரமைப்பு பணிகளின் கீழ் துரைப்பாக்கம் முதல் முட்டுக்காடு வரை சுமார் 15 கி.மீ. தூரத்திற்கு கால்வாய் தூர் வாரப்பட்டு, படகு போக்குவரத்துக்கு உகந்ததாக ஆக்கப்பட்டுள்ளது.

இந்த பகுதி சுற்றுலா தலங்கள் நிறைந்ததாக உள்ளது. முட்டுகாடு படகு குழாம், வி.ஜி.பி. தங்கக் கடற்கரை, எம்.ஜி.எம். போன்ற சுற்றுலா மையங்கள் பொதுமக்கள் வெகுவாக விரும்பி செல்லும் இடங்களாக உள்ளன. தற்போது முட்டுகாடு முதல் துரைப்பாக்கம் வரை பக்கிங்காம் கால்வாயில் படகு போக்குவரத்து வசதிகள் அமைப்பதன் மூலம், சுற்றுலா பயணிகள் மன மகிழ்ச்சி அடைவார்கள். மேற்கண்ட சுற்றுலா தலங்களை இணைப்பதன் மூலம், சுற்றுலா துறையையும் மேம்படுத்த வாய்ப்புகள் உள்ளன. மேலும் சாலையின் வழியாக செல்லும் போக்குவரத்து நெரிசலையும் தவிர்க்கலாம். சுற்றுலா துறையின் மூலம் இதை செயல்படுத்தினால் பொதுமக்கள் பெரிதும் பயனடைவார்கள்.

பக்கிங்காம் கால்வாய் 1966 வரை படகு போக்குவரத்துக்கு உபயோகிக்கப்பட்டு வந்தது. சான்றாக 1934இல் பாவேந்தர் பாரதிதாசன் தன் நண்பர்களுடன் இக்கால்வாயில் படகு மூலம் சென்னையிலிருந்து மகாபலிபுரம் சென்றுள்ளார். அவர் படகில் சென்ற அனுபவத்தையும், அடைந்த மகிழ்ச்சியையும் ஒரு கவிதையின் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளார். ஆனால் 1966 மற்றும் 1984ஆம் ஆண்டுகளின் ஏற்பட்ட புயல்களினால் கால்வாய் தூர்ந்து போய்விட்டதால் படகு போக்குவரத்து முழுதும் நிறுத்தப்பட்டுவிட்டது.

தற்போது புனரமைப்புப் பணிகள் செயலாக்கம் செய்வதின் மூலம் மீண்டும் படகு போக்குவரத்துக்கு சாத்தியம் ஏற்பட்டுள்ளது.

★ ★ ★



சேர்ந்து
நிழற்படம்
எடுத்துக்கொண்டு
அடிக்கடி
மடல் எழுதுவதாகச்
சொல்லிக் கொண்டு
பிரிகிற நட்பின் வலியை
மறைத்துக்
கொள்வதற்காகத்தான்
மனைவியிடமும்
பிள்ளைகளிடமும்
பேத்திகளிடமும்கூட
சிரிக்கச்
சிரிக்கப்
பேசுகிறார்கள்
இவர்கள்.

□ அறிவுமதி

- 'நட்புக்காலம்' கவிதையிலிருந்து

# தமிழக கிராமங்கள் அனைத்துக்கும் மின்வசதி

## – கயத்தாறில் பிரதமர் புகழாரம்

இந்த புனிதமான கயத்தாறு மண்ணில் கால்பதிக்க நான் மிகவும் சந்தோசப்படுகிறேன். சுதந்திர இந்தியாவின் வரலாற்றில் இந்த இடத்திற்கு ஒரு கவுரமான இடம் உண்டு. ஏனென்றால் இது வீரபாண்டிய கட்டபொம்மனின் நினைவுகளுடன் தொடர்பு உடைய மண்.

18ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயர்களால் தூக்கிலிடப்பட்ட அவர் இந்தியாவின் முதல் சுதந்திரப் போராட்ட வீரர்களில் ஒருவர், ஆனாலும் வீர பாண்டிய கட்டபொம்மன் பற்றியும், அவரது வீரதீர செயல்கள் பற்றியும் இந்தியாவின் வடபகுதிகளில் சரியாக தெரியாமல் போனதற்காக நான் வருத்தப்படுகிறேன்.

தமிழ்நாடு தைரியமானவர்களையும், தேச பக்தர்களையும் உடைய பூமி. கட்டபொம்மனைப் பின்பற்றி இங்கு ஏராளமான ஆண்களும், பெண்களும் விடுதலை இயக்கத்தில் பங்கு பெற்றனர். தங்கள் எழுத்தாற்றலால் பலர் விடுதலைக்கு வித்திட்டார்கள். அவர்களில் சுப்பிரமணிய பாரதியாரும், வ.உ.சிதம்பரம் பிள்ளையும் குறிப்பிடத்தக்கவர்கள்.

அவர்களைபோல் நமக்கு தெரிந்த பல சுதந்திர வீரர்கள், இன்னும் தெரியாத எண்ணற்றோரின் தியாகங்களால் தான் இன்று நாம் சுதந்திரத்தை அனுபவிக்கிறோம்.

எனவே, கட்டபொம்மனுக்கும் இந்திய சுதந்திரத்திற்காக பாடுபட்ட தமிழகத்தைச் சேர்ந்த சுதந்திர போராட்ட வீரர்களுக்கு நான் தலை வணங்கி மரியாதை செய்கிறேன். அவர்கள் இந்திய சுதந்திரத்திற்காக போராடினார்கள். இப்போது நாம் இந்தியாவின் அனைத்துத்துறை வளர்ச்சிகளுக்காக போராடிக்கொண்டிருக்கிறோம்.

### இணைந்து பணியாற்றுங்கள்

இன்னொரு காரணத்திற்காகவும், இங்கு நாம் கட்டபொம்மனை நினைத்துப் பார்க்க வேண்டிய தேவை இருக்கிறது. கட்டபொம்மனும், அவருடன் சேர்ந்த விடுதலைப் போராட்ட வீரர்களும் தென் தமிழகத்தின் பல்வேறு சாதி மற்றும் சமுதாயங்களைச் சேர்ந்தவர்கள். ஆனால், தங்கள் தாய்நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்காக ஒன்றுசேர்ந்து செயல்பட்டனர்.

எனவே, தமிழகத்தைச் சேர்ந்த வெவ்வேறு சாதி மற்றும் சமுதாய மக்களைக் கேட்டுக் கொள்கிறேன். நீங்களும் அதைப்போல் உங்கள் மாநில வளர்ச்சிக்காகவும், நர்ட்டின் வளர்ச்சிக்காகவும் இணைந்து பணியாற்றுங்கள்.

### மின் உற்பத்தியில் தமிழகம் முதலிடம்

இன்று இங்கு 15 மெகாவாட் காற்று மின்சக்தி திட்டத்தை நாட்டிற்கு அர்ப்பணிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். தமிழக அரசு மற்றும் மக்களின்



தொலைநோக்குப் பார்வையை நான் பாராட்டுகிறேன். நம்நாட்டில் உள்ள மொத்த காற்று மின் உற்பத்தியில் 70 சதவீதக் காற்று மின்சக்தி உங்கள் மாநிலத்தில் இருந்துதான் கிடைக்கிறது. காற்று மின் சக்தி திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்தும் பெருமை தமிழ்நாட்டிற்கு உண்டு. மேலும், சர்க்கரை ஆலை கழிவுகளில் இருந்து மின்சாரம் தயாரிப்பதிலும் இந்தியாவில் தமிழகம்தான் முன்னணியில் உள்ளது.

### முதல்வரின் துடிப்பான தலைமை

இதற்காக எனது நண்பர் கருணாநிதியை, அவரது சகாக்களையும் பாராட்டுகிறேன். அவர்து துடிப்பான தலைமையின்கீழ் இந்த பெருமையான இலக்கை அடைந்துள்ளீர்கள். விரைவிலேயே மின்உற்பத்தியில் தமிழகம் தனது முழு சக்தியையும் எட்டும். நாட்டின் வளர்ச்சிக்கும், மின்உற்பத்திக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. விவசாயம், தொழில்துறை போன்ற துறைகளில் வேகமான வளர்ச்சி பெற வேண்டுமானால் மின்சக்தி அவசியம். துரதிர்ஷ்டவசமாக மின்உற்பத்திக்கு சரியான கொள்கை வகுப்பதில் நாம் தவறிவிட்டோம்.

### மின்வசதி பெற்ற தமிழக கிராமங்கள்

அதன் பயனாக பல மாநிலங்கள் மின்தட்டுப்பாட்டை சந்தித்து வருகின்றன. இதன் காரணமாக பொருளாதார, சமூக வளர்ச்சியும் தடைபடுகிறது. உதாரணத்திற்கு, இன்றும்கூட நம்நாட்டில் 7 கோடியே 70 இலட்சம் வீடுகள், அதாவது சுமார் 35 கோடி மக்கள் மின்வசதி இல்லாமல் இருக்கிறார்கள். ஆனாலும் நான் சொன்னது தமிழ்நாட்டிற்குப் பொருந்தாது. இங்கு 100 சதவீதம் அனைத்து கிராமங்களிலும் மின்வசதி செய்யப்பட்டிருக்கிறது.

இந்த மலிவான, சுற்றுச்சூழல் பாதிப்பு இல்லாத மின் தயாரிக்கும் முறையில் இன்னும் நாம் அதிகம் சாதிக்க வேண்டியிருக்கிறது. இயற்கையான முறையில் மின்சக்தி தயாரிக்கும் அனைத்து வழிகளையும் மேம்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. 2012ஆம் ஆண்டில் மின்உற்பத்தி 10 ஆயிரம் மெகாவாட் அதிகரிக்க கொள்கை முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இதற்காக தேவையான முதலீடுகளைச் செய்யும்படி தொழில் அமைப்புகளை கேட்டுக்கொள்கிறேன்.

மின்சக்தியைப் பெருக்குவதில் மாநிலங்களுக்கு முக்கிய பங்கு இருக்கிறது. இதில் தமிழகத்தை மற்ற மாநிலங்கள் பின்பற்ற வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**– தூத்துக்குடி மாவட்டம் கயத்தாறில் 5-7-2000 அன்று காற்றாலை மின் உற்பத்தித் திட்டத்தை தொடங்கி வைத்தும் ஆய்வு மையத்தை திறந்துவைத்தும் பிரதமர் திரு. வாஜ்பாய் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து. ●**

## நூறு சதவிகிதம் வீட்டுவரி வசூல் செய்யும் ஊராட்சிகளுக்கு சலுகைகள்

நிதி ஆணையத்தின் பரிந்துரையின்படி, 2000–2001ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டில் 15 சதவிகிதம் சமன்பாட்டு மற்றும் ஊக்க நிதியாக ரூ.93.27 கோடியை பகிர்ந்தளிக்க அரசு ஆணையிட்டுள்ளது.

இந்த சமன்பாட்டு மற்றும் ஊக்க நிதியை பின்வருமாறு ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒதுக்கீடு செய்து அரசு ஆணையிட்டுள்ளது :

- வருவாய் குறைவான, நலிந்த ஊராட்சிகள் குடிநீர் கட்டணத் தொகையைச் செலுத்த வழிவகை செய்ய ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ரூ.12.50 இலட்சம்.
- வருவாய் குறைவான, நலிந்த ஊராட்சிகளுக்கு மின் கட்டணத் தொகையை செலுத்துவதற்கு வழிவகை செய்ய ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ரூ.12.50 இலட்சம்.
- ஊராட்சிகளிடையே உள்கட்டமைப்பு வசதிகளில் சமன்பாடு ஏற்படுத்தவும் நலிவுற்ற ஊராட்சிகள், சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த ஊராட்சிகள், முக்கிய நகரங்களின் அருகிலுள்ள ஊராட்சிகள், இயற்கைச் சீற்றத்தால் பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ள கடலோர மற்றும் மலைப்பகுதி ஊராட்சிகளில், போதிய அடிப்படை வசதிகள், குடிநீர், தெருக்கள் மேம்பாடு, வடிகால் வசதி, சந்தைகள் மேம்பாடு போன்றவற்றை ஏற்படுத்த ஊராட்சிகளுக்கு ரூ.7.15 கோடி, ஊராட்சி ஒன்றியங்களுக்கு ரூ.8 கோடி.
- பத்தாயிரம் புதிய தெரு விளக்குகள் அமைக்கவும், இரண்டாயிரம், குழல் விளக்குகளைச் சோடியம் விளக்குகளாக மேம்படுத்தவும் ஊராட்சிகளுக்கு ரூ.12 கோடி.
- வருவாய் குறைவான ஊராட்சி ஒன்றியங்கள் நிருவாகச் செலவை மேற்கொள்ள நிதியுதவியாக 20 ஊராட்சி ஒன்றியங்களுக்கு, தலா ரூ.10 இலட்சம்.
- பழுதடைந்துள்ள 84 சமையல் அறைக் கட்டடங்கள், 1,529 சத்துணவு மையங்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்ட மைய கட்டடங்கள் பழுது பார்ப்பதற்காக ஊராட்சி ஒன்றியங்களுக்கு ரூ.3.66 கோடி.
- நிதிவசதி மற்றும் அடிப்படை வசதிகளில் நலிவுற்றுள்ள ஊராட்சிகளில் உள்ள தெருக்களைத் தூய்மையாக வைத்து இருக்கவும், சுகாதாரத்தை மேம்படுத்தவும் கான்கிரீட் தெருக்கள் அமைக்க மத்திய நிதிக்குழு மானிய நிதியுடன் ஈட்டு மானியமாக ஊராட்சிகளுக்கு ரூ.10 கோடி.
- குடிநீர் வழங்கல் மற்றும் பணி பராமரிப்பிற்காக ஊராட்சி ஒன்றியங்களின் கைப்பம்பு பொருத்துநர்களைக் கொண்டு சுழல்நிதி ஏற்படுத்தி, தொழில்நுட்ப சேவைக்குழு அமைக்க ஊராட்சிகளுக்கு ரூ.2.85 கோடி ஒதுக்கீடு.
- 100 விழுக்காடு வீட்டுவரி வசூல் செய்யும் ஊராட்சிகளுக்கு ஒரு ரூபாய் வசூலுக்கு 3 ரூபாயும், 80 விழுக்காட்டிற்கு மேல் வீட்டுவரி வசூல் செய்தால் 2 ரூபாயும், 80 விழுக்காட்டிற்குக் குறைவாக வீட்டுவரி வசூல் இருந்தால், ஒரு ரூபாய் வரி வசூலுக்கு ஒரு ரூபாயும் ஊக்க நிதியாக, ஆகமொத்தம் ரூ.37.92 கோடி வழங்கப்படும்.
- புதியதாக சமத்துவ மயானம் அமைக்கும் ஊராட்சிகள் ஒவ்வொன்றுக்கும் ரூ.1.50 இலட்சம். ★

"இன்று நடைபெறுகின்ற இந்த விழாவிலே திறக்கப்பட உள்ள கட்டிடங்கள், அடிக்கல் நாட்டப்பட உள்ள திட்டங்கள் என்று அறிவிக்கப்பட்டு இவற்றை நான் உங்கள் முன்னிலையிலே நிறைவேற்றி வைத்திருக்கிறேன். 127 கோடியே 76 இலட்சத்து 32 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலே கட்டப்பட்டுள்ள 46 கட்டிடங்களும் திட்டப் பணிகளும் திறந்துவைக்கப்பட்டுள்ளன. 45 கோடியே 57 இலட்சத்து 58 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான 16 திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளன. ஒரு கோடியே 58 இலட்சத்து 86 ஆயிரத்து 800 ரூபாய் மதிப்புடைய நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு – அடையாளபூர்வமாக நான்கைந்து பேருக்கு நானும் எஞ்சியோருக்கு அதிகாரிகள் மூலமாகவும் வழங்கப்படவிருக்கின்றன. ஆகமொத்தம் 174 கோடியே 92 இலட்சத்து 76 ஆயிரத்து 800 ரூபாய் மதிப்பீட்டிலான பல்வேறு பணிகள் இன்றைய விழாவின் மூலமாக செயலுக்கு வருகின்றன என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.




சிப்காட் தொழில் வளர்ச்சி மையம் ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் 71–72ஆம் ஆண்டுகளில் தொடங்கப்பட்டு, அதனுடைய ஒரு கூறாக இன்றைக்கு இங்கே இந்த விழா தொடக்க விழாவாக இந்தப் பகுதிக்கு நடைபெறுக் கொண்டிருக்கின்றது.

**சிப்காட் வளாகத்தில் நில விற்பனை சம்பந்தமான புதிய அறிவிப்பு**

இடைக்காலத்திலே இது தொடங்கப்பட்டிருக்க வேண்டுமென்றாலும் இடையிலே வந்த அரசுகள் இதிலே மிகுந்த அக்கறை செலுத்தாத காரணத்தால் இந்த வளாகம் உருவாகாமலே போய் இன்றைக்கு உருவாகி திறக்கக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது.

2,800 ஏக்கர் நிலப்பரப்பில் 110 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே இந்த வளாகம் அமைக்கப்படுகின்றது. இதுவரை 2,500 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டிருக்கின்றது. இந்த மையத்திற்குத் தேவையான சாலை வசதிகள், தெரு விளக்குகள், நீர்வசதி, கழிவு நீர்வசதி முதலிய அடிப்படை வசதிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

தொழில்முனைவோருக்கு மனைகள் ஒதுக்கீடு செய்வதற்கு தயார் நிலையில் இத்தொழில் மையம் தற்போது மேம்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை 318 ஏக்கர் நிலம் 40 தொழில் நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அவற்றில் 26 நிறுவனங்கள் ஜவுளித் தொழில் சார்ந்தவை; பத்து நிறுவனங்கள் பிற தொழில் சார்ந்தவை. நான்கு நிறுவனங்கள் பொதுத் துறையைச் சார்ந்தவை. இந்த சிப்காட் வளாகத்திலே நிலங்களை விற்பது சம்பந்தமாக இந்த நேரத்தில் ஒரு மகிழ்ச்சியான அறிவிப்பை நான் செய்திட விரும்புகிறேன்.

சிப்காட் வளாகத்தில் உள்ள நிலங்கள் இதுவரை ஒரு ஏக்கர் ஆறு இலட்சம் ரூபாய் வீதம் விற்கப்பட்டது. இனிமேல் அதாவது இன்று 1–7–2000 முதல் ஒரு புதிய அறிவிப்பு. அதாவது 50 ஏக்கர் முதல் 99 ஏக்கர் வரை நிலம் வாங்குபவர்களுக்கு இனிமேல் ஒரு ஏக்கர் நான்கு இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய்க்கு வழங்கப்படும். 100 ஏக்கருக்கு மேல் நிலம் இங்கே வாங்குவோருக்கு ஒரு ஏக்கர் 4 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் வீதம் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

***– ஈரோடு மாவட்டம் பெருந்துறையில் சிப்காட் தொழில் வளர்ச்சி மையத்தை தொடங்கிவைத்தும் மஞ்சள் வணிக வளாகத்திற்கு அடிக்கல் நாட்டியும் 1–7–2000 அன்று முதலமைச்சர் கலைஞர் ஆற்றிய உரையிலிருந்து...***



# காக்கை

அடுத்தவன் கையை எதிர் பார்த்தது
காக்கை
அவன் தின்றுக் கொண்டிருக்கையில்

உதடுகள் சிகரெட் புகைக்க அல்ல
உழைக்க

கரண்ட்டு கம்பத்தில் காக்கை வீடு
விமானம் பார்த்து அழும் குஞ்சுகள்

முட்களுக்கிடையே காக்கைத் துளிகள்
உதடு கிழியக் கத்தும்

திருட்டு அம்மா திரும்ப
வரும்வரை

காக்கையின் விசிறி விரல்களில்
ரேகை அழியும் வரை

காக்கையின் தொலைவு
மனிதனைவிட நீளமானது

பாரதி குயிலுக்கும் பாவேந்தன்
குயிலுக்கும்
காக்கைதான் தாய்

# குறிப்புகள்

• கபிலன்



காக்கைக்கும், குயிலுக்கும்
வித்தியாசம் என்ன இருக்கிறது
மொழியைத் தவிர

குயில் முட்டைக்குத் தேவை
காக்கையின் வயிறு

அம்மாவின் முழுமையை
உடைத்துக் கொள்கிறது குயில்

குயில் குஞ்சை
உதைத்துச் சொன்னது
காக்கை

"தன் குஞ்சு பொன் குஞ்சு"

*– 'தெரு ஓவியம்'*
*கவிதைத் தொகுப்பிலிருந்து...*
*யாளி பதிவு வெளியீடு,*
*சென்னை–24.*

# ''சாலை விபத்தைத் தடுப்போம்''



□ க. சு. அகஸ்தியன்

சாலை விபத்து நடக்காத நாளே இல்லை - அதைத்
தடுக்க வழி சொல்லாத ஆளே இல்லை;
அவசரமே பிரதானம் என்றால் உமக்கு;
ஆதங்கமே வருமானம் என்றே ஆகும்.

தலைவிதியை மாற்றுகின்ற இறைவன் என்றே,
சாலைவிதி கடைப்பிடித்தல் அவசியம் என்பேன்.
அரைநிமிடம் தாமதித்தால் மோதல் இல்லை;
அவசரத்தில் தனைஇழந்தால் வாழ்வே இல்லை.

வழிமறித்து முன்சென்றால் விபத்தே நேரும்,
விதிமதித்து வழிநடந்தால் நலமே சேரும்;
வீட்டிலிருந்து புறப்பட்டு நிதானம் இன்றி,
செல்லுமிடம் சேரும்வரை மடியில் வேகம்.

என்றநிலை மாறிடவே நாளும் நாமும்,
காரியங்கள் யாவையுமே இறுக்கம் இன்றி,
கடமையொடு நேரத்தே செய்தால் பணியை,
கண்டிப்பாய் தவிர்க்கலாம் சாலை விபத்தை.

பாதையிலே வருவோர்கள் நமக்கு என்றும்,
பங்காளியா பகையாளியா போட்டி போட,
பாசத்தோடு வழிவிட்டு நேசம் கொண்டால்,
பாதையிலே விபத்தெனும் நாசம் இல்லை,

இந்தநிலை உருவாக நாமும் கொஞ்சம்,
பெருமையோடு உழைத்திடவே நெஞ்சில் நிறைப்போம்.

# ஒரு இடம் தேடி

□ கந்தர்வன்

**க**வி சம்மேளனத்திற்கு வந்து சேரும் ஒரு முதிய தம்பதியினர்....... அவசரம் பரபரப்பு அவர்களிடையே.... அந்தப் பரபரப்பின் பின்னாலும் ஒரு கவியுள்ளம் இருக்கிறது......

கவிஞர்களில் பழசு புதுசு என்றெல்லாம் ஏது? இவர்கள் ஒரு நேரம் குழந்தைகள், ஒரு நேரம் வாலிபர்கள், ஒரு நேரம் கிழவர்கள்......."

அந்த மலைப்பகுதியில் வெயில் முளைக்க இன்னும் வெகு நேரமிருந்தது. ரயிலிலிருந்து இறங்கி பஸ் பிடித்து உட்கார்ந்ததும் ஊர், மொழி தாண்டிய பரபரப்பு வந்தது. கண்டக்டர் அருகில் வரவும், பையிலிருந்த அழைப்பிதழை எடுத்து மறுபடி ஒருமுறை படித்துப் பார்த்துவிட்டு ஊர்ப் பெயரைச் சொல்லி ரூபாயைக் கொடுத்தேன். சொல்லி வாய் மூடுமுன் பின்சீட்டிலிருந்து "ஸார் நீங்கள் கலை விழாவுக்கா போகிறீர்கள்'' என்று ஆங்கிலத்தில் கேட்ட குரலுக்குத் திரும்பி "ஆமாம்" என்றேன்.

அவர் பருமனாய் வயது முதிர்ந்திருந்தார். இரண்டு காதுகளிலும் கொத்தாய் நரைமுடி. பக்கத்தில் சிவப்பாய் ஒல்லியாய் ஒரு வயதான மாது. அவர் மனைவியாயிருக்க வேண்டும். தூரப் பயணமும் வயதின் தளர்ச்சியும் இருவரிடமும் நிறையத் தெரிந்தன. பெட்டி, பைகள் போகக் கையில் இன்னும் கால்வாசித் தண்ணீரோடு வெள்ளை பிளாஸ்டிக் பாட்டில். அவர் எல்லாவற்றிலும் ஜாக்கிரதையாகவும் பதட்டமாகவுமிருந்தார்.

''எனக்கு வந்த கடிதத்தில் கலை விழா நடக்கும் இடங்கள் என்று மூன்று ஊர்ப் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. குழப்பமாயிருக்கிறது. நாம் எங்கே இறங்க வேண்டும்? உங்களுக்குப் பழக்கமான பிரதேசமா இது? இவள் என் மனைவி. நாங்களும் கலை விழாவுக்குத்தான் போகிறோம்" என்றார்.

நான் அவருக்குப் பதில் சொல்லுமுன் கண்டக்டர் அந்தப் பக்கம் வர நான் தமிழிலேயே அந்த ஊரைப் பற்றி விசாரித்தேன். அவர் சொன்னார், "நீங்கள் எங்கு இறங்க வேண்டுமென்று எனக்குத் தெரியும். கடந்த இரண்டு நாட்களாய் ஆட்கள் எங்கெங்கிருந்தோ வருகிறார்கள். நீங்கள் போக வேண்டிய இடத்திற்கு நேராக இறக்கிவிடுகிறேன். போதுமா?" என்று மலையாளத்தில் சொல்லிப் பாந்தமாய்ச் சிரித்தார். நான் தமிழில் பேச கண்டக்டருக்குப் புரிவதும், அவர் மலையாளத்தில் பேச எனக்குப் புரிவதும் பின்னாலிருந்த பெரியவருக்கு நம்பிக்கையூட்டியிருக்க வேண்டும்.

திரும்பி அவரைப் பார்த்தபோது அது தெரிந்தது. என் பக்கமாய் வர முயன்றவாறு தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார். ''நான் மைசூரிலிருந்து வருகிறேன். ஒரு கவிஞன், கன்னடம். என் பெயர் ராஜாராவ்" என் பங்கிற்கு நான் என்னை அறிமுகப்படுத்திக் கொண்டதும் ராவ் சொன்னார். "நாம் நாளை மறுநாள் கவி சம்மேளனத்தில் சேர்ந்து பங்கு பெறுகிறோம் இல்லையா? நீங்கள் புதிய தலைமுறை ஆள்".

"அப்படிச் சொல்ல முடியாது. பழசும் புதுசும் சேர்ந்த மாதிரியான ஆள். தவிரவும் கவிஞர்களில் பழசு புதுசு என்றெல்லாம் ஏது? இவர்கள் ஒரு நேரம் குழந்தைகள், ஒரு நேரம் வாலிபர்கள், ஒரு நேரம் கிழவர்கள்".

ராவ் என் முகத்தின் மீது ஒரு தந்தையின் உற்ற பார்வையோடு சொன்னார். "நீங்கள் எனக்குச் சிறந்த நண்பராய் விளங்கப் போகிறீர்கள்".

அவர் இதைச் சொல்லிக் கொண்டிருந்தபோது பஸ் ஒரு பாலத்தின் மீது சென்றது. கீழே பச்சை பார்டர் போட்ட

வெள்ளைச் சேலையாய் ஆறு ஓடிக்கொண்டிருந்தது. ராவ் இந்தப் பாலத்தைக் கடந்ததும் நாம் இறங்க வேண்டிய இடம் வந்துவிடுமா?" என்றார்.

''பொறுப்பு கண்டக்டர் கையில். நாம் மரங்களையும் செடிகளையும் புதுப்புது மனிதர்களையும் ஜன்னல் வழியாய்ப் பார்ப்போம்".

என் பக்கத்திலிருந்து திரும்பி மனைவியுடன் கன்னடத்தில் பேச ஆரம்பித்தார். ஒரு இடத்தில் பஸ் நின்றபோது அந்த அம்மாள் கன்னடத்தில் அவரிடம் அவசரமாய் எதுவோ சொல்ல, அவர் பதறிப்போய் என் தோளைத்தட்டி "இதுவா நாம் இறங்க வேண்டிய இடம்?'' என்றார்.

"பொறுப்பு கண்டக்டருடையது. நீங்கள் கவலையில்லாமல் இருங்கள்'' என்றேன். என்னுடைய நிதானம் அவருக்கு ஆச்சர்யமாயிருந்தது. அடுத்தடுத்த நிறுத்தங்களில் இருவரும் கவலையோடு "இதுவா? இதுவா?'' என்று கேட்டு எழுந்திருப்பதும் உட்கார்வதுமாயிருந்தனர்.

எங்களை இவ்வளவு நேரமும் வேடிக்கை பார்த்துக் கொண்டே வந்த கண்டக்டர் என் முன்னே வந்து, "நீங்களிறங்க வேண்டியது நெக்ஸ்ட் ஸ்டாப்பிங்" என்று சொன்னது ராவ் தம்பதிக்கு மொழி பெயர்க்காமலே புரிந்து விட்டது. லக்கேஜ்களை எடுத்து வைத்துக்கொண்டு சீட்டுகளின் நுனியில் உட்கார்ந்திருந்தனர்.

பஸ் நின்றதும் கண்டக்டர் வந்து ''இதே'' என்றதும் பரபரப்பாயிறங்கினர் இருவரும்.

விழாக்குழு அலுவலகத்தில் அந்த அதிகாலை நேரத்திலும் குளித்து சந்தனப் பொட்டுடன் ஒரு இளைஞர் எங்களை வரவேற்று உட்காரச் சொன்னார். ''நீங்கள் இரண்டு நாட்கள் தாமதமாக வந்திருக்கிறீர்கள். டெல்லியிலிருந்தும் கான்பூரிலிருந்தும் முதல் நாளே கலைஞர்கள் பட்டாளம் வந்து எல்லா டிராவலர்ஸ் பங்களாக்களையும் அடைத்துக் கொண்டு விட்டார்கள். எங்களுக்கு வெகு அருகிலுள்ள இரண்டு



மாநிலங்களிலிருந்து நீங்கள் தாமதமாக வந்திருக்கிறீர்கள். உள்ளூரில் ஒரு அறைகூட காலியில்லை. அருகிலுள்ள ஊர்களிலும் அறைகள் இருக்காது. தூரத்து ஊர்களில் டிராவலர்ஸ் பங்களாக்களைத் தொடர்பு கொண்டிருக்கிறேன். ''டீ சாப்பிடுங்கள்'' என்று சொல்லி ப்ளாஸ்கிலிருந்து டீ ஊற்றிக் கொடுத்தார். தொலைபேசியில் வரிசையாக எண்களைச் சுழற்றி மலையாளத்தில் தீவிரமாக விசாரித்துக் கொண்டிருந்தார்.

ராவ் முகத்தில் கலக்கம் தெரிந்தது. மனைவியுடன் கன்னடத்தில் கவலையோடு பேசிக் கொண்டிருந்தார். டீ கோப்பை கிடுகிடுவென்று ஆடியது. கை நடுக்கம் அதிகமாகியது. என்னிடம்

கேட்டார், "நமக்கு ஒரு அறை ஏற்பாடு செய்து விடுவார்களா?"

"கவலைப்படாதீர்கள். நல்ல கவிஞனுக்கு எப்போதும் ஒரு இடமுண்டு"



என்றேன். அவர் அதை ரசித்துச் சில விநாடிகள் புன்னகை செய்தார். உடனே சீரியஸாகி அந்த இளைஞரைக் காண்பித்துச் சொன்னார். "பாருங்கள்; அவர் நம்பிக்கை இழந்து தொலை பேசியில் பேசிக் கொண்டிருக் கிறார். நாங்கள் இனிமேல்தான் குளிக்க வேண்டும். என் மனைவியை இந்த வயதில் நான் வெகுதூரம் அழைத்து வந்துவிட்டேன்". நாற்காலியில் விரக்தியோடு சாய்ந்து கிடந்து தனக்குள் சொல்லிக் கொண்டார். "ஆனால் இவை இப்படித்தான் நடக்கும்".

அந்த இளைஞர் தொலைபேசியை வைத்துவிட்டு எங்களைப் பார்த்து உற்சாகமாய்ச் சிரித்தார். நான் ராவைப் பார்த்தேன். இளைஞரிடமிருந்து ஒரு நல்ல சொல் கேட்க மிகுந்த ஆர்வமாய் நாற்காலி முனைக்கு வந்துவிட்டார்.

"ஒரு டிராவலர்ஸ் பங்களா கிடைத்துவிட்டது. ஆனால் அதில் ஒரு பிரச்சினை" என்று இழுத்து நிறுத்தினார் இளைஞர். ராவின் முகத்தில் சட்டென்று கவலை தோன்றியது. நான் சிரித்துக்கொண்டே கேட்டேன்.

"டி.பி. வெகு தொலை விலோ?"

இளைஞர் சொன்னார் "அதுதான் பிரச்சினை. ஆனால் நீங்கள் அதிகம் சிரமப்படாமல் நாங்கள் சில உதவிகள் செய்வோம். இப்போது ஒரு கார் உங்கள் மூவரையும் ஏற்றி அந்த டிராவலர்ஸ் பங்களாவில் கொண்டுபோய் விடும். தினமும் காலையில் உங்களை அழைத்துவர கார் அனுப்புவோம். இரவு எல்லா நிகழ்ச்சிகளும் முடிந்ததும் கிடைக்கின்ற ஒரு காரில் நீங்கள் அங்கு போய்த் தங்கிக் கொள்ளலாம். டிபன், சாப்பாடு எல்லாவற்றையும் நீங்கள் இங்கே வந்துதான் முடித்துக்கொள்ள வேண்டும்".

''மிகவும் சரி. இப்போது நாங்கள் புறப்படக் கார் தயாரா?" என்றேன்.

கார்கள் ஒவ்வொன்றாய் வர ஆரம்பிக்கும் நேரம்தான், ஆட்களும் வரவேண்டும். நேற்றிரவு அநேகமாய் விடிந்துதான் எல்லோரும் வீடுகளுக்குச் சென்றார்கள். சற்று இருங்கள். வந்ததும் உங்களை அனுப்பி வைக்கிறேன்".

ராவ் மனைவியிடம் வெகு தாழ்வாய்க் குனிந்து பேசிக் கொண்டிருந்தார். பிறகு என்னைப் பரிதாபமாய்ப் பார்த்தார். ''ராவ்ஜி கவலைப்படாதீர்கள். அவர்கள் சீக்கிரம் ஏற்பாடு செய்து விடுவார்கள்'' என்றேன். ராவ் சொன்னார், ''இவ்வளவு குழப்பங்களாலும் ஒரு பெரும் அதிர்ஷ்டம் எனக்குக் கிடைத்திருக்கிறது. எங்களையும் உங்களையும் பிரித்து தனித்தனியாய்ப் போடாமல் ஒரு இடத்தில் தங்க ஏற்பாடாகியிருப்பதுதான் அது. நாங்கள் வயதானவர்கள், நீங்கள் அன்பானவர்" யாசகக் கலை ராவ் முகத்தில் அப்பியிருந்தது.

"கவலைப்படாதீர்கள். நான் உங்களுடன் மூன்று நாளும் நிழலாயிருப்பேன்" என்றதும் ராவ் துயரங்கள் மறைந்த ஒரு பெருமூச்சை விட்டார். கழிவிரக்கம் நிறைந்தவாறு என் கைகளைத் தன் கைகளில் எடுத்து வைத்துக்கொண்டு "கவிதையை விடவும் அன்பு பெரிதுதானே?" என்றார். "எல்லாவற்றையும் விட" என்று நான் சொன்னதும் இறுக்கமாய் என் கைகளைப் பற்றிக் கொண்டார். முதியவர்களின் வெதுவெதுப்பு இரக்கத்தையும் அன்பையும் அந்நேரம் அதிகப்படுத்தியது. மனைவியிடம் குனிந்து ராவ் கன்னடத்தில் சொன்னது இதுவாகத்தானிருக்க வேண்டும், ''கவலைப்படாதே இதோ இவரிருக்கிறார் நமக்கு, தடுமாற விடமாட்டார்".

நான் அந்த இளைஞரின் பக்கத்தில் போய் நாம் வெளியே போய் கார் எதுவும் வந்திருக்கிறதா; ஆள் யாரும் வந்திருக்கிறார்களா என்று பார்ப்போமா. அந்த முதிய தம்பதியைப் பார்க்கப் பாவமாயிருக்கிறது'' என்று ராவைச் சுட்டிக் காட்டிக் கேட்டேன்.

"இன்னும் கால் மணிக்குள் ஏதாவது ஒரு கார் வந்துவிடும்; ஆளும் வரும். அதுவரை இந்தப் பாட்டைக் கேளுங்கள்" என்று ஒரு கேஸட்டைச் செருகினார். அதிகாலை வேளைக்கும், மூடிக் கிடந்த பனிக்கும் அந்த இசை கதகதப்பாயிருந்தது. கண்ணை மூடி சில நிமிடங்கள் சுகமாய் அனுபவித்துத் திறக்கையில் ராவ் துயர்மிகுந்து மனைவியோடு ஆழ்ந்த விவாதத்திலிருந்தார்.

ஒருவர் உள்ளே வரவும் இளைஞர் எழுந்து ஆவலாய் அவரிடம் மலையாளத்தில் பேசிக்கொண்டே எங்களைப் பார்த்து "பேக்கப்" என்பதுபோல் சைகை காட்டினார்.

நாங்கள் காரில் ஏறியதும் அந்த இளைஞர் சொன்னார். "இந்தக் கார் உங்களைக் கொண்டு போய் டி.பி.யில் விட்டதும் திரும்பிவிடும். மறுபடி பத்து மணிக்குள் கார் அனுப்புகிறோம். என் பெயர் தாமோதரன். இது அலுவலகத் தொலைபேசி எண். கார் குறித்த நேரத்தில் வரவில்லையென்றால் நீங்கள் தொடர்பு கொள்ளுங்கள்" என்று ஒரு கார்டைக் கொடுத்தார்.

கார் போய்க் கொண்டிருந்தபோது ராவ் சொன்னார், "மூன்று நாள்களுக்கு நம்மை அழைத்துப் போகவும் கொண்டு வந்து விடவும் கறாரான ஏற்பாடுகள் இல்லையென்று நினைக்கிறேன்".

"கவலைப்படாதீர்கள், நான் உங்களோடு இருக்கிறேன்'' என்றேன். கார் ஒவ்வொரு கி.மீ. கல்லைத் தாண்டும்போதும் "ஓ எவ்வளவு தூரம்" என்று முனகிக் கொண்டேயிருந்தார். அடிக்கடி மனைவியோடு பேசினார். திருப்தியில்லாத அவர் முகத்தைச் சரி செய்ய என்ன செய்வது என்ற சங்கடம் டி.பி. முன் இறங்கும்வரை என்னிடமிருந்தது.

அவர்களை ஒரு அறைக்குள் விட்டு அடுத்த அறையில் நான் தங்கிக்கொண்டேன். அரைமணி கழித்து வாயில் பிரஷோடு வாசலில் நின்றபோது ஒரு வாளி நிறைய வெந்நீரைத் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு ராவ் "திஸ் இஸ் ஃபார் மை லேடி'' என்று சொல்லிக்கொண்டே சென்றார்.

ஒன்பது மணிக்கெல்லாம் அவர் என் அறைக்கு வந்தார். அழுக்கெல்லாம் போய் பளிச்சென்றிருந்தார். மனைவியை விட்டு தனியாக வந்தது ஆச்சர்யமாக இருந்தது. ஒவ்வொரு ஐந்து நிமிடத்திற்குள்ளும் மனைவியோடு பேசிக் கொண்டிருந்தவர் "கார் வந்து விடுமல்லவா?" என்றார்.

"நாம் சிறிது நேரம் பேசிக் கொண்டிருப்போம். கார் வந்துவிடும்" என்றேன்.

"நம்மை இவ்வளவு தூரத்தில் கொண்டு வந்து போட்டிருக்க வேண்டியதில்லை. எத்தனை மணிக்குக் கார் வரும்; எத்தனை மணிக்கு நாம் டிபன் சாப்பிடப் போகிறோம் என்பதெல்லாமே நிச்சயமற்றுக் கிடக்கிறது" என்று அவர் வெறுப்பாய்ப் பேசினார்.

"வரும்போது வரட்டும். நாம் இப்போது கவிதை பற்றிக் கொஞ்சம் பேசுவோம்!"

"ஆனால் நண்பரே உங்கள் வயதில்லை எங்களுக்கு. சரியான நேரத்திற்கு நாங்கள்

சாப்பிடவேண்டும். நேற்று மைசூரிலிருந்து ரயிலில் வந்த சிரமங்களை வார்த்தைகளில் சொல்லமுடியாது".

''நான் வேண்டுமானால் தாமோதரனிடம் தொலைப் பேசியில் பேசி பார்க்கிறேன்"

"நானும் வருகிறேன்". என்று ராவும் எழுந்தார்.

பத்தரை மணிக்குக் கார் வருவதற்குள் ராவ் துடித்துப் போனார். கவிதை சம்பந்தமாய் அவரிடம் கேட்ட கேள்விகளுக்குச் சிறுசிறு வாக்கியங்களில் பதில் சொல்லி விட்டு மனைவியை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தார்.

காரில் போய் அரங்கின் முன் இறங்கி உணவுக் கூடத்தைக் கண்டுபிடிக்க சிறிது நேரம் பிடித்தது. ஒரு மணிநேரம் முன்பே டிபன் காலியாகி விட்டதாய்ச் சொன்னதும் ராவ் சோர்ந்துவிட்டார். "வெளியில் நிறையக் கடைகள் தெரிகிறது. வாருங்கள் ராவ்ஜி. நான் இன்று உங்களுக்கு சிறிய விருந்தளிக்கிறேன்'' என்றதும் ராவ் பதறிச் சொன்னார். "அவையெல்லாம் வயிற்றுக்குச் சரிப்படுமோ என்னவோ? இரண்டுங்கெட்டான் நேரம் வேறு".

"நீங்கள் சாப்பிடாமலிருப்பது அதைவிட மோசமல்லவா?'' என்று கூறி இருவரையும் அழைத்துப் போய் மெதுவான உணவு வகைகளாய்ப் பார்த்து



வாங்கிக் கொண்டு வந்து மேஜை மேல் வைத்தேன். ராவ் தம்பதி சங்கோஜத்துடன் சாப்பிட்டது. பாக்கு வாங்கக்கூட மனைவியிடம்தான் சில்லரை கேட்டு வாங்கினார் ராவ்.

அன்று அலகாபாத்திலிருந்து வந்த ஒரு ஆண் கலைஞரும் பெண் கலைஞரும் மணிப்பூர் நடனம் பற்றி செயல் விளக்கம் நடத்திக் கொண்டிருந்தனர். நிபுணர்களும் கலைஞர்களும் ரோமாஞ்சனமாகிப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். வினாக்களுக்கு அந்த இரு கலைஞர்களும் அடவுகளோடு உயர்ந்த ஆங்கிலத்தில் பதிலளித்துக் கொண்டிருந்த நேரம். யாரோ என்னை அழைத்தது போலிருக்க திரும்பிப் பார்த்தேன். ராவ் மனைவியோடு மண்டபத்தின் மேல் திண்ணையில் உட்கார்ந்து என்னை அழைத்துக் கொண்டிருந்தார். நான் திரும்பிப் பார்த்ததில் அவருக்கு திருப்தி.

வெகு நேரமாய் என்னை அழைத்துக் கொண்டிருந்திருப்பார் போல.

எழுந்து அவரிடம் வந்தபோது அவர் தன் கடிகாரத்தைக் காட்டினார். மணி இரண்டாகி இருந்தது. ''நாம் எப்போது சாப்பிடுவது?" என்றார். அவர் வயதிற்கு இந்த விவாதங்கள் அலுப்பாய்த் தெரிந்திருக்கும். அவர் பொருட்டு நிகழ்ச்சியிலிருந்து விலகி நடந்தேன். உணவுக் கூடத்தின் முன்னால் வரிசையில் நின்றபோது கேட்டார், "சாதம் இங்கெல்லாம் சிவப்பாய் தடியாயிருக்குமாமே", இவளால் சாப்பிட முடியுமா என்று தெரியவில்லை?"

சாப்பிட்டு வந்ததும் அடுத்த நிகழ்ச்சி நான்கு மணிக்குத்தான் என்றார்கள். ராவ் சொன்னார். "பக்கத்தில் அறை கிடைத்திருந்தால் கொஞ்சம் ஓய்வெடுக்கலாம். இந்த வயதில் அதுவெல்லாம் எங்களுக்கு அவசியம்''. மரங்களடர்ந்து பசுந்திடலொன்று அருகில் தெரிந்தது. ''அங்கே போய் ஓய்வெடுப்போம்" என்று அழைத்துப் போனேன். மரத்தடியில் உட்கார்ந்ததும் ராவ் அந்தப் பெயர் தெரியாத பெரிய மரத்தை அடி முதல் நுனி வரை ஆழ்ந்து பார்த்தார். அப்பவும் சொன்னார், ''அந்த டி.பி. வாசலிலும் ஒரு பெரிய மரம் ஆயிரம் கவிதைகள் சொல்லிக்கொண்டு நிற்பதை". ராவ் மேலும் கவிதை பற்றி பேசுவாரென்று எதிர்பார்த்த போது, "நாங்கள் நாளை மறுநாள் மைசூர் போக டிக்கெட் ரிஸர்வ் செய்யவேண்டுமே'' என்று பரபரப்பாகி விட்டார்.

விழா அலுவலகம் சென்று அவரவர் ஊர்களுக்கு டிக்கட் ரிஸர்வ் செய்யக் கேட்டுக் கொண்ட பின் அரங்கத்திற்குள் செல்கையில் ஒரு புகழ்பெற்ற உள்ளூர் கலைஞர் கதகளிக்கு செயல் விளக்கம் செய்து காண்பித்துக் கொண்டிருந்தார்.

ராவ் தம்பதி என்னைத் தனியாக விடுவதாக இல்லை. என் பக்கத்திலேயே உட்கார்ந்து கொண்டனர். ராவ் ஐந்து நிமிடம் பற்றில்லாமல் நிகழ்ச்சியைப் பார்த்துவிட்டுப் பத்து நிமிடம் குனிந்து மனைவியோடு பேசிக் கொண்டிருந்தார். பேசிவிட்டு நிமிர்கிற போதெல்லாம் கவலைப்பட்டும் பதட்டப்பட்டும் தெரிவார்.

இரவு பத்தரை மணிக்கு சாப்பாட்டுக் கூடத்திற்குப் போகும்போதும் ராவ் சொன்னார், "எல்லாமே கால தாமதமாய் நடக்கிறது. சாப்பிட்டவுடனாவது கார் கிடைக்குமா?"

"முதலில் சாப்பிடுவோம்!"

சாப்பிட்டு வெளியில் வந்தபோது பொது அரங்க நிகழ்ச்சிகள் துவங்கிவிட்டதாகச் சொன்னார்கள். நிர்வாகிகளைத் தேடிக் கண்டுபிடிக்க முடியவில்லை. திருவிழாக் கூட்டம் போலிருந்தது, ஜனத்திரள். ராவ் தம்பதி வேறு வழியில்லாமல் என்னோடு திறந்தவெளி அரங்கில் வந்தமர்ந்தனர். சதங்கையும் ஜதியும் வண்ணமுமாய் பரத நாட்டியம் நடந்து கொண்டிருந்தது. ராவ் நடனத்தை ஒரு நிமிடம்கூட ஊன்றிப் பார்க்கவில்லை. குனிந்து மனைவியோடு பேசிக் கொண்டேயிருந்தார்.

திடீரென்று என் தோளைத் தொட்டார். "அதோ பாருங்கள், முன் வரிசையில் மிஸ்டர் தாமோதரன் உட்கார்ந்திருக்கிறார். நாம் போய்க் கேட்கலாமே கார் கிடைக்குமாவென்று''. ராவ் தம்பதிக்காக ஒவ்வொரு நல்ல நிகழ்ச்சியாய் இழந்து கொண்டிருப்பது பளிச்சென்று மனதில் பட்டது. ஆனால் ராவ் மறுபடி மறுபடி தோளைத் தொட்டுக் கொண்டேயிருந்தார்.

நாங்கள் காரில் ஏறிக் கிளம்பிச் சென்றபோது மெல்லிய வெளிச்சத்தில் ஒரு பழக்கடையும் அதில் மலைப் பக்கத்துப் பழங்கள் நிறையவும் தெரிந்தது. காரை நிறுத்திப் பழம் வாங்க நான் இறங்குவது தெரிந்து ராவ் ஓடிப்போய் தாமே வாங்கினார். மனைவியிடம் பணம் வாங்கிக்கொண்டு போய்க் கொடுத்தார். உங்களுக்காக நான் சிறிய செலவாவது செய்ய வேண்டும்" என்றார்.

மறுநாள் காலையில் பனியோடும் குளிரோடும் ராவ் என் அறைக்கு வந்தார். "இன்று சீக்கிரம் கார் வந்து விடுமா?" என்றார். இரவு அவர் மனைவிக்குத் தலை வலித்ததாகச் சொன்னார்.

''இன்று நாம் கவிதை பாடவேண்டும்" என்றேன்.

"ஆம்" என்றவர் "ஆனால் நான் புதிதாக எதுவும் எழுதிக் கொண்டு வரவில்லை" என்றார்.

"ஏன்?"

''இப்போதெல்லாம் எதை எழுதுவதென்று தெரியவில்லை"

"எது பாதித்ததோ அதை"

''அப்படி எழுத மனம் வரவில்லை"

"நீங்கள் எழுத வேண்டும்".

''விடுங்கள் காபி சாப்பிட வேண்டும். வருகிறீர்களா?"

அன்று பல மொழிக் கவிஞர்களும் கவிதை பாடினார்கள். மற்ற எல்லோர் கவிதைகளிலும் மொழிதான் பிரதானமாயிருந்தது. ராவ் கவிதையில் உணர்ச்சி பிரவாகமெடுத்துப் படர்ந்தது. ஆழ்கடல், மலையுச்சி, பருவ காலங்கள், உயர் மணம், கண்ணீர், கடிய வேர்வை மிகவும் வேண்டிய ஒருவரின் ஸ்பரிசமெல்லாம் தெரிந்தது. கட்டியணைத்துக் கொண்டேன் அவரை. கூட்டம் கலையும்போது அவரிடம்

கேட்டேன். "எப்படி முடிந்தது இப்படி ஒரு கவிதை எழுத?" அவர் சொன்னார். "என் மனம் ஆரோக்கியமாயிருந்தபோது; இதோ இவள் கழுத்தில் அந்த ஐந்து பவுன் சங்கிலியும் இல்லாதிருந்தபோது".

நான் புரியாமல் விழித்தபோது என்னை ஒரு கையிலும் மனைவியை ஒரு கையிலும் பற்றிக்கொண்டு தளர்வாய் நடந்துகொண்டே ராவ் சொன்னார். "நான் ஒரே கம்பெனியில் முப்பத்தாறு வருஷம் வேலை பார்த்து ஒய்வு பெற்றேன். அதைவிட முக்கியம் ஒவ்வொரு மூன்று வருடங் களுக்கும் ஒரே பேண்ட், ஒரே சட்டை மட்டுமே வைத்திருந்தேனென்பது".

"அவ்வளவு சிரமப்பட்டீர் களா?"

"அந்த நாட்களில் பேண் டையும் சட்டையையும் துவைத்துக் காயப்போட்டுவிட்டு அநேக நாள்களில் ஒரு துண்டைக் கட்டிக்கொண்டு நெடுநேரம் நின்று கொண்டிருப்பேன்".

"சொல்லுங்கள் ராவ்ஜி"

"என்ன சொல்ல?"

"நீங்கள் இப்போது ஏன் எழுதுவதில்லையென்று".

"நான் இப்போது என் சொந்த வாழ்க்கையைப் பற்றியல்லவா சொல்லிக் கொண்டிருக்கிறேன்"

"எனக்கு வருத்தமாயிருக்கிறது ராவ்ஜி. நீங்கள் எழுதாமலிருப் பதற்கும், உங்களது இப்போதைய வாழ்க்கைக்கும் நெருங்கிய சம்பந்திருப்பதாய் உணர்கிறேன்".

ராவ் தலையசைத்துக் கொண்டே கேட்டார். "உங்களுக்கு எத்தனை பிள்ளைகள்?" நான் பதிலளித்ததும் ராவ் சொன்னார், "எனக்கு மூன்று பிள்ளைகள்" வாடிய முகத்தோடு தொடர்ந்தார்.

"மூத்தவள் ஒரு புரொபஸர், மைசூரில்; அடுத்தவளுக்கு பெங்களூரில் வங்கியில் வேலை மகன் ஜெய்ப்பூரில் இஞ்சினியர். இவளுக்கு ஐந்து பவுனில் சங்கிலி ஒன்று இருந்தது. அது அடகுக் கடைக்குப் போய்ப் போய் அவர்கள் படித்து முடித்தார்கள். அவர்களுக்கு சாப்பிடக் கொடுத்துவிட்டு இவள் எத்தனை நாள் பட்டினி கிடந்தாள் என்று கணக்கிட்டுவிட முடியாது".

"எல்லோருக்கும் திருமணமாகிவிட்டது".



"திருமணமாகி எல்லோரும் கணவரோடும் மனைவியோடும் பிரமாதமாய் செட்டிலாகி விட்டார்கள்".

"உங்களுக்குத் திருப்திதானே"

"ஆனால் நானும் இவளும் இன்னும் செட்டிலாகவில்லை. இந்த ஊருக்கு வரும்படி வந்த அழைப்பு நாங்கள் சேர்ந்திருக்கவும் சுதந்திரமாயிருக்கவும் ஒரு சந்தர்ப்பத்தைத் தந்துவிட்டது. இதற்காக நாங்கள் அலைந்து கொண்டேயிருக்கத் தயாராயிருக் கிறோம்".

"மூன்று பேர்களில் ஒருவர் வீட்டைப் பரிசீலித்து அங்கு செட்டிலாகிக் கொள்ளலாமே".

"சரி விடுங்கள். நாங்கள் வெகு சீக்கிரம் ராமேஸ்வரம் வருவோம். வழியில் தானே உங்கள் ஊர்?"

"ஆமாம் நீங்களிருவரும் எங்கள் வீட்டில் வந்து சில நாட்களாவது தங்கிச் செல்ல வேண்டும்"

"உங்கள் முகவரி வேண்டும்"

நான் பேனாவை எடுக்குமுன் ராவ் ஞாபகத்திற்கு வந்து சொன்னார் "கிளம்புங்கள், நாம் ஊர் திரும்ப டிக்கெட்டுகளை வாங்கிவிட்டார்களா என்று விசாரிப்போம்".

விழா அலுவலகத்தில் அவர்கள் சொன்னதைக் கேட்டு ராவ் மிகவும் சோர்ந்து போனார். நான் மறுநாள் கிளம்பவும் அதற்கும் மறுநாள் ராவ் தம்பதி புறப்படவும் டிக்கெட்டுகள் வாங்கியிருந்தனர். மைசூருக்கு டிக்கெட் கிடைப்பதில் சிரம மிருந்ததாம்.

"நீங்கள் எங்கோளடிருக்கும் போதே எங்களுக்கு இவ்வளவு கஷ்டம். நீங்களில்லாமல் ஒரு முழு நாள் நாங்கள் டி.பி.க்கும் கலையரங்கிற்கும் அலைந்து சாப்பிட்டு எப்படி ரயிலேறப்

போகிறோமோ" என்றார். அந்த அம்மா பீதியில் வெளிறிப் போனார்.

அன்றிரவும் நாங்கள் நடுநிதியில்தான் அறைக்குத் திரும்ப வேண்டியதாயிற்று. தளர்ச்சியும் மனச் சோர்வுமாய் ராவும் அந்த அம்மாவும் குளிருக்குக் கைகளை மார்பில் கட்டிக்கொண்டு அறைக்குள் நுழைந்ததை வராந்தாவில் நின்று பார்த்தேன். காலை மூன்று மணிக்கு என் அறைக்கதவைத் தட்டி இரண்டு வயிற்று வலி மாத்திரைகளை வாங்கிப் போனார்.

காலையில் வெகுநேரம் சென்றே ராவ் என் அறைக்கு வந்தார். ''நாளை ஒரு முழு நாளைக்கும் நாங்கள் உங்கள் உதவியின்றி அலைய வேண்டும். ஆனால் என்ன செய்வது? அலைந்துகொண்டே திரிய வேண்டியதுதான், ராமேஸ்வரம் வரும்போது சந்திப்போம்'' என்றார். விடுபடாமல் ஒவ்வொரு பொருளையும் எடுத்துப் பெட்டிக்குள்ளும் பைக்குள்ளும் நான் வைத்துக் கொண்டிருந்த நேரமது.

வெளியே சளசளவென்ற சத்தம் அதிகமாய்க் கேட்டதால் டி.பி. வாசலுக்கு வந்தோம். எதிர்கட்சிகள் திடீர் பந்த் நடத்திக் கொண்டிருந்தன. சாலையில் வாகனமென்று ஒரு சைக்கிள்ரிக்ஷா கூட இல்லை. மழை வேறு கொட்ட ஆரம்பித்திருந்தது.

ராவ் தம்பதி நடுங்கிப் போனார்கள். அவர் குனிந்து மனைவியோடு அடிக்கடி பேசிக் கொண்டுதானிருந்தார். ஆனாலும் அந்த அம்மா முகத்தில் வேர்வை துளிர்த்துக் கொண்டேயிருந்தது மழையிலும் குளிரிலும்.

மதியம்போல ஒரு கார் வர நான் அதைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டேன். ராவ் தம்பதியைக் கொண்டுபோய்க் கலையரங்கில் இறக்கிவிட்டதும், என்னை ரயில் நிலையத்தில் விடும்படி டிரைவரிடம் சொன்னேன். மழை சடசட வென்ற சத்தமாய்ப் பெய்து கொண்டிருந்தது.

கலையரங்க வாசலிலிருந்து கார் கிளம்பியபோது ராவ் தவிப்பும் அவசரமுமாய் என்னிடம் எதுவோ கேட்க விரும்பிக் கையை உயர்த்தியது போலிருந்தது. ஆனால், டிரைவருக்கு பந்த் பதட்டம் — மழை குளிர் நடுக்கம் — வேகமாய் ஓட்டிக்கொண்டு போய்விட்டார்.

இரவு வரவிருக்கும் ரயிலுக்காக மதியமே போய் ரயில் நிலைய பெஞ்சில் உட்கார்ந்திருந்தேன். தண்ணீர் குடித்துவிட்டு நிமிர்ந்தபோது சட்டென்று ஞாபகம் வந்தது. ராவ் என் வீட்டு முகவரியைக் கேட்டுத்தான் கையை உயர்த்தியிருந்திருக்கிறார்.

***– 'ஒவ்வொரு கல்லாய்' சிறு கதைத்தொகுப்பிலிருந்து. வெளியீடு : அகரம் கும்பகோணம்***

## மௌனமே சிறந்தது

ஒரு நாள் அக்பர் பீர்பலைப் பார்த்து, "பீர்பல், முட்டாள்களுடன் பழக வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டார்.

பீர்பலோ அக்பர் சொன்னதைக் காதில் வாங்காதவர் போலப் பேசாமல் இருந்தார்.

அக்பர் மறுபடியும், "பீர்பல், உன்னைத்தான்! முட்டாள்களுடன் பழக வேண்டுமானால் என்ன செய்யவேண்டும்?" என்று கேட்டார்.

பீர்பல் மறுபடியும் மௌனம் சாதித்தார்! அக்பருக்கோ ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. 'நாம் கேட்கிறோம். பீர்பல் பேசாமல் இருக்கிறாரே!" என்று கோபப்பட்டார்.

"என்ன பீர்பல், நான் கேட்பது காதில் விழவில்லையா? முட்டாள்களுடன் பழக வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்?" என்று சற்றுக் கடுமையாகவே கேட்டார்.

இதற்கும் பீர்பலிடமிருந்து மௌனம்தான் பதிலாகக் கிடைத்தது.

"என்ன பீர்பல்! உன் காது செவிடாகப் போய் விட்டதா? அல்லது வேண்டுமென்றே மௌனம் சாதிக்கிறாயா?" என்று ஆத்திரத்துடன் கேட்டார், அக்பர்.

"அரசே! கோபப்படாதீர்கள்! நீங்கள் கேட்ட கேள்விக்குப் பதிலை அப்போதே சொல்லி விட்டேனே!" என்று சாவதானமாகச் சொன்னார், பீர்பல்.

"என்ன, பதில் சொன்னாயா? மௌனமாக அல்லவா இருந்தாய்? இதுதான் பதிலா?"

"ஆம், அரசே! முட்டாள்களுடன் பழகவேண்டுமானால் மௌனம் சாதிக்க வேண்டும்" என்றார் பீர்பல்.

பீர்பலின் பதிலைக் கேட்டு அக்பர் மகிழ்ச்சி அடைந்தார்! ●

அறிஞர் தெ.பொ.மீ. 'பழந்தமிழ் வடிவம்' என்றும் தமக்கு தமிழ் அறிவு தந்த 'தமிழ் தொட்டில்' என்றும் பாராட்டிய பாவலர் பெருமான் செய்கு தம்பி அவர்கள் நாஞ்சில் நன் நாட்டில் 31–7–1874ஆம் ஆண்டு பிறந்தார். அவரது 127ஆவது பிறந்த நாளை தமிழ் கூறும் நல்லுலகம் இன்று கொண்டாடுகிறது.

அவதானக் கலைப் பேரரசர், அறிஞர் மாமணி, பாவலர்க்கெல்லாம் பாவலர், செந்தமிழ் சொற்கொண்டல் செய்கு தம்பிப் பாவலர் அவர்கள் இருபதாம் நூற்றாண்டின் தமிழறிஞர்கள் நடுவண், ஈடுஇணையற்ற புகழைப் பெற்றவர். பாவலரிடம் பன்முக ஆற்றல் அமைந்திருந்தது. இயற்றமிழ் புலவர், கதிர்வேலருக்கு எதிர்வேலர், தேவாமிர்தப் பிரசங்க களஞ்சியம், சோடாவதானி, மாகமதி, சதாவதானி, கலைக்கடல், தமிழ்ப்பெரும் புலவர், மாத்தமிழ்ச் செம்மல் என்பன போன்ற பல்வேறு சிறப்புப் பெயர்களைக் கொண்டு விளங்கக் கூடியவர். பாவலர் பாங்கோடு ஆற்றிய தமிழ்ப்பணி தான் இதற்கெல்லாம் முழுமுதற் காரணம் என்று தமிழ்க்குடி மக்கள் அறிவர்.

# சமய நல்லிணக்கப் பாவலர்

பாவலர் வாழ்ந்த காலத்தில் சமுதாயத்தில் தமிழனும், தமிழ் மொழியும் மிக பின்னுக்குத் தள்ளப்பட்டிருந்த சமூக, அரசியல்; பொருளாதார பின்புலங்கள் உண்டு. தமிழின உணர்வு, மேலீட்டின் காரணமாக தமிழ் இலக்கண, இலக்கியங்களில் மட்டுமின்றி சமய நூல்கள் அனைத்திலும் ஆய்ந்து தோய்ந்தவர். எனவேதான் இவர் வாழ்விலும் சிந்தனையிலும் தமிழ்க் கருத்துக்களே மிகுந்தன.

**"எத்தனை பாட்டுவகை எந்தமிழில் உள்ளனவோ**
**அத்தனையும் சொல்லவல்ல ஆற்றலுடைவித்தை**
**இறந்ததுகாண்; சிந்திப்பீர் இப்புவியில் யாரும்**
**பிறப்பாரோ பாவலரைப் போல"**

என்ற டி.கே. சிதம்பர முதலியாரின் பாடல் முழக்கம் தெரிவிக்கிறது. கவிக்கோ அப்துல் ரகுமான் "பாவலர், தம் மனம் நினைத்து உருகுவதை நினைவு வந்த வரிசையில் உணர்வுப்பூர்வமாய்ப் பாடக்கூடியவர்" என்று போற்றுகிறார்.

பதிப்பாசிரியர், பத்திரிக்கையாளர், உரையாசிரியர், சொற்பொழிவாளர், அவதாரக் கலைஞர், இலக்கண இலக்கியத் திறனாய்வாளர், ஆசிரியர், சுதந்திரப் போராட்ட வீரர், அரசியலார் என பல வகைகளில் முத்திரை பதித்த இந்த வித்தகர், சமய நல்லிணக்கப் பணிகளில் தன்னை முழுமையாக ஆட்படுத்திக் கொண்டவர். செய்கு தம்பிப் பாவலர் சமயப் பொறை மிகுந்தவர். பிற சமயங்களிடம் காழ்ப்புணர்ச்சி இல்லாதவர். அனைத்து சமயத்தையும் மதிக்கும் பண்பாளர். சமுதாயத்தில் சமய நல்லிணக்கம் மேலோங்கி இருந்தால் மட்டுமே ஒருமைப்பாடும், ஒற்றுமைப்பாடும் இந்திய சமுதாயத்தில் இருக்க முடியும். இஸ்லாமியச் சமயம், சைவ சமயம் முதலிய சமயங்களின் பெருமைகளைப் பாவலர் தம்முடைய படைப்புகளில் வெளிப்படுத்தியுள்ளார். இஸ்லாமியச் சமுதாயத்தின் கொள்கைகளையும், கோட்பாடுகளையும், அந்தாதி, கோவை, பிள்ளைத்தமிழ், மஞ்சரி போன்ற இலக்கிய வகைகளின் உள்ளடக்கமாய்ப் படைத்துள்ளார். "தமிழகத்தின் சமய நல்லிணக்க தூதுவராகவே இந்நூற்றாண்டின் மத்தியில் நாஞ்சில் நாட்டில் வாழ்ந்த செய்கு தம்பிப் பாவலர் அவர்கள், தம்முடைய நபிகள் நாயக மான்ய மஞ்சரியில் நபிகள் நாயகம் உலக நபியாக ஆற்றிய உறுபணியை உயர்வுளப் பாடுகிறார்" எனும் பகுதியில் அறிஞர் மு. அப்துல் கரீம் விளக்கிக் கூறுகிறார்.

செய்கு தம்பிப் பாவலர் இஸ்லாமியச் சமயத்தைச் சேர்ந்தவராயினும், பிற சமயங்கள் மீது, மிகுந்த அன்பு கொண்டிருந்தார். அருட்பாவை, "மருட்பா" என்று தமிழறிஞர்கள் சிலர் வாதிட்டனர். அக்கருத்தை மறுத்து அருட்பாவை அருட்பாவே என்று நிறுவியவர் செய்கு தம்பிப் பாவலர். அதனால் அவரை காஞ்சிபுரம் வீதியில் யானை மீது அமர வைத்து ஊர்வலமாய் அழைத்து சென்று அவருக்கு பெரிய கோயிலில் பூரண கும்ப மரியாதை செய்தனர். இக்கருத்தை, இராமலிங்க அடிகளாரின் அருட்பாவுக்கு மாபெரும் எதிர்ப்பு முளைவிட்டது. யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் என்பாரின் மாணாக்கரும், தலைசிறந்த தமிழறிஞருமான கதிர்வேல் பிள்ளை என்பார் அருட்பாவை மருட்பா எனக்கூறி எதிர்த்த கூட்டத்தினரின் தளபதியாய் இருந்து சண்டமாருதம் செய்தார். அருட்பா சைவ நூலேயாயினும் அது தமிழ் நூல்; தன்னேரில்லா ஞானப் பூங்கா. எனவே, அதன்பெருமை காக்கப்பட்டாக வேண்டும்; கண்டனங்களிலிருந்து அது மீட்கப்பட்டாக வேண்டும் என்ற தமிழுணர்வு பிடர் பிடித்து உந்த செய்கு தம்பிப் பாவலர் அருட்பாக்களம் புகுந்தார். அடுக்கடுக்கான ஆதாரங்கள்; மிகமிகத் தெளிவான வாதங்கள் பாவலர்

முனைவர் பேராசிரியர் **கா. மு. பாதுசா**
பதிவாளர்,
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்.

“இயற்றமிழ் புலவர், கதிர்வேலருக்கு எதிர்வேலர், தேவாமிர்தப் பிரசங்க களஞ்சியம், சோடாவதானி, மாகமதி, சதாவதானி, கலைக்கடல், தமிழ்ப்பெரும் புலவர், மாத்தமிழ்ச் செம்மல் என்பன போன்ற பல்வேறு சிறப்புப் பெயர்களைக் கொண்டு விளங்கக் கூடியவர் பாவலர்.”



அவர்களின் வாயிலிருந்து கடல்மடை திறந்தாற்போன்று வெளிப்போந்தன. அருட்பா, அருட்பாவே என நிறுவப்பட்டது. தேவாமிர்த பிரசங்க களஞ்சியம் என்ற பட்டம் சூட்டி கௌரவிக்கப்பட்டார். இந்து சமய அன்பர்களின் வேண்டுகோளுக்கிணங்கிக் கலைமகளைப் பற்றியும், திருமாலைப் பற்றியும், சிவபெருமானைப் பற்றியும் பாடல்களில் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

***“திங்களொடு கங்கைமுடி சேர்த்தசிவன் நீயே***
***திரிபுரங்கள் நீறுபடச் சிரித்த சிவன் நீயே***
***சங்கினொடு சக்கரம்கை தாங்கியமால் நீயே***
***தசமுகனைப் போரினுயிர் தவிர்த்திடுமால் நீயே***
***நங்கைகலை மங்கைதவழ் நாவினையன் நீயே***
***நாரணனார் உந்திதரு நளினத்தோன் நீயே***
***எங்குமுள பரம்பொருளே என்றுமுள பொருளே***
***யானைமுகப் பொருளேவந் தேழைக் கருளே”***

என்ற பாவலரின் வரிகள் தமிழ் நெஞ்சங்களில் ஆழப்பதிந்து இருக்கிறதல்லவா?

திருநெல்வேலி நெல்லையப்பர் கோவிலில், ‘சைவம் வளர்த்த தமிழ்’ என்ற தலைப்பில் மூன்று நாள் சொற்பொழிவு நடந்தது. மூன்றாம் நாள் சொற்பொழிவில் பல்வேறு சைவ சமய சாத்திர, தோத்திரப் பாடல்களைக் கடல்மடை திறந்த வெள்ளம்போல் வெளிப்படுத்தினார். அப்போது, ‘கூர்ந்த மெய் ஞானத்தார்’ எனத் தொடங்கும் மாணிக்கவாசகர் பாடலில் அமைந்த,

***“கூர்த்தமெய்ஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்***
***நோக்கரிய நோக்கே நுணக்கரிய நுண்ணர்வே”***

என்னும் அடிகளைக் கூறி நிறுத்தி, மேற்கொண்டு கூறுமாறு சைவப் பெருமக்களை வினவினார். யாரிடமிருந்தும் தொடர் அடி வரவில்லை. அதனைக்கண்ட பாவலர் எஞ்சிய பகுதியைத் தாமே கூறிச் சைவர்களை நோக்கி, “இனியாகிலும் தமிழ் தழைத்தோங்கச் சைவம் வளர்த்த தமிழைத் தயை செய்து படிக்க முன்வாருங்கள்” எனக் கூறி முடித்தார்.

அறிஞர் தெ.பொ.மீ. அவர்கள் குறிப்பிட்டபடி இத்தகைய பன்முக ஆற்றல்பெற்ற ஒரு பேரொளியைத் தமிழகத்துக்கு அறிமுகப்படுத்துவது தமிழ் கற்றவரின் தலையாய கடமையாகும். 1847ஆம் ஆண்டு நாகர்கோயிலை அடுத்த ‘இலங்கடை’ என்னும் ஊரில் தோன்றிய இப்பெருமான் 76 ஆண்டுகள் தமிழ் மண்ணில் வளர்ந்து, வாழ்ந்து 1950ஆம் ஆண்டில் உயிர்நீத்தார். இவர் தமிழுக்கும் சமயத்திற்கும் செய்த பணி ‘மெக்கா’ வரை நீண்டது. மதநல்லிணக்கம் பேசுகின்ற இன்றைய அரசியல் விற்பனர்களுக்கு இவர் ஒரு முன்னோடியாவார். எல்லாச் சமயத்தவராலும் மதிக்கத்தக்க தமிழனாய் வாழ்ந்த பெருமை செய்குதம்பிப் பாவலருக்கே உண்டு. இஸ்லாமியர் நெஞ்சில் இடம்பெற்ற இவர், அயல் மதத்தவரின் அகங்களிலும் பேரிடம் பிடித்துவிட்டார். இவரை நேசித்த தமிழறிஞர்களும், யாசித்த தமிழ்ச் சான்றோர்களும் பல்லோராவர். ★

# கல்வியில் அக்கறை காட்டுகிற அரசு

மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் 10-வது வகுப்பு, 12-வது வகுப்புத் தேர்வுகளில், சிறப்பிடம் பெற்ற மாணவ-மாணவியர்க்கு பாராட்டும், அவர்களுடைய கல்விச் செலவு முழுமையையும் அரசே ஏற்றுக்கொள்ளும் என்கின்ற திட்டத்தை விளக்குகின்ற நிகழ்ச்சியும் வள்ளுவர் கோட்டத்திலே மிகச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

அறிவொளி ஏற்றக் கூடிய தக்க கருவி கல்விதான். அந்தக் கல்வியிலே கண்ணுங்கருத்துமாக இருந்து படித்துத் தேறியது மாத்திரமல்லாமல், முதல் தரமாக தேறிய நிலையும், அது கண்டு மகிழ்ச்சியுற்ற பெற்றோர்கள் நாம் பெற்ற குலக்கொழுந்துகள் இவ்வாறு வெற்றி பெற்றிருக்கிறார்களே என்று அடைகின்ற மன நிம்மதியும், நம்முடைய ஆசிரியத் தன்மையினால் அல்லவா நம்முடைய மாணவர்கள் நமக்குப் பெயரையும், புகழையும் தந்திருக்கிறார்கள் என்று பெருமிதப்படுகின்ற ஆசிரியர் பெருமக்கள், நெஞ்சு நிமிர்த்தி அமர்ந்திருக்கின்ற காட்சியும் உள்ளபடியே நெஞ்சம் கொள்ளை கொள்கின்ற இனிய காட்சியாகும்.

இத்திட்டம் 1996-ஆம் ஆண்டு நான்காவது முறையாக கழக ஆட்சி பொறுப்பேற்ற காலந்தொட்டு அறிமுகம் செய்யப்பட்டு, நடைமுறையில் இருந்து வருகின்ற ஒரு சீரிய, சிறந்த, செழுமையான திட்டமாகும். தமிழை ஒரு பாடமாகவேனும் எடுத்துப் படித்து, பத்து, பனிரெண்டாம் வகுப்புகளில் மாவட்ட அளவிலே முதல் மூன்று இடங்களைப் பெறுகின்ற மாணவ-மாணவிகளுடைய உயர்கல்விச் செலவை அரசே ஏற்கின்ற இந்தத் திட்டம் 1996-97ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டது. 1997-98இல் மாவட்ட அளவில் மூன்று இடங்கள் பெறும் மாணவ-மாணவிகளுக்கும் இந்தத் திட்டம் மேலும் விரிவுபடுத்தப்பட்டு, இத்திட்டத்தின்படி பத்தாம் வகுப்பிலே சாதனை படைக்கும் மாணவர்களுக்கு அவர்களின் மேல்நிலைக் கல்விச் செலவு அல்லது ஐ.டி.ஐ., பாலிடெக்னிக் நிறுவனங்களிலே சேர்ந்து பயிலும் செலவு ஆகியவற்றை அரசு ஏற்றுக்கொள்கிறது.

பனிரெண்டாம் வகுப்புத் தேர்வில் சாதனை படைக்கும் மாணவர்கள் மருத்துவம், பொறியியல் முதலிய தொழிற்கல்வி உட்பட எந்த வகைக் கல்விப் பிரிவில் சேர்ந்தாலும் அவர்களுக்குரிய செலவு முழுவதையும் அரசு ஏற்கிறது.

இத்திட்டத்தின்கீழ் இதுவரை உதவி பெற்றவர்கள் என்று எடுத்துக்கொண்டால் 1996ஆம் ஆண்டில் பத்தாம் வகுப்பு மாணவர்கள் மூன்று பேர்; பனிரெண்டாம் வகுப்பு மாணவர்கள் மூன்றுபேர்.

1997ஆம் ஆண்டு இத்திட்டத்தை விரிவுபடுத்தியதன் காரணமாக பத்தாம் வகுப்பு மாணவர்கள் நூற்று இருபத்தாறு பேர்; பனிரெண்டாம் வகுப்பு மாணவர்கள் தொண்ணூற்று ஒன்பது பேர்.

1998ஆம் ஆண்டில் பத்தாம் வகுப்பு மாணவர்கள் 139 பேர்; பனிரெண்டாம் வகுப்பு மாணவர்கள் தொண்ணூற்று ஏழு பேர்.

1999ஆம் ஆண்டில் பத்தாம் வகுப்பு மாணவர்கள் நூற்று பத்தொன்பது பேர்; பனிரெண்டாம் வகுப்பு மாணவர்கள் நூற்றியொரு பேர்.

இப்படிப்பட்ட இந்த எண்ணிக்கையில் மாணவர்களுடைய படிப்புச் செலவை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது.



### 905 மாணவ-மாணவிகளின் உயர் கல்விச் செலவை அரசு ஏற்கிறது

இந்த ஆண்டு பத்தாம் வகுப்பு மாணவர்கள் நூற்று இருபத்திரெண்டு பேர்; பனிரெண்டாம் வகுப்பு மாணவர்கள் தொண்ணூற்றி ஆறு பேர். இத்திட்டத்தின்படி, இதுவரை பத்தாம் வகுப்பிலே சாதனை படைத்த ஐந்நூற்றி ஒன்பது மாணவர்களுக்கும், பனிரெண்டாம் வகுப்பில் சாதனை படைத்த முன்னூற்றி தொண்ணூற்றி

ஆறு மாணவர்களுக்கும் ஆகமொத்தம் தொள்ளாயிரத்து ஐந்து மாணவர்களுடைய உயர்கல்விச் செலவு முழுவதையும் அரசு ஏற்றுக்கொள்கிறது.

நடப்பாண்டிற்கு இவ்வகை செலவினத்திற்காக 62 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த ஆண்டும்கூட, இப்படிப்பட்ட பாராட்டுக்களைப் பெறுகின்றவர்கள் இந்த வாய்ப்பை, இந்தத் திட்டத்தினுடைய பயனை நுகரக்கூடியவர்கள் எண்ணிக்கையில் மாணவர்கள் பனிரெண்டாம் வகுப்பில் நாற்பத்தைந்து பேர்; மாணவிகள் ஐம்பத்தோரு பேர். அதேபோல் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் மாநில – மாவட்ட அளவிலே முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவ, மாணவியர் எண்ணிக்கை நூற்றி இருபத்திரெண்டு. இதிலே மாணவிகள் எண்பத்தெட்டு பேர்; மாணவர்கள் முப்பத்து நான்கு பேர். மொத்தத்தில் மாணவியர் நூற்று முப்பத்தொன்பது பேர், மாணவர்கள் எழுபத்தொன்பது பேர்.

"அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பு எதற்கு?" என்று கேட்டது அந்தக் காலம். கேட்டவர் யார் என்று கேட்பது இந்தக் காலம் என்பதற்கு அடையாளமாகத்தான் மாணவியர் இந்த அளவிற்கு எண்ணிக்கையிலே பெருகியிருக்கின்றனர் என்பதை நான் மிகுந்த மகிழ்ச்சியோடு இங்கே தெரிவித்துக் கொள்கின்றேன். அவர்கள் எந்தெந்த உயர்கல்வியை எடுத்துக் கொள்வது என்ற முடிவிற்கு வந்து, இதுவரையிலே 1999ஆம் ஆண்டு முடிய பனிரெண்டாம் வகுப்பிலே இந்தத் தரம் பெற்றவர்களுடைய எண்ணிக்கை மருத்துவக் கல்லூரிகளிலே நூற்று பனிரெண்டு மாணவர்கள்; பொறியியல் கல்லூரிகளிலே நூற்று பதினான்கு மாணவர்கள்; இதர கல்லூரிகளிலே எழுபத்து நான்கு மாணவர்கள் சேர்ந்து உயர்கல்வி பெற்று வருகின்றார்கள். இந்த ஆண்டு கணக்கு இன்னும் எடுக்கப்படவில்லை. எனவே, அவரவர்கள் தாங்கள் விருப்பமுள்ள துறைகளிலே திறமை காட்டுவதற்கு இந்தத் திட்டம் வழிவகை செய்கிறது என்பதை நான் கூறமுடியும்.

இந்த ஆட்சி கல்விக்கு எந்த அளவு முக்கியத்துவம் தருகிறது என்பதை நீங்கள் மிக நன்றாக அறிவீர்கள். அதுவும் கிராமப்புறத்திலே இருக்கின்ற மாணவர்களுக்கு மேலும் வழிவகை செய்துதரவேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில், அவர்களுக்கென்று தனியாக அவர்களுடைய இடஒதுக்கீட்டிலேகூட கிராமப்புறத்து மாணவர்களுக்குப் பதினைந்து சதவீதம் என்ற உயர்ந்த திட்டத்தைக் கொண்டுவந்ததும் இந்த அரசுதான் என்பதையும், இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிலே இந்தத் திட்டம் தமிழகத்திலே செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதையும் நான் இங்கே அறிவிக்க விரும்புகின்றேன்.

குறிப்பாக, 1967ஆம் ஆண்டு அறிஞர் அண்ணா அவர்களுடைய தலைமையிலே ஆட்சிப் பொறுப்பேற்ற காலந்தொட்டு, அதற்கு முன்பு பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் கல்வியிலே காட்டிய அக்கறையை தொடர்ந்து பின்பற்றி வந்த அரசு இந்த அரசு என்பதை உங்களுக்கு நான் நினைவூட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

அதனுடைய வளர்ச்சியை உங்களுக்கு குறிப்பிட்டு சொல்ல வேண்டுமேயானால் கடந்த ஐந்தாண்டு காலத்தில் நான் எந்த ஆட்சி, யாருடைய ஆட்சி என்றெல்லாம் சொல்ல விரும்பவில்லை. ஐந்தாண்டு, நான்காண்டு என்று சொன்னாலே புரிந்து கொள்ளக்கூடிய ஆற்றல் உங்களுக்கு உண்டு என்ற காரணத்தால் சொல்கின்றேன்.

கடந்த ஐந்தாண்டு காலத்தில் தொடங்கப்பட்ட தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கை ஐந்நூற்று முப்பத்தொன்று; இந்த நான்காண்டு காலத்தில் தொடங்கப்பட்ட தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கை தொள்ளாயிரத்து அறுபத்தைந்து.

கடந்த ஐந்தாண்டு காலத்தில் நடுநிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட்ட நடுநிலைப் பள்ளிகள் நூற்று தொண்ணூற்று ஆறு; இந்த நான்காண்டு காலத்திலே ஐந்நூற்று பனிரெண்டு.

கடந்த ஐந்தாண்டு காலத்தில் உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட்ட தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கை நூற்று முப்பத்தி நான்கு; இந்த நான்காண்டு காலத்திலே முந்நூற்றி அறுபத்து நான்கு.

கடந்த ஐந்தாண்டு காலத்தில் மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்ட உயர்நிலைப் பள்ளிகள் எண்பது; இந்த நான்காண்டு காலத்திலே இருநூற்று தொண்ணூற்று ஆறு.

கடந்த ஐந்தாண்டு காலத்திலே அனுமதிக்கப்பட்ட கலை, அறிவியல் கல்லூரிகள் அறுபத்தைந்து; இந்த நான்காண்டு காலத்திலே நூற்று இருபத்தைந்து.

கடந்த ஐந்தாண்டு காலத்தில் அனுமதிக்கப்பட்ட சுயநிதி பொறியியல் கல்லூரிகள் முப்பத்திரெண்டு; இந்த நான்காண்டு காலத்திலே எழுபத்தைந்து.

இப்படி கல்வித்துறையிலே, உயர்கல்வி நிலையிலே சிறப்பெய்துகின்ற ஒரு நிலையை உருவாக்கக்கூடிய ஆட்சியாக இந்த ஆட்சி இருக்கின்றது. இது உங்களுடைய ஆட்சி என்பதற்கு அடையாளமாகத்தான் உங்களிலே திறமை காட்டுகின்றவர்களுக்கு, முதலிடம் பெறுகின்றவர்களுக்கு இந்த அரசினுடைய நிதி ஆதாரத்திற்கு உட்பட்டு எல்லோருக்கும் இன்றைய தினம் கல்வியை ஊட்டக்கூடிய அளவிற்குப் பல சாதனங்கள், வசதி வாய்ப்புகள் இந்த அரசின் சார்பாக செய்யப்பட்டிருந்தாலும்கூட, அதிலும் சிறப்பாக உங்களை ஊக்கப்படுத்துகின்ற வகையிலே செய்கின்ற காரியம்தான் இன்றைய நிகழ்ச்சி என்பதை நான் உங்களுக்கு நினைவுபடுத்தி, இதை தக்கவாறு நீங்கள் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். அடுத்தடுத்து வருகின்ற ஆண்டுகளிலே இன்னும் நிறைய மாணவ, மாணவியர் போட்டி போட்டுக் கொண்டு இந்தத் திட்டத்தை, இதனுடைய பயனை நுகரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, மாணவர்கள் யாரும் சோர்வடையாமல், மாணவியருடைய வெற்றியைக் கண்டு பொறாமைப்படாமல் போட்டி மனப்பான்மையோடு மாணவர்கள் தாங்களும் அந்த இடத்திற்கு வரவேண்டும் என்கின்ற எண்ணத்தோடு செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு அனைவரையும் பாராட்டி வாழ்த்துகிறேன்.

**– 2000ஆம் ஆண்டு 10, 12ஆம் வகுப்பு அரசுப் பொதுத்தேர்வுகளில் தமிழை ஒரு பாடமாகக் கொண்டு மாநில–மாவட்ட அளவில் முதன்மை பெற்ற மாணவ–மாணவியர்க்கு அவர்களது உயர்க்கல்வி செலவை ஏற்கும் விழா 29–7–2000 அன்று நடைபெற்றது. இந்த விழாவில் முதலமைச்சர் கலைஞர் ஆற்றிய உரையிலிருந்து... ★**

# தமிழ்நாட்டில் 5,000 இளைஞர் மன்றங்கள்

தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் 2000–2001ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்கள் மற்றும் மாணவர்கள் அல்லாத இளைஞர்கள் பயன்பெறும் வகையில் ஒவ்வொரு பஞ்சாயத்துக்களிலும், நகர்ப்புறங்களிலும் உள்ள விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மையம் ஒன்றிற்கு ஒரு இளைஞர் மன்றம் வீதம் தொடங்கப்படும் என அறிவித்தார்கள். அதைத் தொடர்ந்து நடப்பாண்டில் 5,000 இளைஞர் மன்றங்கள் தொடங்கப்படும் என்றும், இந்த மன்றங்கள் இளைஞர் களிடையே உறுதிப்பாட்டினையும், மதநல்லிணக்கத்தினையும் ஏற்படுத்துவதற்கு விளையாட்டு ஒரு முக்கியமான அம்சமாக இருப்பதால் விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மையம் ஒவ்வொன்றிலும் ஒரு இளைஞர் மன்றம் (Youth Club) பொது சந்திப்பு மையமாகச் செயல்படுமென இளைஞர் நலத்துறை கொள்கை விளக்கக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதற்கேற்ப மாநிலம் முழுவதும் இந்த ஆண்டு 5,000 இளைஞர் மன்றங்கள் அமைக்க ரூபாய் 25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள் ளார்கள். விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மையங்களுக்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் இளைஞர் மன்றங்களின் செயல்பாடுகளை கவனிப்பது ஆகியவற்றிற்கு இம்மன்றங்களே பொறுப்பேற்று தானாகவே நிதியைத் திரட்ட வேண்டும். மாவட்டங்களில் அமைக்கப்படும் இந்த இளைஞர் மன்றங்களுக்கென ஒரு தனிச் சின்னமும் (LOGO) எழுச்சியூட்டும் குறிக்கோளும் அரசால் உருவாக்கப்பட்டுள்ளன. ஊராட்சி மற்றும் நகர்ப்புறங்களில் அமைக்கப்படும் இந்த மன்றங்கள், அமைந்துள்ள இடத்தின் பெயரைக் கொண்டதாக மட்டுமே இருக்க வேண்டும். தனி நபரின் பெயரிலோ, ஒரு சமுதாயம் அல்லது எந்தவொரு கட்சியின் பெயரைக் கொண்டோ இருக்கக்கூடாது. இந்த மன்றத்தின் குறிக்கோள் 'விளையாடி மகிழ்வோம், ஒன்று கூடி வாழ்வோம், நாடு நலம் பெற உழைப்போம்' என்பதாக இருக்கவேண்டும்.

இவ்விளையாட்டு மன்றங்கள் 'நமக்கு நாமே' திட்டம் போல் ஒரு தன்னார்வ அமைப்பாக முன்னேறி செயல்பட வேண்டும். கல்லாமை போக்குதல், அறிவியல் முனைப்பு (Scientific temper) ஏற்படுத்துதல், மத நல்லிணக்கம், தேசிய ஒற்றுமை மற்றும் பாரம்பரியப் பண்பாட்டைப் பேணிய வாழ்வியல் முன்னேற்றத்திற்கும் வழிவகுக்கும் வகையில் செயல்பட வேண்டும். ஏனைய துறைகளில் உள்ள (IEC) - Information, Education, Communication (செய்தி, கல்வி, தகவல்) நடவடிக்கைகளுக்கும் இம்மன்றங்களின் பணி பயன்படுத்திக் கொள்ளப்பட வேண்டும்.

குறைந்தபட்சம் 25 உறுப்பினர்களைக் கொண்டதாக இம்மன்றங்கள் அமைக்கப்பட வேண்டும். இம்மன்றங்களில் உறுப்பினர்களாக சேர விரும்பும் இளைஞர்களின் வயது 15 முதல் 35 வயதிற்குட்பட்டு இருக்கவேண்டும். சம்பந்தப்பட்ட ஊராட்சி/நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு பகுதிகளில் வசிப்பவர்களாக இருக்க வேண்டும். அனைத்து சாதி மற்றும் சமுதாயங்களின் பிரதிநிதித்துவம் கொண்டதாகவும், மகளிர்க்கு தகுந்த பிரதிநிதித்துவம் அளிக்கும் வகையிலும் இம்மன்றங்கள் அமைக்கப்பட வேண்டும். இம்மன்றங்களின் பணிகள் 10 உறுப்பினர்கள் கொண்ட நிர்வாகக் குழுவால் கண்காணிக்கப்படும்.

இளைஞர் மன்றத்தின் நிர்வாகக் குழு குறைந்தபட்சம் மாதம் ஒருமுறை கூட்டப்பட வேண்டும். இளைஞர் மன்றத்தின் அனைத்து உறுப்பினர்களையும் கொண்ட பொதுக்குழு ஜூன் மாதம் ஒரு முறையும், டிசம்பர் மாதம் ஒரு முறையுமாக ஆண்டுக்கு இரண்டு முறை கூட்டப்பட வேண்டும். ஒரு நிர்வாகக் குழுக்கூட்டம் கூட்டப்படுவதற்கு குறைந்தபட்சம் உறுப்பினர்களின் எண்ணிக்கை (quorum) 5 ஆக இருக்க வேண்டும். அதேபோல் பொதுக்குழுக் கூட்டம் கூட்டப்படுவதற்கு குறைந்தபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை 10 நபர்களுக்கு குறையாமல் இருக்கவேண்டும்.

இந்த இளைஞர் மன்றத்தில் உறுப்பினராகச் சேரும் ஒவ்வொரு உறுப்பினரும் கீழ்க்காணும் 'இளைஞர்களுக்கான உறுதிமொழியினை' எடுத்துக்கொள்ள வேண்டும்.

**"இளமையும், மன உறுதியும் நிரம்பப் பெற்ற நான் என் சக இளைஞர்களுடன் மதம், சாதி எனும் குறுகிய வேறுபாடுகளைக் கடந்து இந்திய ஒருமைப்பாட்டிற்கும், தமிழக மேம்பாட்டிற்கும் மாவட்ட நிர்வாகத்துடன் ஒருங்கிணைந்து பணியாற்ற உளமார உறுதி கூறுகிறேன். நான் என் தனிப்பட்ட திறமைகளை வளர்த்துக் கொள்ளவும், உடல் வளத்தை அதிகரித்துக் கொள்ளவும், தலைமைப் பண்புகளை மேம்படுத்திக் கொள்ளவும் அயராது பாடுபடுவேன். எனது ஓய்வு நேரத்தை விளையாட்டு, வாசிப்பு, கலை, இலக்கியம், சமூகப்பணி, கிராம ஒற்றுமை, மது ஒழிப்பு, தீண்டாமை அழிப்பு போன்ற ஆக்க பூர்வமான பணிகளில் ஈடுபட்டு ஒளி படைத்த கண்களுடன், வலிமை மிக்க தோள்களுடன் விளங்கிட பயன் படுத்துவேன் என முழு மனதுடன் சூளுரைக்கிறேன்".**

## இளைஞர் மன்றங்களுக்கான (Youth Clubs) சின்னம்



**விளையாடி மகிழ்வோம்!**
**ஒன்றுகூடி வாழ்வோம்!!**
**நாடு நலம்பெற உழைப்போம்!!!**

தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்/ நன்கு பெயர் பெற்ற சுயஉதவிக்குழுக்கள்/நேரு யுவ கேந்திரா/உள்ளாட்சி அமைப்புகள் — ஆகியவற்றின் மூலம் இளைஞர் மன்றங்கள் அமைப்பதை மாவட்ட ஆட்சித்தலைவர் தீர்மானிப்பார். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட முகமை (Agency) 'இளைஞர் மன்ற ஊக்குநர் (Promoter) என்று அழைக்கப்படும். இந்த ஊக்குநர் இளைஞர் மன்ற உறுப்பினர்களுக்கு, குறைந்தபட்சம் 6 மாத காலம் பயிற்சி அளிப்பதும் (Hand holding period), எவ்வித இடர்ப்பாடுமின்றி இளைஞர் மன்றங்கள் இயங்குவதற்கும் உதவி செய்வார். இந்தக் காலகட்டத்தில் ஊக்குநர், இளைஞர் மன்ற செயற்குழு மாதத்திற்கு ஒரு முறை கூடுவதையும், பொதுக்குழுக் கூட்டம் ஒரு முறையாவது கூட்டப்படுவதையும், இளைஞர் மன்றத்தின் உறுப்பினர்களை மரம் நடுதல்/மண்சாலை அமைத்தல்/புதர்களை அகற்றுதல்/தூர்வாருதல் போன்ற ஆக்கப் பணிகளில் அவர்களை ஈடுபடுத்திக் கொள்வதையும் உறுதிப்படுத்த வேண்டும். ஒவ்வொரு இளைஞர் மன்றத்திலும் இப்பணிகளைச் செயலாக்குவதில் ஆகும் செலவினத்தை ஈடுகட்டும் பொருட்டு ரூ.500, அந்தந்த இளைஞர் மன்ற ஊக்குநர்களிடம் ரூ.250 வீதம் இரண்டு தவணைகளில் வழங்கப்படும்.

இந்த 6 மாத காலப் பயிற்சி காலம் முடிவடைந்தவுடன் நடைபெற்ற செயற்குழு, பொதுக்குழு கூட்டங்கள் மற்றும் சமூக நலப்பணிகள் மற்றும் பிற ஊக்கப் பணிகள் ஆகியவற்றின் விவரங்கள் அடங்கிய அறிக்கையினை இளைஞர் மன்ற அமைப்பாளர் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்ப வேண்டும் எனவும் அரசு ஆணையிட்டுள்ளது.

இந்த இளைஞர் மன்றங்களை இளைஞர்கள் பயன்படுத்திக் கொண்டு விளையாட்டின் மூலம் ஒன்றுபட்டு, சாதி, மத வேறுபாடுகளைக் கடந்து சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்தி ஆக்கப்பூர்வமானப் பணிகளில் ஈடுபட்டு தமிழகத்தையும், தமிழக மக்களையும் வளமும், நலமும் பெறச் செய்ய வேண்டுமென்று தமிழக அரசு இளைஞர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

★ ★ ★

முக்கிய இயற்கை வளமான தண்ணீரை ஆதரவாக மேம்படுத்தவும், திறமையாக நிர்வகிக்கவும் கொண்டுள்ள அக்கறைக்காக பிரதமர் அவர்களைப் பாராட்டுகிறேன். முக்கியமான பிரச்சினைகள் பற்றி மட்டுமே நான் சுருக்கமாகப் பேச விரும்புகிறேன்.

**நிகழ்ச்சி நிரல் பொருள்–1 :** வரைவு தேசிய நீர்க் கொள்கை (1998) சிறந்த சிந்தனையுடன் கூடிய, தெளிவான, பயன்தரக்கூடிய "தேசிய நீர்க்கொள்கை 1998" வரைவு அறிக்கையை கொண்டு வருவதற்கு நீர் வளத்துறை அமைச்சகம் மேற்கொண்ட முயற்சிகளை நான் நிச்சயமாக பாராட்டவேண்டும். இது ஏற்கெனவே இருந்துவரும் தேசிய நீர்க்கொள்கை – 1987–யை மேம்படுத்தி உருவாக்கப்பட்டதுதான் என்பதில் ஐயம் எதுவுமில்லை; ஆனால், "நீர்வளத்தை"ப் பொறுத்தவரை, உருவாகி வரும் சவால்களையும், முன்னேற்றங்களையும் பரிசீலித்து இயன்ற அளவிற்கு "தேசிய நீர்க்கொள்கை–1998"ன் வரைவுக் கொள்கையில் இணைப்பதற்கு நீர்வள அமைச்சகம் அதிக கவனம் எடுத்து செயல்பட்டுள்ளது.

**தேசிய நீர்க்கொள்கை வரைவு அறிக்கைக்கு பரந்த அளவிலான ஒப்புதல்**

1998 அக்டோபர் 29ஆம் தேதி நடைபெற்ற தேசிய நீர்வளக் குழுவின் கடந்த கூட்டத்தில் விவாதிக்கப்பட்டபோது "தேசிய நீர்க்கொள்கை–1998"ன் வரைவு அறிக்கைக்குப் பரந்த அளவிலான ஒப்புதலை எங்கள் அரசு அளித்துள்ளது. எனினும், அவ்வாறு செய்யும்போது "நதிப்படுகை மாநிலங்களிடையே தண்ணீர் ஒதுக்கீடு செய்வதற்கான வழிகாட்டி நெறிகளை" உருவாக்குவதற்கான பிரிவு ஒன்றை சேர்ப்பதற்கான உத்தேச முடிவை நாங்கள் திட்டவட்டமாக நிராகரித்துவிட்டோம். முதன்முதலாக வழிகாட்டி நெறிகள் பற்றிய இந்தக் கருத்து 1986ஆம் ஆண்டு கூறப்பட்டதிலிருந்து அத்தகைய "வழிகாட்டி நெறிகள்" எந்தப் பயனும் அளித்ததில்லை, அது பயனற்ற நடவடிக்கை என்பதே தமிழ்நாட்டின் நிலையாக இருந்துள்ளது என்பதை இந்த மதிப்பிற்குரிய அவைக்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன். நன்கு பரிசீலிக்கப்பட்ட அந்த நிலையை எங்கள் அரசு மாற்றிக் கொள்ள முடியாது.

"தேசிய நீர்க்கொள்கை–1998" கடந்த தேசிய நீர்வளக்குழுக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட பிறகு, எங்கள் முன்வைக்கப்பட்டுள்ள வரைவு அறிக்கையில் சில சிறிய அளவிலான திருத்தங்கள் செய்யப்பட்டிருப்பதை நான் காண்கிறேன். எனவே, எங்கள் அரசு இதன் உள்ளடக்கத்தை மீண்டும் ஒருமுறை முழுமையாக ஆராய்ந்து மேலும் சில சிறிய மாற்றங்களைத் தெரிவிக்க முடிவு செய்துள்ளது. அவை இந்த உரையின் முடிவில் இந்தக் குழுவின் பரிசீலனைக்காகத் தரப்பட்டுள்ளன; அவற்றை பரிசீலிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

# தேசிய நீர்வளக்குழுக் கூட்டம்

☐ முதலமைச்சர் கலைஞர்

**வழிகாட்டி நெறிகளை உருவாக்கும் பிரிவு நீக்கப்பட வேண்டும்**

உண்மையில், வழிகாட்டி நெறிகளை உருவாக்குவது பற்றிய 21–ஆவது பிரிவு நீக்கப்படவேண்டும். இந்தக் கொள்கை ஆவணத்தில் கூறப்பட்டுள்ள யோசனைகளில் மாநிலங்களுக்கு இடையிலான நதிகள் தொடர்பான கருத்துக்களைத் தவிர்த்து மற்றவற்றிற்கு மசோதாக்கள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தால் அத்தகைய சட்டங்களை இயற்றும் அதிகாரம் மாநிலங்களுக்கே உண்டு என்று நான் கருதுகிறேன். மாநிலங்களின் அதிகாரங்களை ஆக்கிரமிக்கும் மனோ பாவம் கட்டுப்படுத்தப் படவேண்டும்.

உதாரணமாக நிலத்தடி நீர் நிர்வாகம் மற்றும் மேம்பாடு பற்றிய சட்டம் மாநில அரசுகளின் எல்லைக்கு உட்பட்டது. மத்திய நிலத்தடி நீர் ஆணையம் மத்திய அரசால் அமைக்கப்பட்டிருப்பது. இதில் மாநில அரசுகளின் அதிகாரத்தை மீட்கும் வகையில் மீண்டும் பரிசீலிக்கப்பட வேண்டும்.



நாங்கள் தெரிவிக்கும் திருத்தங்களுடன் "தேசிய நீர்க்கொள்கை–1998" இறுதி செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறேன். கொள்கை ஆவணத்திலிருந்து "நதிப்படுகை மாநிலங்களுக்கிடையே நீர் ஒதுக்கீட்டுக்கான வழிகாட்டி நெறிகளை" உருவாக்குவதற்கான பிரிவு நீக்கப்படவேண்டும் என்பதை நான் மீண்டும் வலியுறுத்துகிறேன். நதி நீரைப் பயன்படுத்தும் மாநிலங்களின் பயன்பாட்டுக் கொள்கை நீர் ஒதுக்கீட்டுக்கு வழிகாட்ட வேண்டுமென்ற பஞ்சாப் அரசின் கொள்கையை எங்கள் அரசும் ஆதரிக்கிறது.

**நிகழ்ச்சி நிரல் பொருள்–2** : மாநிலங்களுக்கிடையே நீர் ஒதுக்கீட்டுக்கான தேசிய கொள்கை வழிகாட்டி நெறிகள்.



1987இல் பிரதமர் ராஜீவ்காந்தி தலைமையில் நடைபெற்ற நீர்வளக்கவுன்சிலின் இரண்டாவது கூட்டத்தில், அதன் தொடக்க நிலையிலேயே "வழிகாட்டி நெறிகளை" உருவாக்கும் முயற்சிக்கு மத்திய திட்டக் கமிஷனிடமும், பல்வேறு மாநில அரசுகளிடமும் ஆதரவு கிடைக்க வில்லை. தேவையின் அடிப்படை யிலும் நிரூபிக்கக்கூடிய அடிப்படை யிலும் அந்த முடிவு எடுக்கப்பட்டது.

1. வரைவு தேசிய நீர்க் கொள்கையை பரிசீலிப்பதற்காக நியமிக்கப்பட்ட செயற்குழு, பொதுக்கருத்தின் அடிப்படையில், தேசிய கொள்கையின் மாநிலங்களுக்கு இடையிலான நதிகளில் தண்ணீர் ஒதுக்கீட்டிற்கான எந்த கொள்கை வழிகாட்டி நெறிகளையும் நீக்குவது என்று முடிவு செய்தது.

2. 1987 செப்டம்பரில் பிரதமர் ராஜீவ்காந்தி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் வழிகாட்டி நெறிகளை சேர்க்கும் யோசனையை நிராகரித்துவிட்டு நீர்க்கொள்கை. ஏற்பட்டது. அக்கூட்டத்தில் ராஜீவ்காந்தி குறிப்பிட்டதைப் போல மாநிலங்களுக்கு இடையிலான தண்ணீர் தாவா சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட நடுவர் மன்றங்கள் அளித்த தீர்ப்புகளே தீவிர பரிசீலனை மற்றும் ஆய்வுகளுக்குப் பின்னர் இந்த வழக்கிற்கான சட்டங்களாகக் கூடும்.

3. தண்ணீர் ஒதுக்கீட்டிற்கான கொள்கை வழிகாட்டி நெறிகளின் தேவையை ஆராய்ந்த மத்தியத் திட்டக் கமிஷனும் அத்தகைய வழிகாட்டி நெறிகள் பயன்படும் விதம் குறித்து சந்தேகம் தெரிவித்துள்ளன.

4. இப்போது வரைவு செய்யப்பட்டுள்ளது போன்ற மாநிலங்களுக்கு இடையிலான தண்ணீர் ஒதுக்கீட்டிற்கான கொள்கை வழிகாட்டி நெறிகள், சட்டபூர்வமான ஆதரவைப் பெற்றிருக்கவில்லை. இதை நீர் வளத்துறை அமைச்சகமே ஒப்புக் கொண்டுள்ளது. அவை சட்டப்படி கட்டுப்படுத்தக் கூடியவை அல்ல. எனவே நீர் தாவா நடுவர் மன்றங்கள் உட்பட எந்த நீதித்துறை அமைப்பிலும் இவற்றின் மீது நிச்சயமாக வழக்காட முடியாது.

5. இத்தகைய கொள்கை வழிகாட்டி நெறிகளுக்கு இந்த மதிப்பிற்குரிய அவை ஒப்புதல் அளிக்க மேற்கொள்ளும் எந்த முயற்சியும் நடுவர் மன்றத்தின் அதிகாரத்திற்குள் ஆக்கிரமிப்பதற்குச் சமமானதாகும். மேலும் இந்த வழிகாட்டி நெறிகள் அரசியலமைப்புச் சட்டத் தேவைகள் எதையும் தெளிவாக அறிவிக்கவில்லை. எனவே அவற்றைப் பயன்படுத்த முடியாது.

இதை உறுதிப்படுத்தும் வகையில், சட்ட வல்லுநர்கள் 1956ஆம் ஆண்டு மாநிலங்களுக்கு இடையிலான தண்ணீர் தாவா சட்டம் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 262ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் இயற்றப்பட்டதே தவிர, அரசியலமைப்புச் சட்டத்தில் ஏழாவது அட்டவணையில் குறிப்பிடப் பட்டுள்ள முதல் பட்டியலின் 56ஆவது என்ட்ரி அல்லது இரண்டாவது பட்டியலில் 17ஆவது என்ட்ரி மூலம் அல்ல என்று கருத்து தெரிவித்துள்ளனர்.

உண்மையில், காவிரி நதிநீர்ப் பிரச்சினை நடுவர் மன்றத்தின் 1991ஆம் ஆண்டின் ஸ்பெஷல் ரிபரன்ஸ் எண்.1 வழக்கில் ஏ.ஐ.ஆர்.1992 எஸ்.சியில் குறிப்பிட்டுள்ளபடி மாநிலங்களுக்கு இடையிலான தண்ணீர் தாவா சட்டத்தை முதல் பட்டியலின் 56ஆவது என்ட்ரியுடன் தொடர்புடையதாகக் கொள்ள முடியாது. ஆனால் அது அரசியலமைப்புச் சட்டத்தின் 26ஆவது பிரிவுடன் தொடர்புடையதாக நாடாளுமன்றத்தில் செய்யப்பட்டது என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

நாடாளுமன்றமோ, மாநில சட்டமன்றங்களோ மேற்கண்ட தகராறுகளுக்கு வழக்கு தொடருவதற்காகவோ அல்லது எந்த வகையிலாவது அரசியலமைப்புச் சட்டத்தின் 26ஆவது பிரிவின் கீழ் வழக்காடுவதற்காக உருவாக்கப்பட்ட வழக்கையோ, விசாரணை அமைப்பையோ பாதிக்கவோ தலையிடவோ வழக்கு தொடருவதற்காக சட்டம் எதையும் இயற்ற முடியாது.

அதே சிறப்பு குறிப்பு வழக்கில் உச்சநீதிமன்றம் இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.

"மாநிலங்களுக்கு இடையே ஓடும் நதியின் தண்ணீர் அது ஓடும் மாநிலப் பகுதிகளில் பாய்ந்த போதிலும் அந்த தண்ணீர் எந்த ஒரு மாநிலத்திலும் இருப்பதாகக் கூற முடியாது. அது ஓடிக்கொண்டே இருக்கிறது. அத்தகைய தண்ணீருக்கு எந்தவொரு மாநிலமும் மற்ற மாநிலங்களுக்கு அவர்களுக்குரிய சமமான பங்கை அளிக்காமல் சிறப்புரிமை கோர முடியாது"

மாநிலங்களுக்கிடையே தண்ணீர் ஒதுக்கீடு செய்ய தேசிய கொள்கை வழிகாட்டி நெறிகள் உருவாக்குவதை எங்கள் அரசு முற்றிலும் எதிர்ப்பதால், நான் இந்த அவையின் முன் வைக்கப்பட்டுள்ள வரைவுக் கொள்கையின் சிறப்புக்களை ஆராய விரும்பவில்லை.

### சர்க்காரியா கமிஷன் பரிந்துரைப்படி தண்ணீர் தாவா சட்டத்தில் திருத்தம்

மாண்புமிகு பிரதமர் அவர்களின் அனுமதியோடு, மாநிலங்களுக்கு இடையிலான தண்ணீர் தாவா சட்டம் 1956–ஐ திருத்துவதற்குச் சர்க்காரியா கமிஷனால் பரிந்துரைக்கப்பட்டு, மாநிலங்களுக்கு இடையிலான மன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட "ஒன்றும், தேசிய தோற்றத் திட்டத்தின்கீழ் படுகைகளுக்கிடையே தண்ணீர் மாற்றும் திட்டம்'' மற்றொன்றுமாக இரு கருத்துக்களைப் பரிசீலனைக்கு வைப்பதற்கு அனுமதிக்க வேண்டும்.

பிரதமராக நீங்கள் பதவியேற்றவுடன் நீங்கள் அறிவித்த தேசிய செயல் திட்டம் பற்றிய என் கருத்துக்களை நினைவூட்ட பிரதமர் அவர்கள் என்னை அனுமதிக்க வேண்டும். தண்ணீர் தாவாக்களை திறமையுடன் முறையாக தீர்ப்பதற்கும், அவற்றைக் குறிப்பிட்ட காலக்கெடுக்குள் அமல்படுத்துவதற்கும் தங்களுக்கு இருக்கும் அக்கறையைப் பாராட்டி 1998 மார்ச் 28ஆம் தேதி நான் உங்களுக்குக் கடிதம் எழுதினேன். அதை நிறைவேற்ற எங்கள் அரசின் முழுமையான ஒத்துழைப்பையும் தெரிவித்திருந்தேன்.



அந்த அடிப்படையில் மாநிலங்களுக்கு இடையிலான தண்ணீர் தாவாக்களைத் தீர்ப்பது, 1956ஆம் ஆண்டு மாநிலங்களுக்கு இடையிலான நதிநீர் தாவா சட்டத்தில் திருத்தங்களைச் செய்து சர்க்காரியா கமிஷன் பரிந்துரைகளைச் செயல்படுத்துவதன் மூலமே இயலும் என்பதை நான் வலியுறுத்துகிறேன். அத்துடன் அரசியலமைப்புச் சட்டத்தின் 262ஆவது பிரிவிலிருந்து பெறப்படும் சட்டத்தை கடுமையாக மத்திய அரசு செயல்படுத்துவதன் மூலமே இயலும் என்பதையும் வலியுறுத்துகிறேன்.

### அமல்படுத்த காலக்கெடுவுக்கு அமைச்சரவை எதிர்ப்பு தேவையில்லை

இந்தப் பணி நிர்வாக வழிகாட்டி நெறிகளின் மூலம் நிச்சயமாக சாதிக்க முடியாது. தங்கள் தலைமையில் 1999 ஜனவரி 22ஆம் தேதி நடைபெற்ற கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது போல, மாநிலங்களுக்கு இடையிலான மன்றத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது போன்று, சர்க்காரியா கமிஷன் பரிந்துரைகளைச் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு தீவிரப்படுத்தியிருப்பதை அறிந்து நான் மகிழ்ச்சியடைகிறேன்.

பரிந்துரைகளில் ஒன்றான நடுவர் மன்றத் தீர்ப்புகளை இரண்டு ஆண்டுகளுக்குள் அமல்படுத்த வேண்டும் என்பதில் நீர்வளத்துறை அமைச்சகத்திற்கு சில எதிரான கருத்துக்கள் உள்ளன என்பதை பிரதமர் அவர்கள் அறிந்திருக்கலாம். 2000 மே 20ஆம் தேதி நடைபெற்ற மாநிலங்களுக்கு இடையிலான மன்றத்தின் 6ஆவது கூட்டத்தில் நான் ஏற்கெனவே சுட்டிக்காட்டியதைப் போன்று, 1956ஆம் ஆண்டு மாநிலங்களுக்கு இடையிலான தண்ணீர் தாவா சட்டத்தின் 6ஆவது பிரிவில் நடுவர் மன்றத் தீர்ப்புகளை அமல்படுத்துவதற்கான காலக்கெடு இல்லாததை தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டு, சில மாநிலங்கள் நடுவர் மன்றத்தீர்ப்பை அமல்படுத்துவதைத் தாமதப்படுத்தி வருகின்றன. உண்மையில், இரண்டு ஆண்டுகளுக்குள் அதை அமல்படுத்துவதில் ஏதேனும் நியாயமான பிரச்சினைகள் இருந்தால் மாநிலங்களுக்கிடையேயான மன்றத்தில் தீர்மானிக்கப்பட்டது போன்று, மத்திய அரசு தேவைக்கு ஏற்ப அதை அமல்படுத்தும் காலத்தை 2 ஆண்டுகளுக்கு மேலும் நீட்டித்துக் கொடுக்கலாம் என்ற பாதுகாப்பான பிரிவு ஒன்றும் உள்ளது. எனவே, இந்த அடிப்படையில் மாநிலங்களுக்கு இடையிலான மன்றத்தின் முடிவு நன்கு பரிசீலிக்கப்பட்டது என்றாலும், மாண்புமிகு பிரதமர் அவர்களிடம் இந்தப் பரிந்துரையையும் ஆதரவாக பரிசீலித்து 1956ஆம் ஆண்டு மாநிலங்களுக்கு இடையிலான தண்ணீர் தாவா சட்டத்தில் தேவையான திருத்தங்களைச் செய்ய வேண்டுகிறேன்.

இன்றைக்கு நமக்குத் தேவைப்படுவது அதிலும் குறிப்பாக அரசு இயந்திரங்களுக்கு மிகவும் அத்தியாவசியமானது. சில குறிப்பிட்ட இனங்களில் அதிக அக்கறை கட்டப்பட வேண்டும் என்பதோடு நீர்வளம் இல்லாத இடங்களில், அங்கு திருப்திகரமாகவும் நம்பிக்கையோடும் நீர்வளங்களைப் பயன்படுத்தக் கூடிய வகையில் ஈடுபாட்டுடன் செயல்பட வேண்டும் என்பதுதான்.

அரசியல் எல்லைகளை மீறி இயற்கை வளங்களை மீறி, உபரி படுகையிலிருந்து பற்றாக்குறை படுகைக்கு வேண்டிய வளங்களைத் துரிதமாக்கிட, பணிகள் முடிக்கப்படவேண்டும்.

பற்றாக்குறை படுகையிலிருந்து தண்ணீர் பகிர்ந்தளிப்பது என்பது வேலையை கடுமையாக்கும் ஒன்றாகும். தேசிய இழப்பை அது அதிகரிக்கும். நாட்டின் வேளாண்மை மற்றும் வேளாண்மை பொருளாதாரத்தில் ஒருங்கிணைப்பு ஏற்படாத நிலையையும் அது உருவாக்கும். இதற்கெல்லாம் விரைந்து ஒரு முடிவை கண்டாக வேண்டும். அதற்கேற்ப, இமாலய நதி வளர்ச்சிக் குழு

மற்றும் தீபகற்ப நதி வளர்ச்சிக் குழு உள்ளடக்கிய தேசிய திட்டத்தை வலுவுள்ளதாக ஆக்க வேண்டும்.

**குறைந்த கால இடைவெளியில் நதிகளை இணைக்கும் திட்டம்**

விரிவான பரிசீலனையுடன், குறைந்த கால இடைவெளியில், நதிகளையெல்லாம் இணைக்க வேண்டும் என்ற யோசனையுடன், தேசிய நதி வளர்ச்சிக் குழுமத்தின் 30 ஆண்டு கால திட்டத்தை எனது அரசு 1998ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஏற்றுக்கொண்டது.

இதுதவிர வேறு யோசனையையும் நாங்கள் தெரிவித்தோம். அதாவது பம்பா—அச்சன்கோயில் வைப்பாறு, நேத்ராவதி – ஹேமாவதி போன்ற நதிகளின் இணைப்பை அது தொடர்பான சாதக அறிக்கையில் வந்தவுடன் உடனடியாக எடுத்துக் கொள்ளவேண்டும். இறுதி அறிக்கை வரும்வரை காத்திருக்கத் தேவையில்லை என்றும் அப்போது தெரிவித்தோம்.

என்னுடைய முந்தைய ஆலோசனைப்படி, உங்களது தலைமையின் கீழ் உயர் மட்டக்குழு ஒன்று ஏற்படுத்தி, தீபகற்ப நதி வளர்ச்சிக் குழுவின் முடிவை இறுதி செய்து அமலாக்கிட வலியுறுத்தி, 14-6-2000 அன்று மீண்டும் உங்களுக்கு நான் கடிதம் எழுதியுள்ளேன். பம்பா – அச்சன் கோயில் – வைப்பாறு நதிகள் இணைப்பு பற்றியும் அதில் உள்ளது.

இந்த நாட்டில் தண்ணீர் குறைவால் ஏற்படும் துன்ப துயரங்களைக் களைந்து, அங்கெல்லாம் மேன்மை நிலை எய்த வேண்டுமானால் அதற்கு வெகு காலம் பிடிக்கலாம். எனவே இது குறித்து, பிரதமர் அவர்கள் தனித் கவனம் செலுத்தி அப்படிப்பட்ட பகுதிகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக தண்ணீர் பங்கீடு குறித்து இங்கே நம்முன் வைக்கப்பட்டுள்ள கொள்கை வழிகாட்டு நெறிகள் குறித்த திட்ட நகல் எவ்வித பலனையும் அளிக்காது என்று பிரதமர் அவர்களுக்கும், இக்கவுன்சிலின் உறுப்பினர்களுக்கும் தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன்.

ஏற்கெனவே முடிவான பிரச்சினைகளை முடிக்காமல் செய்யக் கூடியவைகள்தான் அதில் உள்ளன. அதுமட்டு மின்றி ஏற்கெனவே மாநிலங்களுக்கிடையே உள்ள பிரச்சினைகளை அது மேலும் அதிகரிக்கும். அதுமட்டு மின்றிமாநில பிரச்சினைகளில் தலையிடும்.

மாநிலங்களுக்கிடையேயான நதி நீர் தாவாவின் சட்டப் பிரச்சினைகளையும் அதன் நடைமுறைகளையும் அது தீர்க்காது. அது மட்டுமின்றி அதை பல கூறுகளாக பிரிக்கவும் ஊக்கப்படுத்தும்.

எனவே, இந்த கொள்கை வழிகாட்டு நெறிகளை இந்த அவையில் எழுப்பாமல், முழுக்க முழுக்க கைவிடுமாறு நான் இந்த அவையின் உறுப்பினர்களை கண்டிப்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**– டெல்லியில் 7-7-2000 அன்று நடைபெற்ற தேசிய நீர்வளக் குழுவின் நான்காவது கூட்டத்தில் படிக்கப்பட்ட முதலமைச்சர் கலைஞர் அவர்களது உரை.**

★ ★ ★

## எய்ட்ஸ் தடுப்பு பிரச்சாரம் : தமிழக அரசுக்கு ஐ.நா.சபை பாராட்டு

பாதுகாப்பான உடலுறவுக்கு ஆணுறையைப் பயன்படுத்த வேண்டும் என்று தமிழக அரசு மேற்கொண்டு வரும் பிரச்சாரம் பாராட்டுக்குரியது.

செக்ஸ் உணர்வில் அதிக நாட்டமுள்ள இளைஞர்கள் மத்தியில் அறியாமையும் தவறான கண்ணோட்டமும் இருந்து வருகின்றன. இதை அகற்றுவதற்கு எய்ட்ஸ் தடுப்புப் பிரச்சாரம் பயன்பட்டு வருகிறது.

தமிழகத்தில் 1995–க்கும் 1997–ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலகட்டத்தில் கர்ப்பிணிகளிடம் வைரஸ் கிருமிகள் பரவியது 1.25 சதவீதம் அதிகரித்தது.

எய்ட்ஸ் நோய் பரவுவதைத் தடுக்க தமிழக அரசு தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டது. எய்ட்ஸ் நோய்த் தடுப்பு அமைப்பை ஏற்படுத்தியது. எய்ட்ஸ் நோய்த் தடுப்பு பிரச்சாரத்தை தீவிரமாக்க அரசு சார்பற்ற தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் உதவி கோரப்பட்டது.

தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் எய்ட்ஸ் தடுப்பு அமைப்புகளும் அரசு நிதியுதவியுடன் தீவிர செயல் திட்டத்தில் ஈடுபட்டன. இதனால் விலை மாதர்களிடம் செல்லும் ஆண்கள் எண்ணிக்கை குறைந்தது. அத்துடன் பாதுகாப்பான உடலுறவுக்கு ஆணுறைகளைப் பயன்படுத்தும் போக்கும் அதிகரித்தது.

மக்கள் தொகை அதிகம் உடைய இந்தியாவிலும் சீனாவிலும் ஆப்பிரிக்காவைப் போல, எய்ட்ஸ் பாதித்தவர்களின் எண்ணிக்கை அதிகமில்லை. ஆனால் திருமணத்துப் புறம்பான வழிகளில் பாலியல் இன்பத்தைப் பெற முற்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் வைரஸ் கிருமிகளின் பாதிப்பு பரவலாக இருப்பதற்கு வாய்ப்புள்ளது.

இந்தியாவில் இரண்டாயிரமாண்டின் துவக்கத்தில் 1,000 பேருக்கு மூன்று பேர் என்ற அளவில் எய்ட்ஸ் பாதிப்பு இருந்தது. அதாவது 37 இலட்சம் பேர் எய்ட்ஸ் நோய்த் தாக்குதலுக்கு ஆளாகியிருந்தது தெரிய வந்தது. உலகில் ஆப்பிரிக்காவுக்கு அடுத்து இத்தகைய தாக்குதல் அதிகம் உள்ளது இந்தியாவில் தான் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் எய்ட்ஸ் பாதிப்பு பரவலாக இருந்து வருகிறது. சில மாநிலங்களில் அறவே இல்லாமலும் இதர மாநிலங்களில் 2 சதவீதம் என்ற அளவிலும் அதற்கு மேலும் இருந்து வருகிறது.

வடகிழக்கு மாநிலங்களில் போதை மருந்துகள் பயன்படுத்துவது அதிகரித்து வருவதால் எய்ட்ஸ் தாக்குதலும் தீவிரமாகி வருகிறது. மணிப்பூர் இதில் முன்னணியில் இருந்து வருகிறது.

**எய்ட்ஸ் நோய் பாதிப்பு பரவலாகக் குறையும்**

1999ஆம் ஆண்டு டெல்லி, ஐதராபாத், மதுரை, புனே, திருப்பதி, வேலூர் ஆகிய இடங்களில் உள்ள விலை மாதர்களுக்கு எய்ட்ஸ் பாதிப்பு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவர்களில் நான்கில் ஒரு பகுதியினருக்கு பாதிப்பு இருக்கும் விவரம் ஆய்வில் தெரியவந்தது. மும்பையில் அதிகபட்சமாக 71 சதவித விலை மாதர்கள் இந்தத் தாக்குதலுக்கு ஆளாகியுள்ளனர்.

எய்ட்ஸ் நோய் பரவாமல் தடுக்க இந்திய அரசும் பல மாநிலங்களும் தீவிரப் பிரச்சாரத்தை நடத்தி வருகின்றன. தடுப்பு செயல்திட்டங்களையும் நடைமுறைப்படுத்தி வருகின்றன. இதன் மூலம் எய்ட்ஸ் நோய் பாதிப்பு விகிதம் பரவலாகக் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

*– உலக அளவில் எய்ட்ஸ் மற்றும் கிருமிகள் தடுப்புக்கான நடவடிக்கைகள் குறித்த ஐ.நா. அறிக்கையிலிருந்து.*

# தீ விபத்தும் - தீயணைப்புத்துறையும்

தீ மூலம் ஏற்படுகின்ற ஆபத்தைத் தடுத்து அமைதியாக மாநில மக்கள் வாழ்வதற்காக உழைப்பதே தமிழ்நாடு தீயணைப்புத் துறையினரின் அரிய பணி.

★ தீ விபத்து ஏற்படுகின்ற இடங்களுக்கு விரைந்து சென்று முனைப்புடன் தீயணைப்புப் பணியை மேற்கொண்டு, உயிர்சேதம் மற்றும் உடைமைகளின் சேதத்தை எந்த அளவுக்குக் குறைக்கலாமோ அந்த அளவுக்குக் குறைத்தல்.

★ வெள்ளம் மற்றும் நில நடுக்கம் போன்ற இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்பட்ட இடங்களில் மக்களைக் காப்பாற்றி உயிர்ச் சேதமும் உடைமைச் சேதமும் ஏற்படாமல் தடுக்க மீட்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளல்.

★ விபத்துகள் ஏற்பட்ட இடங்களுக்கு விரைந்து, இடிந்து விழுந்த கட்டடங்களுக்கு இடையில் சிக்கித் தவிக்கின்ற மக்களைக் காப்பாற்றி உயிர்சேதத்தைத் தவிர்த்தல்.

★ அவசர காலங்களில் துன்புறும் மக்கள் மற்றும் மிருகங்களைக் காப்பாற்றுதல்.

★ தீ மூலம் ஏற்படுகின்ற அழிவைக் குறைப்பதற்காக, மக்களுக்குத் தீத்தடுப்பு மற்றும் தீயணைப்பு முறைகள் சம்பந்தமான அடிப்படை பயிற்சி அளித்தல்.

★ தீ விபத்து ஏற்பட்ட இடங்களுக்குச் செல்லும் தீயணைப்போருக்கு உதவிட நமக்கு நாமே என்ற அடிப்படையில் குழுக்கள் அமைப்பதை ஊக்குவித்து,





தீப் பாதுகாப்பு மற்றும் சேதம் ஏற்படாமல் தடுப்பது குறித்து மக்களுக்கு உணர்த்துதல்.

★ நெருக்கடியின் போது காலதாமதமின்றி மக்கள் தொடர்பு கொள்வதற்கு ஏதுவாக அலுவலர்களின் பெயர்கள், தீயணைப்பு நிலையங்கள் மற்றும் தொலைபேசி எண்கள் குறித்து விரிவாக விளம்பரப்படுத்துதல்.

★ மக்கள் அதிகமாகக் கூடுகின்ற இடங்கள், முக்கியமான பொது நிகழ்ச்சிகள் நடக்கின்ற இடங்களில் தீயணைப்பு ஊர்திகள் மற்றும் தீத்தடுப்பு கருவிகளை நியாயமான கட்டணத்தில் ஆயத்த நிலையில் வைத்தல்.

★ நோய்வாய்ப்பட்டவர்களையும், காயம் ஏற்பட்டவர் களையும் விரைந்து மருத்துவமனைக்கு எடுத்துச் செல்வதற்கு ஏதுவாக நோயாளர் ஊர்திகளைப் பயன்படுத்துதல்.

தீ அல்லது இதர விபத்துகள் ஏற்படும்பொழுது, மக்கள் அது குறித்து அருகிலுள்ள தீயணைப்பு நிலையத்திற்குத் தாமதமின்றி சரியான தகவலைக் கொடுக்க வேண்டும். அவ்வாறு தகவல் அளிக்கும்போது, விபத்தின் தன்மை, விபத்து நடந்த இடத்தின் சரியான முகவரி, ஆங்கு எளிதில் செல்வதற்கான வழித்தடம் ஆகிய விவரங்களைத் தெரிவிக்க வேண்டும். எளிதில் செல்லக்கூடிய வழித்தடம் தெரிவிப்பதால் தீயணைப்புத் துறையினர் வந்து சேரக் கூடிய கால அளவு குறையும். ●

மருத்துவக்கட்டுரை :

# தீக்காயங்களுக்கு நவீன சிகிச்சை

**வ**ரலாற்றில் மனிதன் நெருப்பைக் கண்டுபிடித்த காலத்திலிருந்தே அதனால் ஏற்படும் விபத்துக்களையும் அறிந்தே இருக்கிறான். தீக்காயங்களின் மருத்துவ சிகிச்சையும் காலத்திற்கு ஏற்றபடியும் அறிவு வளர்ச்சிக்கு ஏற்றபடியும் மாறிக்கொண்டே இருக்கிறது.

### தீக்காயங்களுக்கான காரணங்கள்

பெரும்பாலான தீக்காயங்கள் விபத்துக்களால் தான் ஏற்படுகின்றன மற்றும் கொலை, தற்கொலை (Homicide and Suicide) முயற்சிகளாலும் ஏற்படுகின்றன,

1. தீச்சுவாலை (Flame Burns) அல்லது கொதிக்கும் திரவங்கள், பட்டாசு, போன்றவை உடலில்படுவதால் ஏற்படுபவை.

2. இரசாயன அமிலங்களும், காரங்களும் (Chemical Burns-Acids and Alkalies) உடலில் படுதல்.

3. மின் தாக்குதலால் (Electric Shock) ஏற்படும் காயங்கள்.

4. எக்ஸ்ரே கதிர் வீச்சுகள் (Radiation Burns) தவறுதலாக உடலில் படும்போது கொடுமையான ஆறாத தீக்காயங்கள் ஏற்படுகின்றன.

5. வரதட்சணைக் கொடுமைகளும் தீக்காயங்களுக்கு ஒரு காரணம் என்பதை பார்க்கிறோம். தற்காலங்களில் பெண்கள் எவ்வளவு அறிவுள்ளவர்களாகவும், சுறுசுறுப்பாகவும் இருக்கிறார்களோ அவ்வளவு கோழைகளாகவும் இருப்பதைக் காணும்போது வருத்தமாக உள்ளது. கணவரோ மாமியாரோ அல்லது பெற்றோர்களோ சிறிது கோபத்தோடு பேசிவிட்டால் கூட தற்கொலை முயற்சி மேற்கொள்வதை தவிர்க்க வேண்டும். புகுந்த இடத்தில் புத்திசாலித்தனமாக நிலைமைக்கேற்ப மாறிக் கொண்டாலும் சில சமயங்களில் எதிர்த்து போராடும் நிலைக்குத் தள்ளப்படுவதால் இந்த மாதிரியான அவலநிலைகள் ஏற்படுகின்றன.

தீப்புண்கள் கொதிக்கும் எண்ணெய், நீராவி போன்ற வற்றினால் ஏற்படுவதை Scalds என்று கூறுகிறோம். மின்சார விபத்துகளினாலும் தீக்காயங்கள் உண்டா கின்றன. பல நேரங்களில் இதயம் நின்றுவிடும் வாய்ப்பு இருக்கிறது. மின்சாரம் உடம்பினுள்ளே புகுந்த இடம் (Point of Entry) வெளியேறு மிடம் (Point of Exit) என இரு இடங்களிலும் மோசமான காயங்கள் ஏற்படுவதுண்டு. தொழிற்சாலைகள் பெருகி முன்னேறிவரும் சூழலில் தொழிற்சாலை தீக்காயங்கள் (Industrial Burns) தவிர்க்க முடியாததாகிறது.

### தீச்சுவலைக் காயங்கள்

பெரும்பாலும் குடிசையில் வாழும் கீழ்த்தட்டு மக்கள் தீச்சுவாலையால் பாதிக்கப்படுகின்றனர். காரணம் தரை அடுப்பில் நைலான் போன்ற ஆடைகளை அணிந்து கொண்டு சமையல் செய்யும்போது எளிதில் தீப்பிடிக்க ஏதுவாக இருக்கிறது.

### மின்சாரத் தீக்காயங்கள்

தரக்குறைவான மின் சாதனங்களின் கசிவினாலும் கவனக்குறைவாக மின் சாதனங்களைப் பயன்படுத்து வதாலும் ஏற்படுபவை. இவ்வகைத் தீக்காயங்களால் மின்சாரம் தாக்கிய இடம் மட்டுமின்றி இதயம், மூளை, சிறுநீரகங்கள், நுரையீரல்கள் ஆகியவை கூடப் பாதிக்கப்பட்டு மரணம் உண்டாகிறது.

### கதிர் வீச்சு காயங்கள்

இதுமற்ற தீக்காயங்களிலிருந்து மாறுபட்டது. கதிர்வீச்சின் தன்மையால் உடல் திசுக்கள் தங்கள் இயற்கை நிலையை இழந்து அழுகி புண்கள் உண்டாகிவிடுகின்றன. இது பெரும்பாலும் புற்று நோயாளிகளிடம் அதிகமாக கதிர்வீச்சு சிகிச்சைக்குப்பின் வெளிப்படுகிறது. X-Ray நிலையங்களிலும், அணுக்கதிர் உலை நிலையங்களிலும் வேலை செய்வோரிடம் இக்காயங்கள் காணப்படும். இவ்வகை தீக்காயங்களுக்குச் சிகிச்சை அளிப்பது மிகக் கடினமானதாகும். இந்தக் காயங்கள் நாள் கடந்தால் புற்று நோயாக மாறும் வாய்ப்புகள் அதிகம்.

டாக்டர் **கே.செந்தில்நாதன்,** MBBS., Ph.D.

### தீக்காயங்களுக்கு முதலுதவிகள்

தீக்காயங்களுக்கு முன்பெல்லாம் குளிர்ந்த நீர் ஊற்றக்கூடாது என்று கூறிவந்தனர். அது முற்றிலும் தவறு. மிக சிறந்த முதலுதவி குளிர்ந்த நீரை ஊற்றுவதும், நெருப்பினால் சுடுபட்டு ஒட்டிக் கொண்டிருக்கும் துணிகளை எடுத்துவிடுவதுமாகும். பிறகு சுத்தமான மெல்லிய துணியால் அல்லது துணி கிடைக்காவிட்டால் அன்றைய புது செய்தித்தாளை உட்பக்கமாக உடலில் சுற்றி பின்பு மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல வேண்டும்.

### தீக்காயங்களின் தன்மைகள்

1. முதல்நிலை (First Degree Burns) இதில் சிவப்பு நிறமும் எரிச்சலும் வீக்கமும் மட்டுமே இருக்கும்.

2. இரண்டாம் நிலை (Second Degree Burns) இதில் தோலின் மேற்பகுதியும், தோலிற்குக் கீழ் இருக்கும் பகுதியும் எரிந்து விடுவதால் தீப்பட்ட இடத்தில் வீக்கமும் எரிச்சலும், நீர் கொப்பளங்களும் உண்டாகின்றன.

3. மூன்றாம் நிலை (Third Degree) இதில் முழு தோல் பகுதி எரிந்துவிடுகிறது. அத்துடன் மூளை, நுரையீரல், இதயம், சிறுநீரகம் போன்றவையும் பாதிக்கப்படுகின்றன.

4. நான்காம் நிலை (Fourth Degree) இதில் உடல் முழுவதும் மிகப்பெரிய கருகிய தீக்காயங்களுடன் தோல் தசைகள், எலும்புகள் மற்ற அவயங்களும் கருகிவிடுகின்றன.



### சிகிச்சை முறைகள்

தீக்காயங்களுக்கான சிகிச்சையில் மருத்துவத்துறை மிக முன்னேறி யுள்ளது. எனவே, விபத்து நடந்ததும் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லவேண்டும். மிக நவீன வசதிகளும், தீப்புண் காயங்களுக்கான தனி அறைகள் உள்ள மருத்துவ மனைகளாக இருத்தல் வேண்டும்.

### செயற்கை சுவாசம்

புகையினால் பாதிக்கப்பட்டு அல்லது முகம் தீப்பிடித்து எரிவதால் மூச்சுவிடுதல் சிரமம் இருந்தால் E.T.Tube என்றும் பிளாஸ்டிக் குழாயைச் செலுத்தி வெளிக்காற்று நேராக நுரையீரலுக்குச் செல்லும்படி செய்யலாம். கபத்தில் ஓட்டையிட்டு (Tracheostomy Tube) வைப்பதைத் தவிர்க்க வேண்டும்.

### தசையில் உப்பும் நீரும்

ஆரம்ப அதிர்ச்சி (Initial Shock) தீயின் வெப்பத்தால் இரத்த ஓட்டத்தில் இருந்து தண்ணீர் – உப்பு சத்துக்கள் வெளியேறி தசை மண்டலத்திற்கு வருவதால் உடல் வீக்கமும், நாடி தளர்ச்சியும் அடைந்து இந்நிலை உருவாகிறது. இதை உடனடியாக கண்டறிந்து தண்ணீரும், உப்புச் சத்துக்களும் உடலில் ஏற்றாவிடில் மரணம் நேரலாம்.

### முற்றிய தீக்காயம்

தீயினால் கருகிய தசை, தோல் ஆகியவைகள் கழிவு பொருட்கள் இரத்த ஓட்டத்தில் கலந்த ஒருவகையான நஞ்சை உண்டாக்கி இரண்டாம் அல்லது மூன்றாம் நாள் மரணம் ஏற்படுகிறது.

### நாற்றமுடைய தீக்காயம்

இந்நிலையில் மிகக் கொடுமையாகவும் இதில் அனைத்து தீக்காயங்களும் கிருமிகளால் தாக்கப்பட்டு சீழ் உற்பத்தியாகி தாங்க முடியாத துர்நாற்றம் உண்டாகும். இக்காயங்களைச் சுத்தமாக்கி Silver sulpha Diaze என்ற களிம்பை பூசி சுத்தமான கட்டுகள் போட்டு, தேவையான வீரியம் மிக்க ஊசி மருந்துகள் கொடுத்து கிருமிகளின் தாக்குதலைச் சமாளிக்க வேண்டும். இந்தக் காயங்கள் நோயாளிகளின் உடலின் வேறு பகுதியிலிருந்து தோலை எடுத்து (Split skin Grafting) காயங்களை மூட வேண்டும். மிகக் கொடுமை யான தீக்காயங்கள் அனைத்தும் சிகிச்சைக்குப் பிறகு முக்கியமான உறுப்புகள் சோர்வடைவதால் (Essential Organ Failure) மரணத்தில் முடிகிறது.

### பிடிப்பற்ற மூட்டுகள்

மேற்கூறியதிலிருந்து தப்பி உயிர் பிழைப்போர் இந்த நான்காம் நிலையை அடைகின்றனர். இதில் உடலில் மடங்கி நிமிரும் பல மூட்டுகள் பிடிப்பற்று (Contracture) செயல் இழக்கின்றன. இவற்றை பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை மூலம் சரிப்படுத்தலாம்.

### நீர்ச் சுற்று

அதிகளவு நீர்ச் சத்தும் தாதுச்சத்தும் வெளியேறுகிறது. அவற்றை ஈடுசெய்ய வேண்டும். அதை Intra venous line என்று கூறுகிறோம். எரிபடாத இடத்தில் Intra venous Line ஆரம்பித்தல் நலம். அப்பொழுதே இரத்த பரிசோதனை செய்து இரத்த அணுக்கள் எவ்வளவு உள்ளது இரத்தம் எந்த பிரிவைச் சார்ந்தது தாதுச் சத்துக்கள் (Electrolytes) எவ்வளவு இருக்கிறது என்பதையும் அறியவேண்டும்.

இப்போது கோலஜன் (Collagan) என்ற செயற்கை தோல் போன்ற சவ்வு மற்றும் Amnlotic Membrane போன்றவை மிகவும் பயனுள்ளதாக உள்ளன. தற்போது மிகவும் பாதிக்கப்பட்ட தீக்காயங்கள், ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சை முறையில் கொஞ்சம் கொஞ்சமாக சரி செய்யப்படுகின்றன.

*நன்றி :*
**மருத்துவ அறிவியல் மலர்**

# கீரைகள் சொல்லும் மருத்துவம்

மனிதனின் வாழ்க்கைக்கு உணவு எந்தளவுக்கு அத்தியாவசியத் தேவையோ, அதே அளவுக்குக் கீரைகளும் தேவை என்பதை யாரும் மறுக்க முடியாது. கீரைகளைக் கிள்ளுக்கீரை என்று ஏளனம் செய்த காலம் மலையேறி விட்டது. இன்று கீரைகளின் பயன்களைப் பட்டியலிடாத பத்திரிகைகளே கிடையாது எனலாம்.

**அகத்திக்கீரை**

அகத்திக் கீரையில் கால்சியமும் இரும்புச் சத்தும் அதிகம் உள்ளது. வைட்டமின் ஏ மற்றும் சி-யும் மிகுதியாக இருப்பதால் பல் ஈறுகளை இது கெட்டிப்படுத்துகிறது. தாய்ப்பால் கொடுக்கும் பெண்கள் அகத்திக்கீரை உண்டால் பால் பெருகும். இது கண் பார்வையை பிரகாசமடையச் செய்கிறது. குடல்புண்ணை ஆற்றுகிறது. மலச்சிக்கலை நீக்குகிறது. இதனுடன் சிறிது நீர் உற்றி அவித்து தேங்காய் துருவல் போட்டு உண்ணலாம். அல்லது தேங்காய் பாலில் அவித்தும் சாப்பிடலாம். இந்தக் கீரையை வாரம் ஒருமுறை சமைத்து உண்ண வெயிலில் அலைவதால் ஏற்படும் வெப்ப மலச்சிக்கல், காப்பி, டீ அருந்துவதால் உண்டாகும் பித்தம் போன்றவையும் அகலும்.

**அரைக்கீரை**

எல்லா காலங்களிலும் எல்லா இடங்களிலும் கிடைக்கும். இதன் தண்டை அறுக்க அறுக்க வளர்ந்து கொண்டே வருவதால், இதை அறுக்கீரை என்றும் அழைப்பர். அரைக்கீரையில் பச்சை, சிவப்பு என இரண்டு வகை உண்டு. இந்த கீரையுடன் சீரகம், பாசிப்பருப்புச் சேர்த்துக் கூட்டாகச் செய்தோ, கடைந்தோ சாப்பிடலாம். பொரியலாகவும் உட்கொள்ளலாம். அரைக்கீரையில் உள்ள குளோரோபில் உடல் வளர்ச்சிக்கு மிகவும் பயன்படுகிறது. அரைக்கீரை ஜீரணத்தை அதிகரிக்கும். பசியை உண்டாக்கும். மலச்சிக்கலைப் போக்கும். உடலுக்குக் குளிர்ச்சியைத் தரும். இரத்தத்தைச் சுத்திகரிக்கும். தொடர்ந்து இந்தக் கீரையை உண்டு வந்தால், தும்மல், மூக்கு ஒழுகுதல் போன்றவை மட்டுப்படும்.

**கொத்தமல்லிக் கீரை**

அதிகளவு நார்ச்சத்தும் மாவுச் சத்தும் சிறிதளவு அல்புமின் மற்றும் நைட்ரஜனைக் கொண்ட கொத்தமல்லியை தனியா கீரை என்றும் சென்னைவாசிகள் அழைப்பர். கொத்தமல்லிக் கீரை சமையலில் ருசிக்காகவும், நல்ல மணத்துக்காகவும் பயன்படுவதுடன், ஜீரண சக்தியை அதிகரிக்கவும் பயன்படுகிறது. வயிற்றுப் பொருமல், ஏப்பம் போன்றவற்றைக் குணமாக்கும். கொத்தமல்லி விதையுடன் சுக்கு சீரகம் ஆகியவற்றை பொடியாக்கி கெ திநீரில் போட்டு சிறிது கருப்பட்டியும் சேர்த்து தினமும் இருவேளை உட்கொள்ள நெஞ்சு எரிச்சல், தலைச்சுற்றல், வாந்தி போன்றவை குணமாகும்.



**வெந்தயக்கீரை**

இரும்புச் சத்து மிகுந்தது வெந்தயக்கீரை. இது எலும்பு வளர்ச்சிக்குப் பயன்படுகிறது. இதில் பாஸ்பரஸ், நைட்ரஜன், அல்புமின் மற்றும் லெசிதீனும் இருப்பதால் உடல் நன்கு வளர்ச்சியடைகிறது. இந்தக் கீரை உடலுக்குக் குளிர்ச்சியைத் தரவல்லது. மலக்கட்டை நீக்கும். இதில் வைட்டமின் ஏ, பி மற்றும் சி-யும் உள்ளது. இரத்தச் சோகையை நீக்க காட்லிவர் எண்ணெய்க்குப் பதிலாக வெந்தயக் கீரையை கறி சமைத்து சாப்பிடலாம். நாக்கின் மேல் ஏற்படும் வெள்ளை மாவுப்படை, செதில் போன்ற படை நீங்க வெந்தயக் கீரையை துவையல் செய்து சாப்பிட்டு வரலாம். தீ பட்ட இடங்களில் இந்தக் கீரையை தடவ எரிச்சல் தணிந்து விரைவில் புண் ஆறும். பழச்சாறு மற்றும் மோருடன் வெந்தயத்தைச் சேர்த்துப் பருக வயிற்றுப் போக்கு நிற்கும்.

**மரு. எம். பால் ஆறுமுகம்**

## சிறுகீரை

உடல் சூட்டைக் குறைத்து உடலை குளிர்ச்சியாகவும், இளமையாகவும் வைத்திருக்கக்கூடியது இந்தக் கீரை. இது பலவீனமான உடலைத் தேற்றி உடல் வலிமையடைய உதவுகிறது. கண் தொடர்பான நோய்களைத் தடுக்கிறது. சிறுகீரையை பருப்புடன் கடைந்தும், தேங்காய், வெங்காயம் சேர்த்து பொரியலாகவும் உண்டு வரலாம். சிறுகீரையைத் தொடர்ந்து உண்டு வர இரத்த விருத்தி உண்டாகும். இதில் சுண்ணாம்புச் சத்து, இரும்புச் சத்து, வைட்டமின் சி மற்றும் பி இருப்பதால், சரும நோய்களைத் தடுக்கிறது. பல் ஈறில் இரத்தம் வருதல், செரிமானக் கோளாறுகள் போன்றவற்றையும் இது குணப்படுத்துகிறது.

## தண்டுக்கீரை

கீரை வகைகளில் மிக உயரமாக வளர்வது தண்டுக்கீரை. யானை கொழுத்தால் வாழைத்தண்டு, மனுஷன் கொழுத்தால் கீரைத்தண்டு என்று கிராமங்களில் சொல்வதுண்டு. அதாவது கொழுப்பைக் கரைக்க தண்டுக்கீரை பயன்படுகிறது என்பதைத்தான் நமது முன்னோர்கள் அவ்வாறு கூறினார்கள். இதன் தண்டை சமைத்துச் சாப்பிட சிறுநீர் நன்கு பிரியும். உடல் மெலியும். உடல் லேசாகக் காணப்படும். உடலுக்கு இளமைப் பொலிவைத் தருகிறது. முதியோர்கள் இந்தக் கீரையைச் சாப்பிடுவது மிகவும் அவசியமாகும். ஏனெனில், இதில் சுண்ணாம்பு மற்றும் இரும்புச் சத்து அதிகம் உள்ளது. கருவுற்ற பெண்கள் தினமும் அரைக் குவளைத் தண்டுக் கீரைச் சாற்றுடன் ஒரு தேக்கரண்டி தேன் சேர்த்து அருந்திவர மகப்பேறு பிரச்சினை இல்லாமல் இருக்கும்.



## பருப்புக்கீரை

தாதுப் பொருட்களும் உயிர்ச்சத்தும் நிறைந்துள்ள பருப்புக்கீரை மிகவும் சுவையானது. இதில் ஆல்புமின் கூட்டுப் பொருளும் நைட்ரஜன் கூட்டுப் பொருளும் அதிகம் இருப்பதால் இரத்தத்தை தூய்மையாக்கப் பயன்படுகிறது. இந்தக் கீரையால் மலச்சிக்கல் தீரும். மண்ணீரல், சிறுநீரகம், கல்லீரல் போன்றவற்றை உறுதிப்படுத்தி இயங்கச் செய்கிறது. பருப்புக் கீரையின் விதையை குடிநீராகச் செய்து குடித்து வர உடற்களைப்பைப் போக்கி உடலுக்கு வலிமையைத் தரும். தாது விருத்தியை உண்டாக்கும். கருவுற்ற பெண்கள் இந்தக் கீரையை வாரம் இருமுறை சாப்பிட சிறுநீர் எளிதாகப் பிரியும். மேலும், கர்ப்பக் கால மலச்சிக்கலைத் தவிர்க்கலாம். கருவுற்ற பெண்களுக்கு வரும் கை கால் வீக்கம் வராது.

## பொன்னாங்கண்ணிக் கீரை

இந்தக் கீரையைச் சுத்தம் செய்து துவரம் பருப்பு சேர்த்து கூட்டு செய்து நெய் சேர்த்து உண்டு வந்தால் உடல் தளதளவென மாறும். ஒல்லியாக உள்ளவர்கள் பருமன் உடலைப் பெறலாம். இதனுடன் வெள்ளைப்பூண்டு சேர்த்து சமைத்து உண்டால் நாட்பட்ட மலச்சிக்கல், நிவர்த்தியாகும். மூல நோய் நீங்கி முற்றிலும் குணம் ஏற்படும். உடல் சூடு தணியும். பொன்னாங்கண்ணித் தைலம் கண்ணுக்குக் குளிர்ச்சியைத் தரும். பார்வையை கூர்மையாக்கும். கை கால் உடல் எரிச்சல், மண்டைக் கொதிப்பு, உடல்வலி மற்றும் வயிற்று வலியும் குணமாகும்.

## மணத்தக்காளிக் கீரை

உடல்நலம் காப்பதில் மிகவும் சிறந்ததாக இந்தக் கீரை கருதப்படுகிறது. வாய்ப்புண், குடல்புண், வயிற்றுப்புண், வாய் வேக்காடு போன்றவற்றை குணப்படுத்த வல்லது. மணத்தக்காளிக் கீரையுடன் பாசிப் பருப்பைச் சேர்த்து கூட்டு வைத்தோ, கடைந்தோ உணவோடு உண்ணலாம். இதை சீரகம் மற்றும் மிளகாய் சேர்த்து எண்ணெய்விட்டு வதக்கி, நீர்சேர்த்து அவித்து பின்பு தேங்காய்ப் பாலில் வேக வைத்து உண்டுவர வாய்ப்புண் உடனே குணமாகும். கணைய வீக்கம், கல்லீரல் வீக்கம் ஆகியவற்றுக்கு இதன் சாறு மிகவும் நல்லது. மணத்தக்காளிப் பழச்சாறோடு, இலைச்சாறையும் சேர்த்துப் பருக சிறுநீர்ப்பாதையில் உண்டாகும் எரிச்சல் குணமாகும்.

## முள்ளங்கிக் கீரை

இரும்புச் சத்து, சுண்ணாம்புச் சத்து மற்றும் சோடியம் போன்ற தாதுக்களை அதிக அளவில் முள்ளங்கிக் கீரை உள்ளடக்கி யுள்ளது. முள்ளங்கிக் கீரையின் சாறை 15 நாட்கள் தினமும் ஒரு டம்ளர் அளவுக்குப் பருகி வர, சிறுநீர் தாரை நோய்கள் அகலும். இந்தக் கீரையைச் சமைத்துண்ண அதிமூத்திரம். நீர் தடை, வயிற்று எரிச்சல், ஊதின உடல், குடைச்சல், வாதம், வீக்கம், சுவாசக் காசம், கப நோய்கள், இருமல் ஆகியவை குணமாகும்.

## முருங்கைக் கீரை

இதன் இலையை நெய் விட்டு வதக்கி பொரியல் செய்து சாப்பிட்டு வர ஆண்மை அதிகரிக்கும். முருங்கைக் கீரையை சூப்பாகச் செய்து சாப்பிட்டு வர தொண்டைக் கோளாறுகள், சுவாசக் குழல் தொடர்புடைய நோய்கள் குணமாகும். ஒரு டம்ளர் நீரில் இரண்டு கைப்பிடி முருங்கை இலையைப் போட்டு 10 நிமிடம் வேக வைத்து ஆறிய பின்பு உப்பு, மிளகு, எலுமிச்சை சாறு ஆகியவற்றைச் சேர்த்துக் குடிக்கலாம். இதனால் சோகை குணமாகும். முருங்கை இலைச் சாறுடன் எலுமிச்சை சாறைக் கலந்து முகத்தில் தடவி வந்தால் பருக்கள் மற்றும் கரும்புள்ளிகள் மறையும். இதன் இலையை விளக்கெண்ணெய் விட்டு வதக்கி, மூட்டுவலி, வாதவலி, இடுப்பு வலி ஆகியவற்றுக்கு ஒத்தடம் கொடுக்கலாம்.

*நன்றி :* **மருத்துவ அறிவியல் மலர்**

# வனத்துறையின் பணிகள்

சுற்றுச்சூழல் மற்றும் உயிரின வாழ்க்கைச் சூழலை நிலைப்படுத்துதல்.

நகர்ப்புற பகுதிகளை பசுமைப் பகுதிகளாக மாற்றுவதன் மூலம் காற்று மற்றும் நீரிலுள்ள நச்சுத் தன்மையைக் குறைத்து அப்பகுதி மக்களுக்கு தூய்மையான காற்றையும் நீரையும் கிடைக்கச் செய்தல்.

வளமிக்க பல்லுயிர்களான வன உயிரினங்களையும், தாவர இனங்களையும் பாதுகாத்தல்.

மண்ணின் ஊட்டச் சத்தையும், நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் ஈரப் பதத்தினையும் மேம்படுத்த ஆறுகள், நீர்த்தேக்கங்கள், குளங்கள் ஆகியவற்றில் மண் வளப் பாதுகாப்பு முறைகளைச் செயல்படுத்துதல்.

மாநில நிலப்பரப்பளவில் வனப்பரப்பை அதிகரிக்க சமுதாய மற்றும் தனியார் நிலங்களில் வன நிர்ணய பணிகளை துரிதப்படுத்துதல்.

வனப்பகுதியில் சுற்றுச்சூழலை மீட்கவும்



இயற்கை உயிரினச் சூழலை நிலைநிறுத்தவும் இயற்கை வனங்களை மேம்படுத்தவும் கூட்டு நிர்வாக முறையை ஊக்குவித்தல்.

கிராமப்புற மற்றும் மலைவாழ் மக்களின் அன்றாடத் தேவைகளான விறகு மரங்கள், கால்நடைத் தீவனம் மற்றும் இதர வனப் பொருட்கள் குறைவின்றி கிடைக்கும் வகையில் தரமான மரங்களின் எண்ணிக்கையினை உயர்த்துதல்.

வனப் பாதுகாப்பு உள்கட்டமைப்பை வலுப்படுத்தி விலை மதிப்பு மிக்க அட்டவணை, மர வனப் பொருட்களைப் பாதுகாத்தல்.

கடலோரப் பகுதிகளின் நுட்பமான இயற்கைச் சூழலை நிலைப்படுத்தல்.

வனவளத் தொழில்நுட்பங்களை நவீனமாக்குதல்.

தொழிற்சாலைகள், வணிகம் மற்றும் உள்ளூர் துறைகளின் தேவைக்கேற்ப புதிய வன நுட்பவியல் வளர்ச்சியில் அதிக கவனம் செலுத்துதல்.

வனத்துறையிலுள்ள அனைத்துப் பிரிவு பணியாளர்களுக்கும் பணியிடைப் பயிற்சி (Inservice Training) அளிப்பதன் மூலம் மனித வளத்தினை மேம்படுத்துதல்.

சுற்றுச் சூழல் சுற்றுலாவை ஊக்குவிப்பதற்கு தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி அதில் வரும் வருவாயை அங்குள்ள மக்களுக்கென செலவிடுதல். •

# தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம்

புதுப்பிக்கக்கூடிய மரபு சாரா எரிசக்தி வளங்கள் மரபு சார்ந்த எரிசக்தி வளங்களுக்கு ஓர் முக்கியமான மாற்று ஆதாரமாக விளங்கும் நிலையில் உள்ளது. புதுப்பிக்கக்கூடிய எரிசக்தி வளங்களை பயன்படுத்துவதன் வாயிலாகத் தூய்மையான எரிசக்தி பெறலாம். மேலும் இவ்வளங்கள் உலகின் முதன்மையான ஆதார சக்தியான சூரிய சக்தியை அடிப்படையாகக் கொண்டுள்ளதால், இவைகள் என்றென்றும் நமக்குக் கிடைத்துக் கொண்டேயிருக்கும் இவ்வளங்கள் குறைவதே இல்லை.

### சூரிய வெப்ப சுடுநீர் அமைப்புகள்

2000–2001–ஆம் ஆண்டில் சூரிய வெப்ப சுடுநீர் அமைப்புகள் நிறுவக் கீழ்க்கண்ட மானியங்கள் வழங்கப்படும்.

1. தொழிற்சாலைகளுக்குப் பயன்படும் பெரிய அளவிலான 1000 எல்.பி.டி.8 கலெக்டர்களுடன் சூரிய வெப்ப சுடுநீர் அமைப்பு ஒன்றிற்கு ரூ.20,000 வீதம் மானியம் வழங்கப்பட உள்ளது.
2. வீட்டு உபயோகத்திற்கான சூரிய வெப்ப சுடுநீர் அமைப்பு ஒன்றிற்கு ரூ.3,000 வீதம் மானியம் வழங்கப்பட உள்ளது.

### சூரிய மின்பம்பு

900 வாட் திறன் உள்ள ஒரு பம்பு ஒரு நாளைக்கு 50,000 லிட்டர் தண்ணீரை மொத்தம் 30 அடி உயரத்திற்கு இறைக்க வல்லது. அது ஒன்றிலிருந்து இரண்டு ஏக்கர் நிலங்களுக்கு நீர் பாய்ச்சும்.

900 வாட் திறனுள்ள பம்பின் விலை ரூ.2.24 இலட்சம். மைய அரசின் நிறுவனமான இந்திய புதுப்பிக்கக்கூடிய எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் ரூ.1,12,500 மானியமாக வழங்குகிறது. மாநில அரசு ஒரு பம்புக்கு ரூ.59,000 மானியமாக வழங்குகிறது. எனவே பயனாளியின் பங்குத்தொகை ஒரு பம்பிற்கு ரூ.52,500 ஆகும்.

### சூரிய ஒளி விளக்கு

சூரிய ஒளி விளக்கு 60 வாட் பல்பு கொடுக்கக்கூடிய வெளிச்சத்தை தரக்கூடிய ஒரு சாதனமாகும். இதன் விலை ரூ.4,000. மரபு சாரா எரிசக்தி அமைச்சகம் வழங்கும் மானியம் ரூ.1,500.

### காற்று சக்தி

காற்றாலைப் பண்ணை மூலம், காற்று சக்தி மின் உற்பத்தி செய்ய

★ திட்டத் தொகையில் 75 சதவிகிதம் வரை கடன் வசதி

★ 100 சதவிகிதம் தேய்மான வருமான வரிச்சலுகை

★ உதிரி பாகங்களை இறக்குமதி வரியின்றி இறக்குமதி செய்யலாம்



### நீர் இறைக்கும் காற்றாலைகள்

நீர் இறைக்கும் காற்றாலைகள் நிறுவ தலா ரூ.20,000 மானியம் அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

### ஒருங்கிணைந்த ஊரக எரிசக்தித் திட்டம்

தமிழ்நாட்டில் 21 தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டாரங்களில் தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் மூலம் ஒருங்கிணைந்த ஊரக எரிசக்தித் திட்டம் செயல்படுத்தப்படுகின்றது.

கீழ்க்கண்ட எரிசக்தி சேமிப்பு உபகரணங்கள் 25 முதல் 100 விழுக்காடுகள் வரை மானியமாக இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்றன.

1. மேம்படுத்தப்பட்ட மண் அடுப்புகள் (100 விழுக்காடு மானியம்)
2. உராய்வு குறைவான புட் வால்வுகள் (75 விழுக்காடு மானியம்)
3. நீர் இறைக்கும் காற்றாலைகள் குடிநீர் தேவைக்காகப் பொது கிணறுகளில் அமைத்தல் (10 விழுக்காடு மானியம்)
4. பிற வகையான எரிசக்தி சேமிப்பு உபகரணங்கள் (25 விழுக்காடு மானியம்)



★ ★ ★

## கொள்ளைக்கூட்டத்தாரை ஓடச் செய்தார்

ஒரு நாள் முல்லா, எல்லோரிடமும் தம்முடைய வீர தீரச் செயல்களைக் கூறி பெருமைப்பட்டுக் கொண்டிருந்தார்.

''நான் பாலைவனத்தில் பயணம் செய்து கொண்டிருந்தபோது, ஒரு முறை பயங்கரமான கொள்ளைக் கூட்டத்தினரைப் பயந்து ஓடும்படி செய்திருக்கிறேன்'' என பெருமையடித்துக் கொண்டார் முல்லா.

அவர்களில் ஒருவர், ''நீங்கள் ஒருவராக எப்படி கொள்ளைக் கூட்டத்தினரை ஓடும்படி செய்தீர்கள்?" என்று கேட்டார்.

அதற்கு முல்லா, "அது மிகவும் சுலபமானது. கொள்ளைக் கூட்டத்தினரைக் கண்டதும் நான் ஓடினேன். அவர்கள் என்னைப் பிடிப்பதற்காக என் பின்னே ஓடி வந்தனர்" என்று சாதுர்யமாகக் கூறினார். ★

# கதவைத் தட்டும் வாய்ப்பு - 2

☐ Dr. P.T. சூர்யகுமார்

ஐ.ஐ.டி. (I.I.T) என்பது உலகத் தொழிற்நுட்பக் கல்வி நிறுவனங்களில் மிகச்சிறந்த ஒன்று. இந்தியாவில் ஆறு மையங்களில் உள்ளது. சென்னை, மும்பை, கவுஹாத்தி, டில்லி, கான்பூர், கரக்பூர் ஆகிய பெரும் நகரங்களில் உள்ளது. இதேபோன்று ஐ.ஐ.எஸ்.சி. (I.I.Sc.) பெங்களூர் ஒரு முக்கியமான நிறுவனம். இதில் சேர விரும்புபவர்கள், 10+2 (அல்லது) அதற்கு இணையான படிப்பில், கணிதம், வேதியியல், இயற்பியல், பாடங்களை எடுத்துப் படித்து இருக்கவேண்டும். 60% மார்க்கு மேல் பெற்றிருக்க வேண்டும். மேற்கூறிய அனைத்து இடங்களுக்கும் பொதுவான நுழைவுத்தேர்வு (JEE) ஒவ்வொரு ஆண்டும் ஏதாவது ஐ.ஐ.டி.யினை மையமாகக் கொண்டு இந்தியாவில் பல நகரங்களில் நடத்தப்படும்.

முதற்கட்டத்தில் ஏறத்தாழ ஒரு இலட்சத்து முப்பது ஆயிரம் மாணவர்கள் தேர்வு எழுதுவர்.

**இந்த நிறுவனங்களில் சேர விரும்புவோர் கணிதம், இயற்பியல், வேதியியல் ஆகிய பாடங்களில் மிகுந்த ஆர்வமும், திறமையும், அறிவும், ஊக்கமும் நிறைந்தவர்களாக இருக்கவேண்டும். ஒன்பதாம் வகுப்பு முதல்கொண்டே இதற்கு ஆயத்தமாக படிப்பது சிறந்தது. இதுபோன்ற நுழைவுத் தேர்வு முறைகளைப் பற்றிய முழு விவரங்களை அறிய Choose the Best Course, After +2 என்ற கையேடு (Hand Book) வாங்கிப் படித்துப் பயன்பெறலாம்.**

## JEE ENTRANCE EXAMINATION :

JEE என்று அழைக்கப்படும் இந்த தேர்வு, இந்தியாவில் உள்ள 6 இந்தியத் தொழில்நுட்பக் கழகம் (IIT), தொழில்நுட்பக் கழகம் (பனாரஸ் இந்து பல்கலைக்கழகம்), வாரணாசி போன்ற கல்வி நிறுவனங்களில் நடத்தப்பெறும் 4 வருடக் கல்வியினை இளங்கலை தொழில்நுட்பம் (B.Tech.), மருந்தகக் கலை (Pharmacy), வரைவுபடம் (Design) மற்றும் 5 வருடப் படிப்பான கட்டடக்கலை (B.Arch) போன்ற பிரிவுகளில் படிப்பதற்காக, மாணவர்களின் சேர்க்கைக்காக, இந்திய தொழில்நுட்பக் கழகமும் மேலே கூறப்பட்ட நிறுவனமும் இணைந்து இந்த நுழைவுத் தேர்வை நடத்துகிறது. என்னென்ன பாடப்பிரிவுகள் உள்ளன, ஒவ்வொரு பிரிவுக்கும் எத்தனை இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன போன்ற விபரங்களுக்கு ஒவ்வொரு நிறுவனத்திற்கு என்றும், அதன்கீழ் தனியாகக் கொடுக்கப்பட்டுள்ள விளக்கங்களைப் பார்க்கவும். ஐ.ஐ.டி.யின் ஒருங்கிணைந்த நுழைவுத் தேர்வு வெவ்வேறு பாடப்பிரிவுகளில் மாணவர்களின் சேர்க்கைக்கு உதவுவதற்காக நடத்தப்படுகிறது. வெளிநாட்டில் உள்ள மாணவர்களுக்கு என்று நேரடி சேர்க்கை என்ற திட்டத்தின்கீழ் அடங்கும் மாணவர்கள் ஒருங்கிணைந்த நுழைவுத்தேர்வு எழுதத் தேவையில்லை.

சில பொதுவான விளக்கங்கள்/விபரங்கள் இங்கே கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

விளம்பர அறிவிப்பு (அல்லது) விளம்பரம்/நவம்பர்/டிசம்பர்

தேர்வு : ஜனவரி, மே

தேர்வு முடிவு : ஜூன்

இந்தியாவில் வசித்துக்கொண்டிருக்கும் அனைத்து இந்தியர்களுக்கும், வெளிநாட்டில் வசிக்கும் இந்தியருக்கும் வெளிநாட்டவருக்கும் இந்தத் தேர்வு எழுத அனுமதி உண்டு.

**தனி ஒதுக்கீடு (Reservation) :**

சில குறைந்தளவு – ஆனால் அதே சமயம் தேவையான மதிப்பெண்கள் பெற்று இருந்தால் 15% தாழ்த்தப்பட்ட



பிரிவினைச் சேர்ந்த மாணவர்களுக்கும் (7½) இடங்கள் பழங்குடி வகுப்பினைச் சேர்ந்த மாணவர்களுக்கும் சில தளர்த்தப்பட்ட குறைந்த அளவு கல்வித்தகுதியின்கீழ் **ஒரு வருட கால பயிற்சியில் சேர அனுமதி உண்டு.**

**கல்வி நிறுவனங்களில், பாடப்பிரிவுகளில் சில குறிப்பிட்ட பிரிவைச் சேர்ந்த மாணவர்களுக்கு என்று ஒதுக்கிட்டில் முன்னுரிமை :**

பாதுகாப்பு மற்றும் படைத்துறை பிரிவைச் சேர்ந்த அதில் உயிரிழந்தவர்களின் குழந்தைகளுக்காகவும் அல்லது நிரந்தரமாக முடமாக்கப்பட்டவரின் குழந்தைகளுக்காக 2 இடமும், ஒவ்வொரு நிறுவனத்திலும் ஒதுக்கப்பட்டுள்ளன. இது தவிர உடல் ஊனமுற்றோருக்கு என்று ஒரு இடமும், ஒவ்வொரு கல்வி நிறுவனத்திலும் ஒதுக்கப்பட்டுள்ளன. இந்த ஒதுக்கீடு மேலே குறிப்பிட்டுள்ள மாணவர்களுக்கு மட்டுமே பொருந்தும். அதுவும், அவர்களுடைய பெயர்கள் தகுதியின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டு பொதுப் பிரிவில் வெளிவந்தால் மட்டுமே இந்தப் பிரிவில் சேருவதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

**தகுதியான வயது வரம்பு :**

அதிகபட்சம் 23 ஆண்டுகள் (28 ஆண்டுகள் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் பிரிவினைச் சேர்ந்த மாணவர்களுக்கு).

**கல்வித் தகுதி :**

இயற்பியல், வேதியியல் மற்றும் கணிதம் எடுத்துப் படித்து 10+2 என்ற முறையில் அல்லது அதற்கு சமமான படிப்பில் வெற்றி பெற்றிருக்க வேண்டும். 5½ வருட படிப்பினை முதுகலை தொழில்நுட்பத்தில் வேதியியல் சார்ந்த தொழில்நுட்பம் பயில்வதற்காக கரக்பூரில் உள்ள ஐ.ஐ.டி.யில் சேர விரும்புவோர் பள்ளி உயர்நிலைக் கல்வியில் அல்லது 10+2 அல்லது அதற்குச் சமமான பரப்பில் 'உயிரியல்' பாடப்பிரிவு படித்து வெற்றி பெற்றிருக்கவேண்டும். தொழில்நுட்பக் கல்வியில் 3 வருட பட்டம் (Diploma) பெற்றவர்களும், அவர்கள் எந்த மாநிலத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும், எந்த மாகாணத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் அவர்களும் தகுதி பெற்றவர்கள் ஆவார்கள். மருத்துவத்தகுதியின் அடிப்படையில் அவர்கள் எந்தவித குறைபாடும் இல்லாதவராக இருக்கவேண்டும்.

**விண்ணப்ப பாரம் பெறும் முறை :**

விண்ணப்பப் பாரம் மற்றும் தகவல் புத்தகம் பெற விரும்புவோர் ரூ.500 செலுத்தி (தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி வகுப்பினைச் சார்ந்த மாணவர்க்கு – ரூ.250) கனரா வங்கிகள் அல்லது யூனியன் பாங்க் ஆஃப் இந்தியா என்ற வங்கியில் குறிப்பிட்ட ஏதாவது ஒரு கிளையில் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் அந்தந்த நிறுவனத்தைச் சேர்ந்த ஒருங்கிணைந்த நுழைவுத் தேர்வின் தலைவருக்கு (அந்தந்த இடங்களில் உள்ள ஜே.இ.இ. மையத்திற்கு) குறிப்பிட்ட தேதிக்குள் அனுப்பப்பட வேண்டும். காலதாமதமாக வந்துசேரும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

**நுழைவுச்சீட்டு அட்டை :**

தகுதியுடைய மாணவர்களுக்கு நுழைவு அட்டைகள் வழங்கப்படும்/அனுப்பப்படும். குறிப்பிட்ட தேதிக்குள் நுழைவுச்சீட்டு/நுழைவு அட்டை கிடைக்காத மாணவர்கள் அவன்/அவள் அந்தந்த இடத்தில் உள்ள ஐ.ஐ.டி. ஒருங்கிணைந்த நுழைவுத் தேர்வு மையத்தை/நிறுவனத்தை அணுகலாம்.

**தேர்வு செய்யும் முறை :**

ஐ.ஐ.டி.யின் ஒருங்கிணைந்த நுழைவுத் தேர்வு எழுதி வெற்றி பெற்றவர்கள் தகுதியின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். மொத்தம் 3 தேர்வுகள் உண்டு. இயற்பியல்/வேதியியல்/கணிதம் ஆக மூன்று பாடங்களிலும் தேர்வு நடைபெறும். ஒவ்வொரு தேர்வுக்கும் மொத்தம் 100 மதிப்பெண்கள். ஒவ்வொரு தேர்வுக்காகக் கொடுக்கப்படும் கால அளவு 3 மணி நேரம் ஆகும்.

**மையங்கள் :**

இந்தியா முழுவதும் உள்ளன. மாதிரி வினாக்கள் தகவல் புத்தகங்களில் கொடுக்கப்பட்டிருக்கும். இந்தத் தேர்வுக்கான வினாத்தாள்கள் ஆங்கிலம் மற்றும் இந்தி ஆகிய இரு மொழிகளிலும் இருக்கும்.

மாணவர்களைத் தேர்வு செய்வதற்காக நடத்தப்படும் இந்த தேர்வுகள் 2 நிலைகளில்/கட்டங்களில் இந்திய தொழில்நுட்பக் கழகத்தினால் நடத்தப்படுகிறது. முதல் கட்டத்தேர்வு 3 மணி நேரம் நடத்தப்படும். பெரும்பாலும் இந்தத் தேர்வுகள் ஒவ்வொரு வருடமும் ஜனவரி மாதம் முதல் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். இரண்டாம் கட்டத் தேர்வு ஒவ்வொரு வருடமும் மே மாதம் இரண்டாம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். இரண்டாம் கட்டத் தேர்வில் 3 தேர்வுத்தாள்கள் உண்டு. இயற்பியல், வேதியியல், கணிதம் என்ற 3 பாடங்களிலும் தேர்வு நடைபெறும். இரண்டாம் கட்டத் தேர்வுக்கான கால அளவு 3 மணி நேரங்கள் ஆகும். வெற்றி தகுதியின் அடிப்படையில் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். இரண்டாம் கட்டத்தேர்வு எழுத வேண்டிய மாணவர்களின் பெயர்கள் கொண்ட பட்டியல் முதல் கட்டத் தேர்வு முடிந்தபின் வெளியிடப்படும். முதல் கட்டத் தேர்வில் இருந்து 15,000 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்கள் அனைவரும் இரண்டாம் கட்டத் தேர்வு எழுத அனுமதிக்கப்படுவர்.




இவ்வாறு இரண்டு கட்டமாகத் தேர்வு நடத்துவதன் நோக்கம் என்னவென்றால் திறமையான மாணவர்களை மட்டுமே தேர்ந்தெடுத்து, கல்வி பயில அனுமதிப்பதாகும். முதல் கட்டத்தேர்விலேயே திறமையற்ற மாணவர்கள் தவிர்க்கப்பட்டு விடுவார்கள். பின் இரண்டாம் கட்டத் தேர்வின் திறமையற்ற மாணவர்கள் வெளியேற்றப்பட்டு மிகக் குறைந்த அளவு மாணவர்களுக்கு நிறைந்த கல்வி அளிக்கின்றனர்.

**இந்திய மொழிகளில் வினாக்களுக்குப் பதில் அளித்தல் :**

தேர்வு எழுதும் மாணவர்கள் ஆங்கிலம் அல்லது பின்வரும் ஏதேனும் ஒரு இந்திய மொழிகளில் வினாக்களுக்கு விடை அளிக்கலாம்.

அவையாவன :

1. அஸ்ஸாமீஸ்
2. பெங்காலி
3. குஜராத்தி
4. ஹிந்தி
5. தமிழ்
6. தெலுங்கு

**தகுதிபெற்ற மாணவர்களின் பட்டியல் :**

ஜே.இ.இ. (J.E.E.) நுழைவுத்தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்கள் தகுதி அடிப்படையில் தேர்ந்தெடுக்கப் படுவார்கள். வெற்றி பெற்ற மாணவர்களின் பெயர்ப்பட்டியல் மற்றும் அவருடைய பதிவெண் (Regn.No.) இந்திய அளவில் தேர்வில் அவர் எந்த இடத்தில் (Rank) இருக்கிறார் என்பது போன்ற விவரங்கள், இந்தியாவில் உள்ள அனைத்து இந்திய தொழில்நுட்பக் கழகங்களிலும் வெளியிடப்படும். மேலும் இந்த விவரங்கள் அனைத்து பிரபல செய்தித் தாள்களிலும் வெளியிடப்படும். தகுதியின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து மாணவர்கள் கலந்து ஆலோசிப்பதற்காகவும், மருத்துவத் தேர்வுக்காகவும் அழைக்கப்படுவார்கள். கலந்து ஆலோசிப்பதற்காகவும், இளங்கலை கட்டடக்கலை, இளங்கலை வரைவுபடவியல் போன்ற பாடப்பிரிவுகளில் சேருவதற்கு விரும்பும் மாணவர்களுக்கு மேலும் ஒரு 2 மணிநேரத் தேர்வு நடைபெறும். இந்தத் தேர்வுகள் அந்தந்த கலந்து ஆலோசிக்கும் மையங்களிலேயே ஒவ்வொரு ஜூன் மாதமும் நடைபெறும்.

**பாடப்பிரிவு மற்றும் நிறுவனங்களை ஒதுக்கீடு செய்தல் :**

. ஒவ்வொரு மாணவனும், சேர வேண்டிய பாடப்பிரிவு மற்றும் கல்வி நிறுவனம் போன்றவை, இந்திய தொழில்நுட்பக் கழகங்களால் முடிவு செய்யப்படும். இடங்கள் அனைத்தும் தகுதியின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களால் பூர்த்தி செய்யப்படும். ஒவ்வொரு பிரிவுக்கும் உரிய இடங்கள் அந்தந்தப் பிரிவு மாணவர்களால் பூர்த்தி செய்யப்படும்.

## அயல்நாட்டில் உள்ள மாணவர்களுக்கான நேரடிச்சேர்க்கை :

**இந்திய/வெளிநாட்டு மாணவர்கள் :**

கடந்த எட்டு ஆண்டுகளில் குறைந்தது 3 வருடமாவது வெளிநாட்டில் படித்திருக்க வேண்டும். 10+2 (அதற்கு மேல் அல்ல) கல்விப் படிப்பும் அதில் (அந்த ஐந்து ஆண்டில்) அடங்கியிருக்கவேண்டும்.

**தகுதிகள் :**

நுண்ழவுத்தேர்வு எழுத விரும்பும் ஒவ்வொரு மாணவனும், +2 வகுப்பில் இயற்பியல், வேதியியல் மற்றும் கணிதப்பாடப் பிரிவில் 80% மதிப்பெண்கள் பெற்றிருக்கவேண்டும். இது தவிர எல்லா பாடத்திலும் குறைந்தது 70% மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும்.

இயற்பியல், வேதியியல் மற்றும் கணிதம் IIC பாடங்களில் SAT தேர்வில் 1800 மதிப்பெண்கள் பெற்றிருக்கவேண்டும்.

**தேர்ந்தெடுப்பு :**

ஏப்ரல் மற்றும் ஜூன் மாதங்களில் வெளியிடப்படும் தகுதி பெற்றவர்களின் பெயர் பட்டியல் SAT-II தேர்வில் மாணவர்கள் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில் தயார் செய்யப்படும்.

**விண்ணப்ப பாரங்கள் குறித்த விதிமுறைகள் :**

வெளிநாட்டில் உள்ள மாணவர்களுக்கான (இந்தியர் மற்றும் வெளிநாட்டினர்) நேரடிச்சேர்க்கை (DASA) என்ற பிரிவின் கீழ் கல்வி பயில சேர விரும்புவோர், அமெரிக்க டாலரின் மதிப்பில் $100 வங்கி வரைவோலை பெற்று ஏப்ரல் மாதம் 30ஆம் தேதிக்குள் சென்று சேருமாறு அனுப்ப வேண்டும். வங்கி வரைவோலையை இந்திய தொழில்நுட்பக் கழகம் என்ற பெயரில் எடுக்கவேண்டும்.

இளங்கலை தொழில்நுட்பம் (சுரங்கத்துறை, பொறியியல்) படிப்பு பெண்களுக்கு ஏற்றதல்ல.

**நடப்பு ஆண்டு :**

ஒவ்வொரு வருடமும் ஜூலை மாதக் கடைசியில் அந்தந்தக் கல்வி ஆண்டு ஆரம்பிக்கும். இது இந்தியாவில் உள்ள 6 இந்தியத் தொழில்நுட்பக் கழகங்களுக்கும் பொருந்தும்.

**கட்டணம் :**

போதனைக் கட்டணம் இந்திய மாணவர்களுக்கு ரூ.25,000 முதல் 32,000 வரை செலவாகும். வெளிநாட்டு மாணவர்களுக்கு அவர்கள் நாட்டு நாணய மதிப்பில் US$ 7,000 முதல் 8,000 வரை செலவு ஆகும்.

**விடுதி வசதிகள் :**

அனைத்துக் கல்வி நிலையங்களும், தங்கும் வசதி கொண்டவை.

**மேலும் விவரங்களுக்கு :**

அந்தந்த கல்வி நிலையங்களின் கீழ் தனியாகக் கொடுக்கப் பட்டுள்ளன.

**பொறியியல் பட்டதாரிகளை உருவாக்கும் திறமைக்கான தேர்வு :**

இந்தத் தேர்வு அகில இந்திய அளவில் நடத்தப்படும் தேர்வாகும். இந்தியத் தொழில்நுட்பக் கழகம் மற்றும் இந்திய அறிவியல் நிறுவனம், பெங்களூர் இரண்டும் இணைந்து, தேசிய ஒருங்கிணைப்புக் குழு, GATE கல்வித்துறை, மனித வள மேம்பாட்டுத்துறை, இந்திய அரசாங்கத்தின் சார்பாக நடத்துகிறது.

- I.I.T. –யில் சேர மாணவர்கள் Brilliant Tutorial, 12 Masilamani Street, T.Nagar, Chennai - 600 017 என்ற கோச்சிங் மையத்தில் சேர்ந்து படிக்கலாம்.
- I.I.T. வினா வங்கிகளை வாங்கி படிப்பது நலம்.
- கீழே கொடுக்கப்பட்டுள்ள சில புத்தகங்களை வாங்கி படிக்கலாம். இந்த புத்தகங்கள் ஓர் வழிகாட்டிதான்.

# உலக பிரசித்திபெற்ற நிறுவனங்கள்

**இந்தியத் தொழில் நுட்ப நிறுவனங்கள் (I.I.T.)**

"சோர்வின்றி முயற்சி மேற்கொள்பவர்கள் விதியையும் தோல்வி அடையச்செய்வார்கள்" என 'விதியை மதியால் வெல்லலாம்' என அற்புதமாக, அழகாக சென்னையில் கிரஸண்ட் இன்ஜினியரிங் கல்லூரியில் 12–ஆம் பட்டமளிப்பு விழாவில் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் கூறியது போல், இங்கு சேர்கின்ற மாணவ மாணவிகள் அயராது படித்து உலகின் பல துறைகளில் தலைசிறந்து விளங்குகின்றனர் என்றால் மிகையாகாது.

இந்தியாவில் சென்னை, பம்பாய், கான்பூர், காரக்பூர், கௌஹாத்தி, டெல்லி போன்ற இடங்களில் இந்த நிறுவனங்கள் உள்ளன. இயற்கை எழிலுடனும், உயர்கல்விக்கென எல்லா வசதிகளையும் தன்னிடம் பெற்றுள்ள நிறுவனம். வளர்ந்த நாடுகளில் உள்ள பெரிய தொழில்துறை பல்கலைக் கழகங்கள், நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு ஏறத்தாழ நாற்பது ஆண்டுகளாக மிகவும் சிறப்பான தரம் வாய்ந்த கல்வியை அளிக்கின்றது.

இந்த நிறுவனங்களில் இளங்கலையில் (B.E./B.Tech) சேர்வதற்கெனப் பொது நுழைவுத் தேர்வான (Joint Enterance Examination) (JEE) என்று சுருக்கமாக அழைக்கப்படும் தேர்வினை எழுத வேண்டும். இது இரண்டு கட்டமாக நடத்தப்படுகின்றது. 1. முதற்கட்டம்: ஜனவரி முதல் ஞாயிற்றுகிழமை 2. அடுத்த கட்டம்: மே மாதம் 6, 7 தேதிகளில் (தேதிகள் மாறலாம்) நடத்தப்படுகின்றது. +2 மாணவர்கள் கணிதம், இயற்பியல், வேதியியல் எடுத்து படித்தவர்கள் இந்த நுழைவுத் தேர்வினை எழுதலாம். அனைவரும் புகழும் வண்ணம் திறமையாக இந்த நுழைவுத் தேர்வுகளை எவ்விதக் குறைகளும் இல்லாமல் நடத்தி நல்ல மாணவர்களைத் தேர்ந்தெடுக் கின்றனர். இதில் தேர்வுபெற மாணவர்கள் நுணுக்கமாக, ஆழமாக ஆராய்ந்து, பாகுபடுத்தி, அயராது படித்திடல் வேண்டும் என்பது தான் தாரக மந்திரம். B.E./B.Tech என்ற கோர்ஸ்களுக்குப் பிறகு M.E./M.Tech/M.S./Ph.D. என்ற ஆராய்ச்சி படிப்பும், M.Sc. (Physics, Chemistry, Maths)ம் உள்ளது.

இந்த உயர் நிறுவனங்களில் உலகப் புகழ்பெற்ற ஆசிரியர்களும், உயர்கல்வி வசதிகளும், அதற்கு மேல் நிர்வாகத் திறன் கொண்ட நிர்வாகக் குழு இருப்பதும் தான் இந்த நிறுவனத்தின் சிறப்பு அம்சங்கள்.

**இண்டியன் இன்ஸ்டிடியூட் ஆப் சயின்ஸ் (I.I.Sc.) பெங்களூர்**

இது IIT போன்ற சிறந்த நிறுவனம். +2வில் முதல் 20 ரேங்க் எடுத்தவர்களுக்கு, I.I.Sc. Young Fellowship' என்ற புரோகிராம் நடத்தப்படுகின்றது. இதில் வெற்றி பெற்றவர்கள் நேரிடையாக உயர் ஆராய்ச்சிப் படிப்பிற்கு சேர்கின்றனர்.

J.N.Tata *(1839–1904)*, Lord Curzon Sri Krishnaraja Wodeyar IV (The Maharaja of Mysore) மூவரின் பெரும் முயற்சியால், 1909ல் துவக்கப்பட்ட உயர்கல்வி



நிறுவனத்தில் விஞ்ஞானம், இன்ஜினியரிங் துறையில் சிறந்து விளங்குகின்றது. உலகப் புகழ் பெற்ற விஞ்ஞானிகள் இதன் நிர்வாகிகளாக இருந்துள்ளனர். எடுத்துக்காட்டாக, சி.வி.ராமன், எஸ்.தவான், எஸ்.ராமசேஷன், சி.என்.ஆர்.ராவ், ஜி.பத்மநாபன், எஸ்.பாகவந்தம் போன்றோர்.

**மேலாண்மையில் உயர்கல்வி நிறுவனங்கள்**

**I.I.M. (Indian Institute of Management)**

இன்றைய தொழில் உலகம் கடுமையான போட்டிகளைச் சந்தித்து வருகின்றது. ஒரு நிறுவனத்தின் அமைப்பு, உற்பத்தித் திறன், கச்சாப் பொருள்கள், முதலீடு முதலியவைகள் முழுமையாக இருந்தாலும் சரியான நிர்வாகத் திறன் இல்லை என்றால், உடல் உறுப்புக்கள் அனைத்தும் நல்ல முறையில் இருந்தாலும், நரம்பு மண்டலத்தின் தண்டு




வடம் சரியில்லை என்றால், எத்தகைய செயல்களையும், செய்ய இயலாதவனைப் போல் ஆகிவிடுகின்றது. இத்தகைய நிர்வாகத் திறமையை மாணவர்களிடம் தகுந்த முறையில் உருவாக்கும் படிப்பே எம்.பி.ஏ. (M.B.A.), B.B.A. போன்றவைகள் ஆகும்.

**B.B.A.–ல் சேர்ந்து வெற்றி பெற என்னென்ன தகுதி தேவை?**

- +2வில் வெற்றி பெற்றவர்கள் (வணிகவியல், பொருளியல் எடுத்துப் படித்தவர்களுக்கு முன்னுரிமை)




- ஆங்கில அறிவுத்திறன், கணக்கில் புலி, பொது அறிவின் தந்தையாக இருக்க வேண்டும். பொதுவாகத் தமிழகத்தில் உள்ள அனைத்துக் கல்லூரிகளிலும் B.B.A., B.B.M., B.A. (Corporate Science) B.A. (Co-operation) போன்ற இளநிலைப் படிப்புகள் கற்றுத் தரப்படுகின்றது.

உயர் கல்வியில் இந்தியாவில் சிறந்தது I.I.M. என்ற உயர்நிலைக் கல்வி கூடங்கள் தான். I.I.M. – அகமதாபாத், கல்கத்தா, இந்தூர், கோழிக்கோடு, லக்னோ, பெங்களூர் ஆகிய இடங்களிலும், இந்தியாவின் பல்வேறு பல்கலைக்கழகங்களிலும் M.B.A. என்ற பட்டமேற்படிப்பு சொல்லித் தரப்படுகின்றது. இங்கு படிப்பவர்கள், வெளிநாடுகளில் வேலை வாய்ப்புக்குச் சிறந்தவர்களாக கருதப்படுகின்றனர். இதுவல்லாமல் முக்கியமாகச் சில சிறப்பு நிறுவனங்களும் உள்ளன.

# தேசிய மக்கள் தொகைக் குழு



"தேசிய மக்கள் தொகைக் குழுவை அமைத்ததற்காக பிரதமர் அவர்களுக்கும், மத்திய அரசிற்கும் முதற்கண் என் பாராட்டினைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மக்கள் தொகை இலக்குகளை மட்டும் விவரிக்காமல், கொள்கை கோட்பாடுகளையும், அவற்றை நடைமுறைப்படுத்தும் வழிமுறைகளையும் சேர்த்து விவரிக்கின்ற தேசிய மக்கள் தொகை கொள்கை 2000-ஐ ஏற்படுத்தியதற்காக மத்திய அரசு எடுத்துக்கொண்ட முயற்சிக்கு என் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் மக்கள் தொகையை நிலைப்படுத்துவதில் அனைத்து மாநிலம் மற்றும் யூனியன் பிரதேசங்களும் தங்களுடைய அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளவும், கருத்துக்களை எடுத்துக் கூறவும் வாய்ப்பளித்தமைக்காக பிரதமர் அவர்களுக்கு நான் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். இக்கூட்டத்தில் நடைபெறும் விவாதங்கள் அனைத்தும் மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களுடைய மக்கள் தொகை கொள்கைகளுக்கு உதவியாக இருப்பதுடன் அதன் மூலம் தேசிய மக்கள் தொகைக் கொள்கையின் குறிக்கோள்களை அடைவதில் நாட்டிற்கே பயன்படும் என்று நம்புகிறேன்.

**குடும்ப நலத் திட்டத்தில் தமிழ்நாடு முன்னோடியாகத் திகழ்கிறது**

இந்த சந்தர்ப்பத்தில் குழுமியுள்ள அனைவர் முன்னிலையிலும் தமிழ்நாட்டின் குடும்ப நலத்திட்டத்தின் வெற்றியின் பின்னணியினைப் பகிர்ந்து கொள்ள விழைகிறேன். நாட்டின், வளர்ச்சித் திட்டங்களில் குடும்ப நலத்திட்டம் ஒரு முக்கிய அம்சம் என்பதைப் புரிந்து கொண்ட எங்களுடைய அரசு, மக்கள் தொகையை நிலைப்படுத்துவதில் மிகுந்த ஆர்வத்துடன் செயல்பட்டு வருகிறது. இதன் அடிப்படையில் மாநில அரசு பல முன் மாதிரித் திட்டங்களைத் துவக்கி செயல்படுத்தி வருகிறது. இதன் விளைவாக தரமான நலச்சேவை அளிப்பதில் முன்னேற்றம், சுகாதார அமைப்பிலுள்ள



இடைவெளிகளைப் பூர்த்தி செய்தல் மூலம் கிராமம் மற்றும் நகர்ப்புறங்களில் வாழும் மக்களுடைய பூர்த்தி அடையாத தேவைகள் வெகுவாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இதன் மூலம் குடும்ப நலத்திட்டத்தில் தமிழ்நாடு முன்னோடியாகத் திகழ்கிறது.

சமீபத்தில் மாநில அளவிலான மக்கட் தொகை குழு என் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது.

எங்களுடைய சாதனைகளின் விவரங்கள் பின்வருமாறு :

பிறப்பு விகிதம் – தேசிய குறியீடு 21, இந்தியாவின் சாதனை 26.5. தமிழ்நாட்டின் சாதனை 19.2.

சிசு மரண விகிதம் – தேசிய குறியீடு 60, இந்தியாவின் சாதனை 72. தமிழ்நாட்டின் சாதனை 53.

மொத்த கருத்தரிப்பு விகிதம் – தேசிய குறியீடு 2.1, இந்தியாவின் சாதனை 3.3 தமிழ்நாட்டின் சாதனை 2.

100 சதவீத தடுப்பூசித் திட்ட சாதனை, 84 சதவீதத்திற்கும் மேலாக மருத்துவமனைகளில் பிரசவங்கள் மற்றும் 100 சதவீத கர்ப்பிணிகளின் பதிவு என்ற சாதனைகளின் அடிப்படையில் நோக்கும் போது, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்திட்டத்தில் தமிழ்நாடு முன்னோடியாகத் திகழ்கிறது.

தமிழ்நாட்டில் குடும்ப நலத்திட்டத்தில் ஏற்பட்ட முன்னேற்றத்திற்கான பல காரணங்களுள் பொருளாதாரத்தில் பொதுவான முன்னேற்றம் முக்கிய காரணமாகும். எல்லாவற்றிற்கும் மேலாக குடும்ப நலத்திட்டத்தில் அரசியல் தலைவர்களின் ஈடுபாடும், அதை நடைமுறைப்படுத்துவதில் அரசுக்கு இருந்து வரும் தீவிர முயற்சியும் முக்கிய காரணங்களாகும்.

மத்திய அரசு குடும்ப நலத்திட்டத்தை அறிமுகப்படுத்தியதற்கு வெகு காலத்திற்கு முன்பே சமூகப் புரட்சியாளர் தந்தை பெரியார் அவர்கள் திருமண வயதை உயர்த்தவும், சிறு குடும்ப நெறியைக் கடைபிடிக்கவும் உறுதியான சமுதாய ஒருங்கிணைப்பை உருவாக்கினார். பிற்காலத்தில் இம்முயற்சிகள் அறிஞர் அண்ணா அவர்களாலும், தற்போது தமிழக அரசாலும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இந்த பாரம்பரியம் தேசிய குடும்ப நலத்திட்டம் தொடங்கி பின்பும் செயலாக்கத்தில் இருந்து வருகிறது.

### 99 சதவிகித மக்களுக்கு குடும்ப நெறி பற்றிய விழிப்புணர்ச்சி

பொதுவாக அனைத்து சமூக மற்றும் அரசியல் தலைவர்கள் மட்டுமின்றி, அதிகாரிகளும் குடும்ப நலத்திட்டம் மற்றும் சிறு குடும்ப நெறியைப் பற்றி மக்களுடன் கலந்துரையாடக்கூடிய வாய்ப்புள்ள பொதுக் கூட்டங்கள், சமூக நிகழ்ச்சிகளில் மிகத் தீவிரமாகப் பேசி வருகிறார்கள். இதனுடன் தகவல் கல்வி தொடர்பு நிகழ்ச்சிகள் தமிழ்நாட்டில் 99 சதவீத மக்களுக்கு சிறு குடும்ப நெறி பற்றி விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

மாநிலத்தில் மக்களுக்குச் சுகாதார சேவைகளை அளிப்பதற்கு மத்திய அரசு அளவுகோலின்படி துணை சுகாதார நிலையங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள் போன்ற சுகாதார அடிப்படை அமைப்புகளை தமிழ்நாடு ஏற்படுத்தியுள்ளது. அதன் விளைவாக தற்போது 8,682 துணை சுகாதார நிலையங்கள், 1,410 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 160 தாலுக்கா மருத்துவமனைகள், 67 தாலுக்கா அல்லாத மருத்துவமனைகள், 26 மாவட்ட மருத்துவமனைகள் மற்றும் 11 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் தமிழ்நாட்டில் உள்ளன.

1996–ஆம் ஆண்டு இந்த அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் சுகாதார அடிப்படை வசதிகளை மேம்படுத்த ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குச் சொந்தக் கட்டடங்களைக் கட்டித்தருவது என முடிவு செய்யப்பட்டது. எனவே ரூ.51 கோடி செலவில் முழுமையாக மாநில நிதியில் இருந்து 652 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டது. அதுபோலவே 64 சதவீத துணை சுகாதார நிலையங்கள் சொந்த கட்டடங்களில் இயங்கி வருகின்றன.

அவ்வாறு கட்டப்பட்ட 600 துணை சுகாதார நிலைய கட்டடங்களில் 400 கட்டடங்கள் சமுதாயத்தின் ஒத்துழைப்புடன் கட்டப்பட்ட கட்டடங்களாகும். இது தமிழ்நாட்டில் மட்டுமே நடைபெறும் பரிசோதனைத் திட்டமாகும். 24 மணி நேரமும் சுகாதார சேவைகளை அளிக்கும் வகையில் 250 வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்கள் கூடுதல் மருத்துவர்கள் மற்றும் மருத்துவ சார்பு பணியாளர்களுடன் இயங்கி வருகின்றன.

தரமான சுகாதார சேவைகளை அளிப்பதற்கு மருந்துகள் எந்நேரத்திலும் தடையின்றி விநியோகம் செய்யப்பட வேண்டுமென்பதைக் கருத்தில் கொண்டு, மருந்துகளை வாங்கி விநியோகம் செய்வதற்கு தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகம் என்ற ஒரு நிறுவனம் தமிழ்நாட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக்கழகம் முக்கியமான மருந்துகளின் பெயர் பட்டியல் தயார் செய்து, அவற்றை மருந்துக் கழகமே வாங்கி, மாவட்ட மருந்து கிடங்குகளில் இருப்பு வைத்து, அனைத்து சுகாதார நிலையங்களுக்கும் பாஸ்புத்தகம் மூலமாக விநியோகம் செய்து வருகிறது. இந்த மருந்துக் கழகம், விநியோகிக்கப்படும் மருந்துகளுக்குக் கடுமையான தரக்கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

இக்கழகத்தின் திறமைக்கும் வெற்றிக்கும் வெளிப்படையான செயல்பாடுகளே காரணமாகும். ஒப்பந்தப்புள்ளி அறிக்கை முதல் மருந்து இருப்புநிலை வரை அனைத்து விவரங்களும் கணினியில் வெப் தளத்தில் இடம் பெற்றுள்ளது. இந்நிறுவனம் ஐ.எஸ்.ஓ. 9002 சான்றிதழையும் பெற்றுவிட்டது மிகவும் சிறப்பானதாகும். இக்கழகத்தின் மொத்த செயல்பாடுகளும் கணினி வழியே கண்காணிக்கப்படுகின்றன.

### மருத்துவ நிறுவனங்களை தொழிற்சாலைகள் தத்தெடுக்க வழிவகை

சமுதாயம் மற்றும் தனியாருடைய ஈடுபாட்டை அதிகரிக்கவும், மருத்துவ நிறுவனங்களை முழுவதுமாகவோ, பகுதியாகவோ அல்லது கட்டடங்களைப் பழுதுபார்த்தல், பராமரித்தல், உபகரணங்கள் வழங்குதல் போன்ற குறிப்பிட்ட காரணங்களுக்காகவோ மருத்துவ நிலையங்களைத் தொழிற்சாலைகள் தத்து எடுத்துக் கொள்ள வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. இதுவரை 69 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 5 துணை சுகாதார நிலையங்கள், 24 அரசு மருத்துவமனைகள் ஆகியவை 51 தொழிற்சாலை நிறுவனங்களால் தத்து எடுக்கப்பட்டு ரூ.1.5 கோடி நிதியுதவியும் பெறப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு, ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்களுக்குத் தேவையான நிலையான உபகரணப்பட்டியல் தயார் செய்துள்ளது.

இப்பட்டியலில் உள்ளது போல் உபகரணங்கள் வாங்கப்பட்டு விநியோகம் செய்யப்படுகிறது. அனைத்து முதல்நிலை பரிந்துரை நிலையங்களுக்கும் அல்ட்ரா சோனோகிராம், அவசர கால மற்றும் அவசிய கர்ப்பகால சேவைகள் மற்றும் சிசு பராமரிப்புக்கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

போதிய பயிற்சி இல்லையெனில் சுகாதார வசதிகளைப் பயன்படுத்த முடியாது என்பதை கருத்தில் கொண்டு, பயிற்சி நிலையங்களின் அடிப்படை வசதிகள் மற்றும் கல்வி வசதிகளுடன் மேலாண்மை, சமுதாய ஒருங்கிணைப்பு, பாலின பாகுபாடு ஆகிய பகுதிகளைப் பயிற்சிப் பாடத்திட்டத்தில் இணைத்து மேம்படுத்தப்பட்டுள்ளது.

மாநில அளவிலான சுகாதாரம், மருத்துவத்துறை, குடும்பநல இயக்குநர்கள் மற்றும் நலப் பணியாளர்களுக்குப் பயிற்சியளிப்பதோடு, ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர்களுக்கும் பணியில் சேரும் முன்பே பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்தப் பயிற்சியில் தற்போது மாநிலத்தில் நடைமுறையில் உள்ள குடும்பநல திட்டப் பணிகள், தொழில்நுட்ப மறுபுத்தறிவு, மேலாண்மை மற்றும் நிர்வாகத்திறன் போன்றவைகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

அந்த முகாமில் மொபட் வாகனம் ஓட்ட பயிற்சி அளிக்கப்பட்டது. இதன் பயனாக கள அளவிலான நல பராமரிப்புப் பணிகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

சுகாதார சேவைகளை நல்ல முறையில் நிர்வாகம் செய்ய இந்த அமைப்புகளில் அளிக்கப்படும் சேவைகளைக் கண்காணிக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். இதற்காக தமிழக அரசு 1996–ஆம் ஆண்டு முதல் 9 மில்லியன் நபர்களின் புள்ளி விவரங்களை ஆண்டுதோறும் சேகரித்து வருகிறது. (முக்கிய புள்ளி விவர கள ஆய்வு (Vital Events Survey). இந்த கள ஆய்வின் முடிவில் பெறப்பட்ட விவரங்கள் யாவும் மாதிரி பதிவு அமைப்பின் (Sample Registration Scheme) விவரங்களைக் காட்டிலும் மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. இந்த விவரங்கள் பாலினம், மாவட்டம், இடம், குடியிருப்பு வாரியாக இருக்கிறது. இந்த கள ஆய்வு சுகாதார அமைப்பில் உள்ள அனைத்து பணியாளர்களுக்கும் பொது சுகாதாரம் மற்றும் குறிப்பாக தாய் சேய் நலத்தில் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## ஆரம்ப சுகாதார நிலைய சேவைகள் சீராக அதிகரித்து வருகிறது

ஆரம்ப சுகாதார நிலையங்களில் அளிக்கப்படும் சேவைகளைக் கண்காணிப்பதற்காக கணினியில் விவரங்களைப் பதிவு செய்யவும்,



எங்கள் மாநிலத்தில் கிராமங்களில் பணிபுரியும் கிராம சுகாதார செவிலியர், பகுதி சுகாதார செவிலியர் மற்றும் சமுதாய சுகாதார செவிலியர்களுக்கு மொபட் வாகனம் ஓட்ட பயிற்சி அளிப்பது ஒரு வித்தியாசமான பயிற்சி என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்த பெண் களப்பணியாளர்கள் சுகாதார சேவைத் திட்டங்களின் முதுகெலும்பாவார்கள். இவர்கள் கிராமங்களுக்குச் சென்று நலப்பணிகளைச் செயல்படுத்துவதற்கு வாகன வசதி மிகவும் அவசியமானதாகும். இவர்களுக்கு மொபட் வாங்க நிதி ஒதுக்கீடு செய்து கடனுதவி அளிப்பது மட்டும் போதாது எனக்கருதி, 3 நாள் பயிற்சி முகாமிற்கு ஏற்பாடு செய்து,

அவ்வாறே கணினி மூலம் விவரங்களைப் படிப்பதற்கும் 'ஆப்டிகல் மார்க் ரீடர்' (Optical Mark Reader) என்ற கருவி அறிமுகப்படுத்தப்பட்டது. அதனால், அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் நடைபெறக்கூடிய மருத்துவ சேவை நடவடிக்கைகளான புறநோயாளி வருகை எண்ணிக்கை, உள்நோயாளி எண்ணிக்கை, நிகழ்த்தப்பட்ட பிரசவங்கள் ஆகியவற்றை முறையாக கண்காணிக்க ஏதுவாகிறது. இதுபோல் மிகத் தீவிரமாக கண்காணிப்பதால் ஆரம்ப சுகாதார நிலைய சேவைகள் யாவும் சீராக அதிகரித்து வருகிறது.

தாய் இறப்பு விகிதம் மற்றும் சிசு இறப்பு விகிதம் ஆகியவற்றை குறைப்பதற்காக தாய் இறப்பு தணிக்கை மற்றும் சேய் இறப்பு தணிக்கை என்ற கண்காணிப்பு வழிமுறைகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட சுகாதார அதிகாரிகள், மகப்பேறு மருத்துவ நிபுணர் மற்றும் முதல் நிலை பரிந்துரை மையங்களில் உள்ள முதன்மை மருத்துவ அதிகாரிகள் கொண்ட மருத்துவ கண்காணிப்பு குழு அமைக்கப்பட்டுள்ளது.

மகப்பேறு இறப்புகளைத் துரிதமாக அறிவிக்கவும், முழுமையாக விசாரணை செய்து மருத்துவம் மற்றும் மருத்துவமல்லாத காரணங்களைக் கண்டறியவும், மகப்பேறு உடன்படிக்கை மூல வரைவு தயார் செய்யப்பட்டுள்ளது. இந்தக் குழு, தாயின் இறப்புக்கான காரணங்களைக் கண்டறிய, தாயின் உறவினர்களின் கருத்துக்களையும், சிகிச்சை அளித்த மருத்துவர்களின் கருத்துக்களையும் கேட்டறிந்து 15 நாட்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்கும். இந்த வாய்வழி விசாரணை முறை தாய் இறப்பிற்கான காரணத்தைக் கண்டு பிடிக்க உதவுவதுடன் மருத்துவர்களுக்கு தாய் இறப்பின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்க உதவுகிறது. இத்துடன் சுகாதாரச் சேவைகளில் உள்ள குறைபாடுகளைக் கண்டறிய உதவுகிறது.

**வருமுன் காப்போம் திட்டத்தில்**
**இலவச மருத்துவ பரிசோதனை**

தமிழ்நாடு அரசு முழுமையான இலவச மருத்துவப் பரிசோதனை மற்றும் சிகிச்சை முகாம்களைக் கிராமப்புறங்களில் அளிக்க 'வருமுன் காப்போம்' என்ற புதிய திட்டத்தைத் தொடங்கியுள்ளது. இது இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் முதன் முறையாகச் செயல்படுத்தப்படுகிறது. இந்த முகாம்களில் அரசு மருத்துவமனைகளிலிருந்து 15 சிறப்பு மருத்துவர்கள் கிராம மக்களை, இ.சி.ஜி. போன்ற சிறந்த மருத்துவக் கருவிகள் கொண்டு பரிசோதனை செய்து, சிகிச்சை அளித்து, தேவைப்பட்டால் மேல் மருத்துவப் பரிசோதனைக்கு வாகன வசதி செய்து அனுப்பி வைக்கிறார்கள்.

இந்த முகாம்களில் சுகாதார விழிப்புணர்ச்சி, நோய்களிலிருந்து பாதுகாத்தல் பற்றிய கருத்துக்கள் எடுத்துக் கூறப்படுகின்றன. இதுவரை 4,334 முகாம்களுக்கும் மேல் கிராமங்களில் நடத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு முகாமிலும் சுமார் 916 நபர்கள் பங்கு பெறுகிறார்கள். டிசம்பர் மாத முடிவில் சுமார் 10 மில்லியன் மக்கள் அதாவது தமிழ் நாட்டிலுள்ள 6-ல் 1 பங்கு மக்கள் இந்த முகாம்களின் மூலம் பயன்பெறுவார்கள். இந்த முகாம்கள் மூலம் மாநில அளவிலான நோய்களின் அளவீடுகளை அறிவதுடன் பகுதி வாரியான நோய் பரவும் முறைகளைப் பற்றி பல தகவல்களையும் அறிய முடிகிறது. இந்த தகவல்கள், சிகிச்சை முறைகள் மற்றும் நோய்த் தடுப்பு முறைகளைத் திட்டமிடவும், உதவுகிறது. இந்த புதுமையான திட்டத்தின் மூலம் ஏழ்மையான நிலையில் உள்ள கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்த உதவுகிறது.

'வாழ்வொளித் திட்டம்' என்ற பள்ளி நலத்திட்டம் 1999 முதல் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் முதல் வகுப்பில் இருந்து பன்னிரண்டாம் வகுப்பு வரையில் உள்ள பள்ளி மாணவர்களுக்கு மருத்துவ பரிசோதனை செய்யப்படும். தேவை ஏற்பட்டால் மேல்நிலை மருத்துவ நிலையங்களுக்கும் பரிந்துரை செய்யப்படுகிறத. ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர் மற்றும் மருத்துவ சார்பு பணியாளர்கள் குழு அவர்களின் நிரந்தர பயணத் திட்டத்தின்படி பள்ளிகளுக்குச் சென்று பரிசோதனை செய்கிறார்கள். 1999-2000-ஆம் ஆண்டில் இதுவரை 72 இலட்சம் பள்ளி மாணவர்களுக்கு மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டது.

குடும்ப நலத்திட்டத்தை உத்வேகப்படுத்துவதற்காக மாநில மக்கள் தொகை கொள்கை 2000 தயாரிக்கப்படுகிறது. குடும்ப நலத்திட்டத்தில் பெண்களின் மேல் உள்ள பளுவைக் குறைத்து, ஆண்கள் தீவிரமாக பங்குபெற தீவிரமான தகவல் தொடர்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளது. இரும்புச் சத்து மாத்திரைகள் வழங்கும் திட்டமும், வருங்கால தாய்மார்களுக்கான (வளர் இளம் பெண்கள்) ரூபெல்லா நோய் தடுப்பூசித் திட்டமும் (Rubella Vaccination) செயல்படுத்துவதன் மூலம் வருங்கால தலைமுறைகள் நலமாகவும், வளமாகவும் இருப்பதற்குத் தேவையான முனைப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

மேற்கூறிய முனைப்பான நடவடிக்கைகளினால் மாநிலம் சீராக முன்னேறி வருகிறது. மாநிலத்தின் இயற்கை வளர்ச்சி விகிதம் கேரளாவைவிட குறைந்துள்ளது. 11.9 ஆக உள்ள கேரளாவின் வளர்ச்சி விகிதத்தை ஒப்பிடும் போது தமிழ்நாடு 10.7 என்ற நிலையில் உள்ளது.

தமிழ்நாட்டில் ஈவு இனப் பெருக்க விகிதம் (Net Reproduction Rate) தற்போது 1 ஆக உள்ளது. இந்தியா தற்போதுள்ள நிலையில் எங்கள் மாநிலத்தின் நிலையை அடைய இன்னும் 5 ஆண்டு காலம் தேவைப்படும். தமிழ்நாட்டின் மக்கள் தொகையை 2010-ஆம் ஆண்டில் 7.2 கோடி என்று நிலைப்படுத்துவதே அரசின் குறிக்கோளாகும். கண்டிப்பாக அந்நிலையை நாங்கள் அடைந்தே தீருவோம்.

இருப்பினும் எங்கள் மனதில் ஒரு அச்சம் இருக்கிறது. மாண்புமிகு பிரதம அமைச்சர் அவர்களும், மத்திய அரசும் இந்த அச்சத்தைப் போக்க வேண்டும். தற்போது மக்களவையில் தமிழ்நாட்டிற்கு 39 உறுப்பினர்கள் உள்ளார்கள். மக்கள் தொகை குறைக்கப்பட்டதன் விளைவாக மக்களவையில் எங்கள் உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட மாட்டாது என்று மாண்புமிகு பிரதம அமைச்சர் அவர்களும், மத்திய அரசும் உறுதி அளிக்க வேண்டும். மாண்புமிகு பிரதமர் அவர்களும், இந்திய அரசும் தேவையான, சரியான, உடனடி நடவடிக்கைகள் எடுத்து அரசியலமைப்பில் தகுந்த மாற்றங்கள் கொண்டு வருவதன் மூலம் தமிழ்நாட்டிற்கும் மற்றும் குடும்ப நலத்திட்டங்களை ஆர்வமுடன் வெற்றிகரமாக செயல்படுத்தி மக்கள் தொகையை நிலைப்படுத்திய மாநிலங்களுக்கும் மக்களவையில் பிரதிநிதிகளைக் குறைப்பதன் மூலம் தண்டனை வழங்காமல் இருக்க நடவடிக்கை எடுப்பார்கள் என நம்புகிறேன்.

2001-ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட குறியீடுகளில் வேகமாக முன்னேறி வரும் சூழ்நிலையில், இந்த மாநிலத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட மக்களவை உறுப்பினர்களின் எண்ணிக்கையை முன்பு இருந்ததைப் போலவே தேசிய மக்கள் கொள்கை 2000த்தின் பரிந்துரையின்படி 2025-ஆம் ஆண்டு வரை நீடிக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் மக்கள் தொகையை நிலைப்படுத்துவதற்கு மாண்புமிகு பாரதப் பிரதமர் மற்றும் மத்திய அரசு ஊக்கமும் உறுதியையும் அளிக்கும் என உறுதியாக நம்புகிறேன்".

**— தேசிய மக்கள் தொகைக் குழுவின்**
**முதல் கூட்டத்தில் படிக்கப்பட்ட**
**முதலமைச்சர் கலைஞர் அவர்களது உரை.** ★

# ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட செக்கு

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, கரூர் மாவட்டம் வெள்ளியணை–நத்தமேட்டில் 1000 ஆண்டுகளுக்கு முற்பட்ட எண்ணெய் ஆட்டும் செக்கு ஒன்றினைக் கண்டறிந்துள்ளது. இச்செக்கு ஐந்நூற்றுவர் என்ற வணிகக் குழுவினரால் சோமூர் இறைவனது பயன்பாட்டிற்காகக் கல்லால் அமைக்கப்பட்டதாகும். இதன் வாய்ப் பகுதியில் வட்டமாக வெட்டப்பட்டுள்ள கல்வெட்டு இத்தகவலைத் தருகிறது. அக்கல்வெட்டில் பாடம் பின்வருமாறுள்ளது.

**“ஸ்வஸ்திஸ்ரீ சோமூர் மகாதேவர்க்கு அஞ்ஞூற்றுவர் இடுவிச்ச செக்கு”**



பண்டையத் தமிழ்நாட்டில் ஐந்நூற்றுவர், திசை ஆயிரத்து ஐந்நூற்றுவர், மணிக்கிராமத்தார், வளஞ்சியர், சித்திரமேழில் பெரிய நாட்டார், பதினென்விசயத்தார், அய்யப்பொழிலார் என்ற பெயர்களில் வணிகர் குழுக்கள் இருந்தன. இக்குழுக்கள் தமிழகம் மற்றும் தென்னிந்தியப் பகுதிகளில் தரை மார்க்கமாகவும், இலங்கை, பர்மா (மியான்மர்), தாய்லாந்து, சீனம் போன்ற கடல் கடந்த நாடுகளில் கடல் மார்க்கமாகவும் வணிக நடவடிக்கைகளை மேற்கொண்டன. கூட்டம் கூட்டமாக வண்டிகளில் சரக்கேற்றிக்கொண்டு அன்றையப் பெருவழிகளில் சென்ற இவர்கள் இடையிடையே பாதுகாப்பான இடங்களில் தங்கிச் சென்றனர்.

இவ்விடங்கள் வீரத்தாவளம், அடிக்கீழ்த்தளம், மடிகை என்ற பெயர்களில் விளங்கின. இவர்களுக்கென்று தனிப்பாதுகாப்புப் படைகளும் இருந்தன. இவை முன்னுகை மகா சேனை, வீரக்கொடியார், எரிவீரர் என்று பல்வேறு பெயர்களில் விளங்கின. நெடுந்தொலைவு செல்லும் இவர்களுக்கு கொள்ளையர் பயம் தொடர்ந்திருந்ததால் வழிநெடுகப் பல கோயில்களைத் தோற்றுவித்து வழிபட்டனர். இக்கோயில்கள் சிவன், திருமால், காளி (பிடாரி), சாத்தன் (ஐயனார்) மற்றும் சமண, பௌத்தக் கடவுளர்களுக்காகவும் அமைந்தன. இக்கோயில்களுக்காகப் பல்வேறு கொடைகளை நல்கிய இவ்வணிக் குழுக்கள், குளங்கள், மண்டபங்கள் ஆகியவற்றையும் தர்மமாக அமைத்துக் கொடுத்தன. இச்செய்திகள் தொடர்பான கல்வெட்டுகள் தமிழகத்தில் பல இடங்களிலும் கண்டறியப் பட்டுள்ளன.

பண்டைய கோயில்களில் விளக்கெரிப்பதற்காகப் பொன், கால்நடைகள், நிலங்கள் வழங்கப்பட்டன. விளக்கெரிப்பது ஒரு சிறந்த கொடையாகக் கருதப்பட்டது. விளக்கெரிப்பதற்கும் உணவிற்கும் எண்ணெய் இன்றியமையானதாக இருந்தது. எனவே எண்ணெய் ஆட்டக் கல்லால் ஆன செக்குகளைச் செய்தளிப்பது முக்கியக் கொடையாகக் கருதப்பட்டுச் செக்குகள் கொடையாக நல்கப்பட்டன. எண்ணெய் ஆட்டும் தொழில் பண்டையத் தமிழகத்தில் அரசிற்கு வரி வருவாய் ஈட்டித் தந்த தொழிலாகும். செக்கிறை, செக்குக் கடமை, செக்குப் பாட்டம் என்ற பெயர்களில் வரிகள் வசூலிக்கப்பட்டன. புதிதாக அமைக்கப்படும் ஊர்களில் செக்குகள் அமைக்கும் உரிமை அரசால் மட்டுமே வழங்கப்பட்டது. செக்காட்டுபவர்கள் சங்கரப்பாடியார் என்னும் செக்கார் என்றும் அழைக்கப்பட்டனர். பல கோயில்களையொட்டி இவர்களுக்குக் குடியிருப்புகளும் இருந்தன.

**அ. அப்துல்மஜீத்,** எம்.ஏ.,
இயக்குநர் (பொ), தொல்லியல் துறை

தமிழகத்தில் பல இடங்களில் கற்செக்குகள் கி.பி.8ஆம் நூற்றாண்டு முதல் கல்வெட்டுகளுடனும், கல்வெட்டுகள் இல்லாமலும் கிடைத்துள்ளன. செக்குகளின் கீழ்ப்பகுதி மட்டுமே கிடைப்பதால் உலக்கைப் பகுதி மற்றும் மாடுகள் கட்டி இழுக்கும் அமைப்பு எப்படி இருந்தது என்பது அறிய இயலாதுள்ளது. எனினும் தாராசுரத்தில் உள்ள 63 நாயன்மார்களின் கதைகளை விளக்கும் சிறு சிற்பத் தொகுகளில் கலியநாயனார் கதையை விளக்கும் சிற்பத்தில் கி.பி. 12ஆம் நூற்றாண்டளவிலதான செக்கின் அமைப்பு நன்கு காட்டப்பட்டுள்ளது. செக்கின் உலக்கை மற்றும் எருதுகள் நன்கு தெளிவாக அதனில் தெரிகின்றன.



வெள்ளியணையில் ஐந்நூற்றுவ வணிகர்கள் சோமூர் மகாதேவர் கோயிலின் பயன்பாட்டிற்காகச் செக்கு அமைத்துக் கொடுத்துள்ளனர். செக்கில் உள்ள கல்வெட்டின் எழுத்தமைதியைக் கொண்டு இச்செக்கு கி.பி.10ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது எனலாம். இச்செக்குள்ள இடம் புஞ்சை நிலம் அருகில் அமைந்த குடியிருப்பான நத்தமேடு ஆகும். இங்கு கல்வெட்டில்லாமல் மேலும் இரண்டு கற்செக்குகள் உள்ளன. எனவே இங்கு கோயில் சார்ந்த ஒரு எண்ணெய்த் தொழிற்சாலை-செக்காலை இருந்திருக்க வேண்டும். அருகிலமைந்த புஞ்சை நிலத்தில் விளையும் எள், ஆமணக்கு, நிலக்கடலை போன்றவை இங்கு பெரிய அளவில் ஆட்டப்பட்டிருக்க வேண்டுமென்று கருதலாம்.

வெள்ளியணை, கரூர் – திண்டுக்கல் பழைய சாலையில் அமைந்துள்ள ஊராகும். இச்சாலை வடமொழி இலக்கியங்களில் குறிப்பிடப்படும் தக்ஷிணபதம் என்ற பெருவழிச்சாலையாகும். கரூர் பண்டைய நாட்களில் ஒரு பெரும் வணிக நகரமாக விளங்கியது. இங்கு மேற்சொன்ன தக்ஷிணபதம் என்ற பெருவழியும் கொங்கப் பெருவழி என்ற மற்றொரு பெருவழியும் சந்தித்தன. கொங்கப்பெருவழி கேரளத்தில் மேலைக் கடற்கரையில் தொடங்கி கோவை, கரூர், திருச்சி ஆகியவற்றை இணைத்துப் பூம்புகார் சென்று முடிந்த பெருவழியாகும்.

மேற்கண்ட செய்திகளைக் கருத்தில் கொண்டால் தமிழகத் தொல்லியல் துறை அண்மையில் வெள்ளியணையில் கண்டறிந்த செக்கு மற்றும் அதனில் உள்ள கல்வெட்டால், பண்டையத் தமிழக வணிகக் குழுக்கள், கோயில் சார்ந்த தொழில்கள், பண்டையப் பெருஞ்சாலைகள் மற்றும் பொருளாதாரச் செய்திகள் எவ்வகையில் விளக்கம் பெறுகின்றன என்பதை நன்கு அறிய முடியும்.

★ ★ ★



**ஏழை யென்றும் அடிமை யென்றும்**
**எவனும் இல்லை ஜாதியில்,**
**இழிவு கொண்ட மனித ரென்பது**
**இந்தி யாவில் இல்லையே;**
**வாழி கல்வி செல்வம் எய்தி**
**மனம கிழ்ந்து கூடியே**
**மனிதர் யாரும் ஒருநிகர்**
**சமானமாக வாழ்வமே!**

**– பாரதியார்**

# சங்ககாலத் தோல்பொருட்கள் கண்டுபிடிப்பு

கடலூர் மாவட்டம் நெல்லிக்குப்பம் அருகில் மாளிகைமேடு என்ற சிற்றூரில் தமிழக அரசும் தொல்லியல் துறை கடந்த மூன்று மாதங்களாக அகழாய்வுப் பணியினை மேற்கொண்டுள்ளது. அவ்வகழாய்வில் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த தொல்பொருட்கள் பல கிடைத்துள்ளன. அவற்றுள் சங்ககாலப் பண்பாட்டுப் பொருள்களோடு அக்காலத்திலேயே இந்தியாவின் பிற பகுதிகளோடும். ரோம் நாட்டுடனும் தமிழகத்துக்கு இருந்த பண்பாட்டு வணிகத் தொடர்பினை உறுதி செய்யும் வகையில் பல்வகையான வெளிநாட்டு மட்பாண்டங்கள் கிடைத்துள்ளன.

ரோம் நாட்டைச் சேர்ந்த அரிட்டைன், ரௌலட்டட் வகை மட்பாண்டங்களும், அதே கால கட்டத்தினைச் சேர்ந்த தமிழகத்துக் கருப்பு, சிவப்பு மட்பாண்டங்களும் கிடைத்துள்ளன. சிறப்பாக பண்டைத் தமிழ் எழுத்துகள் (தமிழ்) பொறிக்கப்பட்ட சிவப்பு மட்பாண்டங்ளும், கோழி உருவம் பொறித்த ரௌலட்டட் பானைகளும், கீறல் குறியீடுகள் பொறிக்கப்பட்ட பானைகளும் குறிப்பிடத்தக்கவை. மௌரியர் காலத்தைச் சார்ந்ததாகக் கருதப்படும் பளபளப்பான கருப்பு வண்ண மெருகூட்டப்பட்ட பானை ஓடும் கிடைத்துள்ளது. இவை யாவும் கி.மு. மூன்றாம் நூற்றாண்டைச் சார்ந்த பண்பாட்டிற்குரிய மண் அடுக்குகளில் கண்டறியப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

மேற்குறிப்பிட்ட தொல்பொருட்களேயன்றி, செவ்வக வடிவிலான யானை உருவம் பொறிக்கப்பட்ட செப்புக்காசு ஒன்றும், பெண்கள் காலில் அணியப்படும் தண்டை ஒன்றும், பல்வகையான மணிகள், மான்கொம்பு, சுடுமண்ணால் ஆன தாயக்கட்டை, சுடுமண்ணால் ஆன தக்களி மற்றும் குழந்தைகள் விளையாட்டுக்குப் பயன்படுத்தப்பட்ட வட்டச்சில்லுகள், புகைப்பான்கள், துளையிடப்பட்ட கூரையோடுகள், சுடுமண் அகல் விளக்கு, சுடுமண் காதணிகள் ஆகியனவும் கிடைத்துள்ளன. இவ்வகழ் ஆய்வின் மற்றொரு சிறப்பான கண்டுபிடிப்பாக பருத்தி நூல் திரள் கிடைத்துள்ளதைக் குறிப்பிடலாம். இவ்வகை நூல்கள் தமிழகத்து அகழாய்வுகளில் சிலவிடங்களிலேயே கிடைத்துள்ளன.



அக்காலத்திலேயே நூல் நூற்றலும், நெசவுத் தொழிலும் நடைபெற்றன என இவற்றிலிருந்து நன்கு அறியலாம்.

மேலும் இங்கு அகழ்ந் தெடுக்கப்பட்ட பகுதிகளில் பண்டைய கால கட்டங்களின் அடிப்பகுதிகள் கிடைத்துள்ளன. அவற்றில் ஒன்றினில் தரைப்பகுதி பொடி செங்கல்லோடு சுண்ணாம்பு கலந்து 5 செ.மீ. கனமுடையதாக அமைக்கப் பெற்றுள்ளது.

★ ★ ★

# அரசு ஆணைகள்

**கூட்டுறவு – சோதனை முறை விரிவான பயிர் ஈட்டுறுதித் திட்டம் – 1997–98 ராபி பருவத்தில் திருவாரூர் மற்றும் நாகை மாவட்டங்களில் செயலாக்கப்பட்டது – பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஈட்டுறுதி ரூ.4,42,77,521 – ஒப்பளிப்பு – ஆணையிடப்படுகிறது.**

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (சிஜி2) துறை

அரசு ஆணை (நிலை) எண்.37

நாள் : 03.03.2000

படிக்க :

1. அரசு ஆணை (நிலை) எண். 157, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (சிஜி2) துறை, நாள் 17.8.98
2. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கடிதம் எண்.ந.க. 100668/99/பாசு1, நாள் 13.7.99 மற்றும் 8.12.99

ஆணை :

1997–98–ஆம் ஆண்டு ராபி பருவக் காலத்தில் "சோதனைமுறை விரிவான பயிர் ஈட்டுறுதித் திட்டம்" இம்மாநிலத்தில் உள்ள திருவாரூர் மற்றும் நாகப்பட்டிணம் மாவட்டங்களில் அறிக்கையிடப்பட்ட 59 வட்டங்களில் விவசாயிகளால் பயிர் செய்யப்பட்ட நெல், சிறுதானியங்கள், பருப்பு மற்றும் எண்ணெய் வித்துக்கள் போன்ற பயிர்களுக்குச் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் இவ்வட்டாரங்களில் உள்ள பயிர்க்கடன் பெற்ற மற்றும் கடன் பெறாத சிறு மற்றும் குறு விவசாயிகளால் செலுத்தப்படவேண்டிய ஈட்டுறுதிக் கட்டணத் தொகை முழுவதையும் மத்திய அரசும் மாநில அரசும் 8:2 விகிதாச்சாரத்தில் ஏற்க வேண்டும். அதேபோல் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய ஈட்டுறுதித் தொகை (Indemnity)க்காகும் செலவினத்தையும் மத்திய மாநில அரசுகள் 8:2 என்ற விகிதாசாரத்தில் ஏற்க வேண்டும்.

2. இத்திட்டத்தின் கீழ், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் விவசாயிகளின் ஈட்டுறுதிக் கட்டண மானியத்தில் மாநில அரசின் பங்காக ரூ.58 இலட்சத்தினை வழங்கும்படி கருத்துரு அனுப்பியிருந்தார். அக்கருத்துருவை ஆய்வு செய்தபின், 17.8.98 நாளிட்ட அரசாணை (நிலை) எண்.157–ல் ரூ.58 இலட்சத்தினை தமிழ்நாடு பயிர் ஈட்டுறுதி நிதிக்கு வழங்கி ஆணை வெளியிடப்பட்டது.

3. திருவாரூர் மற்றும் நாகப்பட்டிணம் மாவட்டங்களில் உள்ள 4,02,814 விவசாயிகள் இத்திட்டத்தில் பங்குபெறுவார்கள் என மத்திய அரசு எதிர்பார்த்ததன் அடிப்படையில், மாநில அரசின் பங்காக ரூ.58 இலட்சம் கோரப்பட்டது. என்றும், எனினும் இத்திட்டத்தில் 1,86,699 விவசாயிகள் மட்டுமே பங்கேற்றனர் என்று இந்திய பொதுக் காப்பீட்டுக் கழகம் தனது 3.9.98 நாளிட்ட கடித எண்.532/98–இல் தெரிவித்தது என்று கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் தனது 13.7.99 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்திருந்தார். எனவே, மாநில அரசின் பங்கு மானியத் தொகை ரூ.27 இலட்சமாக கணக்கிடப்பட்டு அத்தொகை அரசால் வழங்கப்பட்ட ரூ.58 இலட்சத்திலிருந்து இந்திய பொது காப்பீட்டுக் கழகத்திற்குப் பதிவாளரால் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள ரூபாய் 31 இலட்சம் தமிழ்நாடு பயிர் ஈட்டுறுதி நிதிக் கணக்கில் தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கியில் செலுத்தப்பட்டுள்ளது என்று கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் தெரிவித்திருந்தார்.

4. மத்திய அரசு ராபி 1997–98 பருவத்திற்கு மொத்த ஈட்டுறுதிக் கட்டணமாக ரூ.23,68,87,606.66–ஐ நிர்ணயித்துள்ளது என்றும், இதில் மாநில அரசின் 20 சதவீத பங்கு ரூ.4,73,77,521.33 என்றும், எனினும் தற்போது ஏற்கெனவே தமிழ்நாடு பயிர் பாதுகாப்பு நிதியில் ரூ.31 இலட்சம் இருப்பு உள்ளதால், அத்தொகையினைக் கழித்துவிட்டு ரூ.4,42,77,521.33 (ரூபாய் நான்கு கோடியே நாற்பத்திரண்டு இலட்சத்து எழுபத்தியேழாயிரத்து ஐநூற்று இருபத்தோரு ரூபாய், முப்பத்து மூன்று பைசா மட்டும்) தமிழ்நாடு மாநில பயிர் பாதுகாப்பு நிதிக்கு வழங்கிடுமாறு கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் தமது 13.7.99 நாளிட்ட கடிதத்தில் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

5. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கருத்துருவை அரசு நன்கு பரிசீலித்து அதனை ஏற்றுக்கொண்டது. அதன்படி, ராபி 1997–98 பயிர் பருவத்தில் சோதனை முறை விரிவான பயிர் ஈட்டுறுதித் திட்டம் திருவாரூர் மற்றும் நாகப்பட்டிணம் மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டதால் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு ஈட்டுறுதி வழங்கிட மாநில அரசின் பங்காக தமிழ்நாடு பயிர் பாதுகாப்பு நிதிக்கு ரூ.4,42,77,521 (ரூபாய் நான்கு கோடியே நாற்பத்தியிரண்டு இலட்சத்து எழுபத்தியேழாயிரத்து ஐநூற்று இருபத்து ஒன்று மட்டும்) அனுமதித்து ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

6. மேலே பத்தி 5–இல் அனுமதிக்கப்பட்டுள்ள இச்செலவினை "2401–00 பயிர் வளர்ப்பு – 110 பயிர்க்காப்புறுதி – ஒன்பதாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் – II மாநிலத்திட்டம் – J.B.தமிழ்நாடு பயிர்க்காப்புறுதி நிதிக்கு பங்குத் தொகை – 10 பங்குத் தொகை" (கு.தொ.கு. 2401.00.110.J.B. 1006) என்ற கணக்குத் தலைப்பில் பற்று வைக்கலாம்.

7. இத்தலைப்பின் கீழ் 1999–2000 வரவு செலவித் திட்டத்தில் அடையாள நிதி ஒதுக்கமாக ரூ.1000 மட்டும் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. எனவே, இச்செலவினத்தை 1999–2000–ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடு/இறுதி திருத்த ஒதுக்கீட்டில் சேர்க்கவும், சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெற, இதனை துணை மதிப்பீட்டில் (Supplementary Estimate) சேர்க்கவும் உரிய செயற்குறிப்புகளை நிதித்துறைக்கு அனுப்புமாறு கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. மேலும் இந்நிதியினை சென்னை கிழக்கு சம்பள கணக்கு அலுவலகத்தின் மூலமாக பெற்று தமிழ்நாடு பயிர் பாதுகாப்பு நிதியின் கணக்கில் சேர்க்க கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அலவலகத்தில உள்ள இணைப்பதிவாளருக்கு (செறிவு, வேளாண்மைப் பகுதித் திட்டம் ) அதிகாரம் வழங்கப்படுகிறது.

9. இந்த அரசாணை நிதித்துறையின் 03.03.2000–ஆம் நாளிட்ட அ.சா.கு,எண்.18257/கூஉ (ம)நு.பா./2000–1ன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

– எல்.கே.திரிபாதி
அரசுச் செயலாளர்

---

2000–2001–ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை – மாண்புமிகு முதலமைச்சரின் மீனவர் நலத்திட்ட அறிவிப்புகள் – தமிழ்நாட்டில் 10 இடங்களில் மீனவர் அங்காடிகள் அமைத்தல் – ரூ.182 இலட்சம் சிறப்பு நிதி ஒதுக்கீடு – செலவின ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

கால்நடை பராமரிப்பு (ம) மீன்வளத் (மீன்6) துறை

அரசு ஆணை (நிலை) எண்.102

நாள் : 26.6.2000

படிக்க :

1. அரசு நேர்முகக் கடித எண்.4663/மீன்6/2000–1, கால்நடை பராமரிப்பு (ம) மீன்வளத் துறை, நாள் 29.3.2000

2. மீன்துறை இயக்குநர் கடித எண்.ஆர்1/13796/2000, நாள் 22.4.2000, 8.5.2000, 9.5.2000 மற்றும் 31.5.2000

3. அரசு நேர்முகக் கடித எண்.21662/எஸ்.ஜி.எஸ்.ஒய்/2000 ஊரக வளர்ச்சித்துறை, நாள் 13.6.2000 மத்திய அரசுக்கு முகவரியிட்டது.

ஆணை :

24.3.2000 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2000–2001–ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தை சட்டமன்றப் பேரவையின் முன் வைத்து உரையாற்றும் பொழுது மீனவர்கள், மீன்களை விற்பதற்குப்படும் சிரமங்களை நீக்குவதற்கும் சுகாதாரமான முறையில் விற்பதற்கான வசதிகளை ஏற்படுத்துவதற்கும், மீனவர் அங்காடி தமிழகத்தில் முதற்கட்டமாக 10 இடங்களில் அமைக்கப்படும் என்றும் நவீன வசதிகள், குடிநீர் மற்றும் கழிப்பறை கொண்ட விற்பனைக் கூடங்களாக அவை அமைக்கப்படும் என்றும் மீன்கள் தரமாகவும், கெடாமலும் விற்பதற்கு வசதியாக ஒட்டு மொத்த ஏலம் நடக்கும் இடங்களில் ஏலக்கூடமும் (Auction Hall) உலர்களமும் (Drying Yard) அமைத்துத் தரப்படும் என்றும் அறிவித்தார்கள்.

2. இவ்வறிவிப்பினைச் செயலாக்கும் பொருட்டு, மீன்துறை இயக்குநர், மண்டல மீன்துறை உதவி இயக்குநர்கள், மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள், மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் முக்கியமானவர்களை அழைத்து கூட்டம் நடத்தியும், அங்காடி அமையும் இடம் அங்காடிக்கும் மீன்பிடி கிராமங்களுக்கும் இடையே உள்ள தூரம் மற்றும் விற்கப்படவேண்டிய மீனின் அளவு ஆகியவற்றைக் கணக்கிட்டும் கீழ்க்கண்டுள்ள 10 இடங்களில் மீனவர் அங்காடிகள் அமைக்க ரூ.182 இலட்சத்திற்குத் திட்ட மதிப்பீடு தயாரித்து அரசிற்கு அனுப்பியுள்ளார்.

| வ.எண். | மாவட்டம் | அங்காடி அமையும் இடம் |
|---|---|---|
| 1. | சென்னை | இராயபுரம் |
| 2. | காஞ்சிபுரம் | தாம்பரம் |
| 3. | கடலூர் | கடலூர் பழைய நகரம் |
| 4. | நாகப்பட்டினம் | நாகப்பட்டினம் |
| 5. | தஞ்சாவூர் | பட்டுக்கோட்டை |
| 6. | புதுக்கோட்டை | அறந்தாங்கி |
| 7. | இராமநாதபுரம் | இராமநாதபுரம் |
| 8. | திருநெல்வேலி | வள்ளியூர் |
| 9. | தூத்துக்குடி | தூத்துக்குடி |
| 10. | கன்னியாகுமரி | மார்த்தாண்டம் |

3. சுகாதாரமான முறையில் 50 கடைகளோடு, மீனவர் அங்காடி ஒன்று அமைக்க 15 சென்ட் நிலமும், உலர்களம் மற்றும் ஏலக்கூடம் அமைத்திட 4 சென்ட் வீதம் 8 சென்ட் நிலமும் தேவைப்படும் எனவும், மீனவர் அங்காடியில் 2 டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதன வசதி அமைக்கப்படவுள்ளது எனவும் மீன்துறை இயக்குநர் அரசிற்குத் தெரிவித்துள்ளார். இத்திட்டத்திற்கான விரிவான திட்ட மதிப்பீட்டினையும் மீனவர் அங்காடியின் வடிவமைப்பினையும் மீன்துறை இயக்குநர் அனுப்பியுள்ளார். இத்திட்டத்திற்கான செலவினமான ரூ.182 இலட்சத்தினை ஊரக வளர்ச்சி முகமையிலிருந்து பெற்றுத்தர ஏற்பாடு செய்திடவும், இதற்கு காலதாமதமாகும் எனில் உடனடியாக இப்பணியினைத் துவக்கிட ஏதுவாக ரூ.182 இலட்சத்திற்கு சிறப்பு நிதி ஒதுக்கீடு பெற்றுத் தந்திடுமாறும் மீன்துறை இயக்குநர் அரசினை கோரியுள்ளார்.

4. மீன்துறை இயக்குநரின் செயற்குறிப்பு அரசினால் நன்கு பரிசீலிக்கப்பட்டது. மீன்துறை இயக்குநர் தமது 9.5.2000 மற்றும் 31.5.2000 நாளிட்ட கடிதங்களில் அரசுக்கு அனுப்பிய திட்ட செயலாக்க அறிக்கை மற்றும் மீனவர் அங்காடியின் வடிவமைப்பு ஆகியவற்றிற்கு அரசு ஒப்புதல் அளிக்கிறது.

5. மேலும், தமிழ்நாட்டில் 10 இடங்களில் மீனவர் அங்காடிகளும், 9 இடங்களில் ஏலக்கூடம் மற்றும் உலர்களம் அமைக்கவும் தேவைப்படும் செலவினமான ரூ.182 இலட்சத்தினை ஊரக வளர்ச்சித் திட்டமான சுதந்திரப் பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் (SGSY) சிறப்புத் திட்டத்தில் ஏற்படுத்த திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் நிதி ஒதுக்கீடு பெற ஊரக வளர்ச்சித் துறையால் தனியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

6. மேற்கண்ட சூழ்நிலையில், மத்திய அரசின் நிதி ஒதுக்கீடு பெற காலதாமதம் ஏற்படும் என்பதாலும், மீனவர் அங்காடி அமைக்கும் திட்டத்தின் செயல்பாட்டின் தாமதத்தை தவிர்க்க வேண்டியும், இணைப்பில் கண்டுள்ளவாறு 10 இடங்களில் மீனவர் அங்காடிகளும், 9 இடங்களில் ஏலக்கூடம் மற்றும் உலர்களம் அமைக்கவும் (சென்னை இராயபுரம் தவிர) மத்திய அரசின் நிதி ஒதுக்கீட்டினை எதிர்நோக்கி சிறப்பு நிதி ஒதுக்கீடாக ரூ.182 இலட்சத்திற்கு செலவின ஒப்பளிப்பும், (ரூபாய் ஒரு கோடியே எண்பத்து இரண்டு இலட்சம் மட்டும்) நிர்வாக ஒப்புதல் அளித்தும் அரசு இவண் ஆணையிடுகிறது.

7. இச்செலவினம் ஒரு புதுப்பணி குறித்த செலவினமாகும். காலப்போக்கில் இதற்கு சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் பெறப்படும். சட்டமன்ற பேரவையின் ஒப்புதலை எதிர்பார்த்து இச்செலவினத்தை எதிர்பாரா செலவி நிதியிலிருந்து முன் பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வ.செ.பொ.1) துறைக்கு தேவையான விண்ணப்பப் படிவத்தில் அரசாணையின் நகலுடன் அனுப்பி வைக்குமாறு மீன்துறை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்.

8. மேலே பத்தி 4–இல் ஒப்புதலளிக்கப்பட்ட மீனவர் அங்காடிகளின் கட்டுமானப் பணிகளை சென்னை மீன்பிடி திட்ட வட்ட கண்காணிப்பு பொறியாளர் மேற்கொள்வார். மீன்துறை இயக்குநர் மேலே பத்தி 6–இல் ஒப்பளிக்கப்பட்டள்ள தொகையினைப் பெற்று சென்னை மீன்பிடி திட்ட வட்ட கண்காணிப்பு பொறியாளருக்கு வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. மேலே பத்தி 6–இல் ஒப்பளிக்கப்பட்டச் செலவினத்தினை கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கலாம் –

"4405, மீனளம் குறித்த மூலதனச் செலவு – 105. பதப்படுத்துதல், பாதுகாத்தல், விற்பனைச் செய்தல். ஒன்பதாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் – II. மாநிலத்திட்டம் – JF. தமிழ்நாட்டில் மீனவ அங்காடிகள் கட்டுதல் – 16. பெரும்பணிகள்" (த.தொ.கு.எண். 4405.00.105.JF.1609)

10. மேற்சொன்ன புதிய கணக்குத் தலைப்பிற்கு மீன்துறை இயக்குநர் மதிப்பீட்டு, கணக்கு நேரமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரி ஆவார்.

11. கணக்குகளில் மேற்சொன்ன புதிய கணக்கு தலைப்பினைத் தொடங்குமாறு சம்பளக் கணக்கு அலவலர் / கருவூல அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

12. இவ்வாணை நிதித்துறையின் ஒத்திகையோடு வெளியிடப்படுகிறது. (நிதித்துறை அ.சா.கு.எண்.47907/ காபம்/2000 நாள் 26.6.2000).

(ஆளுநரின் ஆணைப்படி)

– மோகன் வர்கீஸ் சுங்கத்,
அரசுச் செயலாளர்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : க.முத்துசாமி, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை – தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 5368926/5368927/5364906 ஃபேக்ஸ் : 5368927


இந்தக் கவலை..
இனி இல்லை..

Licence No.TN/MS/(C)/PP-23.

# தமிழரசு

